KALKI
16.1.2005
ரூ.6.00

கல்கி



குஷி வந்தா... குத்துவேன்!

– ஜாலி விக்ரம்!

குஷி ஸ்பெஷல்!
அதிக பக்கங்கள்



புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்
வானவில்லில் நூலெடுத்து
தேவதைகள் நெய்த சேலை
சாரதா'ஸ் பட்டுச் சேலை..!
சாரதா'ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங்,827,மவுண்ட்ரோடு,சென்னை-2,போன்:28521177.



ஆசிரியர் பக்கம்

இத்தனை பெரிய துயரம் நேர்ந்துள்ளதே... 'குஷி ஸ்பெஷல்' கல்கிக்குத் தேவையா...? என்று புருவம் நெறித்தும் சூள் கொட்டியும் வாசகர்கள் கேட்கக்கூடும்.

இயற்கைச் சீற்றங்களிலிருந்து மீண்டு, மனிதன் புனர்வாழ்வு அமைத்துக் கொள்வதும் இயற்கை தான். 'வாழ வேண்டும்' என்ற அவனது துடிப்பு மட்டுமே இதற்குக் காரணம் அல்ல... பிறரை வாழ வைக்க வேண்டும் என்ற மனிதாபிமானமும், அதைவிட முக்கிய மான காரணம். அத்தகைய மனிதாபி மானிகள் சிலரையும் இந்த இதழில் பார்ப்பீர்கள்.

இந்தியன் எக்ஸ்பிரஸில் ரேணுகா நாராயணன் எடுத்தெழுதிய இந்த ஜப்பானிய கிராமிய கதையைப் படியுங்கள்:

இனி ஒன்றுதான் இரைச்சலா?

மலையுச்சியில் வெயில் காய்ந்து கொண்டிருந்தது. சிடுசிடு கிழவர் தமது குடிசை வாசலில் உட்கார்ந்து காற்று வாங்கினார். மலையுச்சி யிலிருந்து கடல் தெரிந்தது. தூரத்துக் கடற்கரை கிராமம். புள்ளிகளாய்க் குடிசை வீடுகள்... அவற்றில் வசித்த அச்சுப் பிச்சு மனிதர்களிடமிருந்து விலகி, தனித்து வாழ்வது கிழவருக்குத் திருப்தி யாயிருந்தது.

ஏகாந்தமான வாழ்க்கை. பாட்டுக்குக் குருவிகள்; பசிக்குச் சில பழ மரங்கள்; மலைச் சரிவைச் சமன்படுத்தி பயிர் செய்த நெல். ஒரு மாறுதலுக்குப் பாட்டுக் குருவியையும் பிடித்துச் சமைத்துத் தின்பதுண்டு. மலைச் சுனை நீரில் மின்னும் மீன்களையும் பிடிப்பதுண்டு. தானே நெய்ததை உடுத்தி, தானே சமைத்து, தான் மட்டுமே மலைக்காற்றை அனுப வித்து...

பேச்சுத் துணைக்கு ஒரு ஜீவன் கூட இல்லாதது பெரிய குறையாகத் தெரியவில்லை. 'அப்படியே இருந் தாலும் என்னத்தைப் பேசிக் கிழித்துவிடப் போகிறார்கள்...? வெறும் வம்பும் தும்பும் அசட்டுச் சிரிப்பும் வறட்டு ஜம்பமும்தான் வெளிப்படும்... இதோ இந்தக்





கணம் அழகானது - கடலைப் பார்க்க உட்கார்ந்து சும்மா இருப்பது சுகம்...'

கிழவரின் சிந்தனை கலைந்தது.

'என்ன இது... தூரத்துக் கடலில், கரையிலிருந்து தள்ளி ஒரு புள்ளியில் புதிதாகப் பாறைகள் முளைத்துள்ளனவே...?'

சிடு சிடு தாத்தாவின் மூளையில் மின்னல் வெட்டியது.

"பேராண்டி! முன்னொரு சமயம் இந்த சமுத்திரம் வற்றின மாதிரி தெரிஞ்சு, புதுப் புதுப் பாறைகள் கண்ணுக்குத் தெரிய ஆரம்பிச்சுதுடா! அப்புறம் ஒரு அலை அடிச்சுது பாரு... அதிலே ஊரே நாசமாச்சு. தப்பிச்சுப் பிழைச்ச சொற்ப ஜனங்குதான் இன்னிக்கு இருக்கோம்... கடல் பின் வாங்கினா நல்லதுக்கில்லே..."

- சின்னப் பயலாக இருந்தபோது தாத்தாவின் தாத்தா எச்சரித்திருந்தார். அந்த எச்சரிக்கை மூளையில் மீண்டு வந்தது. கூடவே இன்னொரு மின்னலும் வெட்டியது. அன்றைய தினம் கடற்கரைத் திருவிழா... கிராமமே அலையோரத்தில் கூடி ஆடிப் பாடிக் கொண்டிருக்கும்! அலை கொந்தளித்தால்... அத்தனை பேருமே... ஐய்யோ...!

மலைப் பாதையில் இறங்கிச் செல்வதற்குள் கடல் தன் கைவரிசையைக் காட்டிவிடக் கூடும். சிடு சிடு தாத்தா தன் குணத்தை மறந்தார்; தன் கோபத்தைத் துறந்தார்... குஞ்சு - குளுவான்களுடன் கடற்கரையில் குழுமிய கூட்டத்தைக் காப்பாற்றும் ஒரே முனைப்புதான்... மறுபடியும் மூளையில் மின்வெட்டு! தமது ஓலைக் குடிசைக்குத் தீ வைத்தார்!

தூரத்துக் கடற்ரையில் குழுமியிருந்த கிராம மக்கள், மலையுச்சியில் குடிசை பற்றி எரிவதைப் பார்த்தனர். கிழவருக்கு ஆபத்து என்றதும் கேளிக்கை, திருவிழா, கிழவரின்

சிடுசிடுப்பு அனைத்தையும் மறந்து, பெண்டு பிள்ளைகளுடன் மலையுச்சிக்கு ஓடினர், கிழவரைக் காப்பாற்ற.

அத்தனை பேரும் மலையுச்சியை அடைந்ததுதான் தாமதம்... சுனாமி பேரலை ஒன்று கடற்கரையையும் அதையொட்டிய கிராமத்தையும் தாக்கி தரைமட்டமாக்கியது! அத்தனை மக்களும் உயிர் பிழைத்தார்கள்.

- இந்தக் கதையைப் படித்ததும் குஷி பிறக்கவில்லை...? இந்தோனேஷியா, தாய்லாந்து, மாலத்தீவு, இலங்கை, தென்னிந்தியா என்று சமீபத்தில் சுனாமி தாக்கிய பகுதிகள் எல்லாமே, இது போன்ற மானுடச் சிறப்பைப் பறைசாற்றும் கதைகளுக்கும்கூட களமாக அமைந்திருக்கலாம் அல்லவா!

○



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு



கலக்கிட்டாங்க

கல்கி இணைந்து வழங்கிய தங்க நகை பரிசுப் போட்டி முடிவு!


'**க**லக்கப் போவது யாரு?'ன்னு பம்பர் பரிசுப் போட்டி அறிவிச்சாலுட அறிவிச்சோம்... வந்து குவிஞ்ச கூப்பன்களைப் பார்த்து கலகலத்துப் போயிட்டோம்! காமெடி கலக்கல்ன உடனே நிறையப் பேர் காமெடி நட்சத்திரங்களைக் குறிப்பிட்டிருந்தாங்க. ஆனாலும் பலர் சரியா யூகிச்சு எழுதியிருந்தாங்க.

'கல்கி ஏன் பிடிச்சிருக்கு'ன்னு கேட்டதுக்கு வந்த கவிதைத்தனமான பதில்கள், நீண்ட கால வாசகர்களின் பாராட்டுகள், வர்ணனைகள், இனிப்பும் - துவர்ப்பும் - காரமுமான கமெண்ட்டுகள், வேண்டுகோள்கள், எல்லாத்தையும் நீந்திக் கரை சேர்றதுக்குள்ள திணறித்தான் போயிட்டோம்.

போட்டியில் பங்கெடுத்துக்கிட்ட அத்தனை வாசகர்களின் ஆர்வத்துக்கும், அன்புக்கும் நன்றி! நன்றி!!

சரியாக யூகித்ததற்காகவும், தகுந்த காரணத்தைச் சுவையாக, சுருக்கமாக எழுதியதற்காகவும் பம்பர் பரிசாக VBJ தரும் ரூ.50,000 மதிப்புள்ள தங்க நகை பெறும் வாசகர்:

ஏ. முஹம்மது ஹுமாயூன்
ஜனுபா ஸ்டோர்ஸ்,
(பார்த்தாஸ் அருகில்)
692 - A, கேப் ரோடு,
நாகர்கோவில் - 629 001





'பரிசு பெறும் வாசகம்:
நான் கல்கியை விரும்பக்
காரணம்... 'நிறையவும் தருது,
நிறைவையும் தருது'

டோய்!

சிறப்புப் பரிசுகளாக போத்திஸ் வழங்கும் ரூ.2000 மதிப்புள்ள புடைவைகள் பெறும் ஐந்து வாசகர்களும் அவர்கள் எழுதிய வாசகங்களும்:



1. போ. வெங்கடலட்சுமி,
கோவில்பட்டி
'பாரம்பரியப் பண்பு பிறழாத பல்கலைப் பொக்கிஷமாய்த் திகழ்வதால்'

2. ஆர். பாலசுப்பிரமணியன்,
செங்கல்பட்டு - 1
'தடம் மாறாத தரம்!'

3. சு. இந்துமதி,
பாண்டிச்சேரி
'அனைத்துச் சுவைகளையும் அலுப்புத் தட்டாத வண்ணம் அற்புதமாக அளித்து அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் பாங்கினுக்காகவே!'

4. எஸ். பால் திருவள்ளுவன்,
மதுரை - 10
'இன்றும் அமரர் கல்கியுடன் இருப்பதைப் போன்ற உணர்வைத் தருவதால்'

5. எச். ஷேக்தாவூத்,
இராப்பட்டி
'வாசிக்க, நேசிக்க, யோசிக்க - கல்கி'

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள்!

சரி, கலகல தொடர் எழுதி கலக்கப் போற எழுத்தாளர் யாருன்னு பார்க்கணுமா?' தொடரைப் படிக்கிற ஆவல் அதிகமாகுதா? 36ம் பக்கத்துக்கு வாங்க.

அநீதி, அக்கிரமம், அநியாயம்!

(தலைப்பு தலையங்கம் மாதிரி இருக்கு என்று கருதுவோர் 'ஜஸ்ட் டூ பேட்!' என்று மாற்றி வாசிக்கவும்)

சுனாமி நிதிக்கு உதவ ஆவலோடு உடனே எல்லோரும் அனுப்பினது ஓல்ட் குளோத்ஸ்தான். ஒரு பேப்பர் விடாம அத்தனையிலயும், பிளாட்ஃபாரத்துல கடை விரிச்ச மாதிரி பழைய துணிகள் கலர் கலரா இறைஞ்சு கிடக்குறதை ஃபோட்டோ எடுத்துப் போட்டிருந்ததைப் பார்த்திருப்பீங்களே!

இதிலேருந்து என்ன தெரியுது...? அனேகமா எல்லார்கிட்டேயுமே தேவைக்கு மிக அதிகமா துணிமணி இருக்குன்னு சுமியோட சோடாபுட்டி கண்ணாடிக்கும், சின்ன மூளைக்கும் தெரியுது. அவ்வளவு 'எக்ஸ்ட்ரா' துணியும் வாங்கப்படாம இருந்திருந்தா, எத்தனை பேர் கையில எவ்வளவு பணம் மிஞ்சியிருக்கும், அதுல எவ்வளவை அவங்க சுனாமி நிவாரண நிதிக்குக் கொடுத்திருப்பாங்கன்னு இங்க்



பண்ணிப் பார்க்கறேன்.

ரீசன்டா ஹிண்டு பிஸினஸ் லைன்ல வந்த கட்டுரையைப் படிச்சதுல ஒண்ணு புரிஞ்சுது... இந்தியர்கள் தாங்கள் வாங்கும் பொருள்கள் கவர்ச்சிகரமா பேக்கேஜிங் செய்யப்பட்டிருக்கணும்னு எதிர்பார்த்தது போக, தங்களையும் அதே மாதிரி 'பாக்கேஜ்' பண்ணிக்க விரும்பறாங்க. வெறுமே நீட்டா கலர்ஃபுல்லா உடுத்தினா போதாது... உடுத்தியிருக்கிற துணிக்கு ஒரு பேரு இருக்கணும் - மிஸ்டர் அருணாசலத்தைவிட, அவர் போட்டிருக்கிற ஆலன் ஸாலி அல்லது ஆரோ ஷர்ட் மோர் இம்பார்டண்ட். அதையோ பான்டலூன் டிரவுசரையோ வாங்க, சம்பளத்துல பாதி போனாலும் பருவாயில்லை!

லண்டன் ஆக்ஸ்ஃபர்ட் தெருவுல இருக்கிற மார்க்ஸ் அண்ட் ஸ்பென்ஸர்ஸ் கடையோட கிளை இப்போ மும்பைக்கு வந்தாச்சு. இங்க துணி வாங்க வர்றவங்ககிட்டே, கடைல உள்ள சேல்ஸ் பெண்கள் பொறுமையா எடுத்துச் சொல்றாங்களாம் - "லண்டன்ல இருக்கிற அதே டிசைன், அதே துணிதான் இங்கேயும்... தைரியமா வாங்குங்க"ன்னு

'உள் நாட்டுடை பெருக்கி உள்ளம் மகிழ்ந்தணிய வேண்டும்'னு அந்தக் காலத்துல சுதந்திரப் போராட்டத்தப்போ, ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் பாடினதா எங்க பாட்டி சொல்லிக் கேட்டிருக்கேன்.

இப்போல்லாம் அந்தப் பாட்டும் 'கீர்ட்'டும் மியூஸியத்துக்குத்தான்!

ஒரு சர்தார்ஜி புது மாதிரியா பிஸினஸ் பண்றார்னு கேள்விப்பட்டேன். டெல்லி, மும்பை மாதிரி அல்ட்ரா மாட் 'நகரங்கள்ல (சென்னை இந்த விஷயத்துல இன்னமும் கொஞ்சம் சோப்ளாங்கிதான்!) உள்ள ரொம்ப ஃபேஷன் பிரக்ஞையுள்ளவங்ககிட்டே இவருக்கு நல்ல கான்டாக்ட்... லண்டன் மார்க் அன்ட் ஸ்பென்ஸர்லயோ, அமெரிக்கால ஒரு எக்ஸ்க்ளூஸிவ் ஃபேஷன் ஸ்டோர்லயோ அல்லது ஸ்விட்ஸர்லாந்துல ஒரு பெர்ஃப்யூம் நிறுவனத்திலயோ மட்டுமே கிடைக்கக்கூடிய லக்ஷுரி ஐட்டம்ஸ் பட்டியலெல்லாம் படத்தோட (அதான் காடலாக்) வைச்சிருக்கார். அதைப் பார்த்தோ அல்

லது பார்க்காமலேயோ, பசையுள்ள கஸ்டமர்கள் செலக்ட் பண்ற ஐட்டம்ஸைக் குறிச்சுக்கிட்டு, நாம 12 B புடிச்சு பாண்டிபஜார் போற மாதிரி ஃப்ளைட் புடிச்சு யூ.எஸ் அல்லது யூ.கே போறார்... அந்தந்தக் கடைகளுக்குப் போய் அந்தந்த கஸ்டமர்கள் கேட்டதை லிஸ்ட்படி வாங்கி, பையில போட்டுக்கிட்டுத் திரும்பறார்.



* குவிந்து கிடக்கும் பழைய துணிகள்...



* கோன்கோனா சென்

நல்ல லாபத்துக்கு விற்கிறார். மிஸஸ் மல்ஹோத்ரா கேட்ட 'மாவ்' கலர் லிப்ஸ்டிக் இல்லையா...? அந்தக் கடையிலேருந்தே செல்போன் மூலமா மேடமைப் புடிச்சு மாற்று ஷேட் என்ன இருக்குன்னு தெரிவிச்சு, அனுமதியோட வாங்கிடறார். நாம பழைய துணிக்கு பிளாஸ்டிக் வாளி தருகிற வியாபாரிகிட்டேயெல்லாம் பேரம் பேசற மாதிரி, இந்த பாக்கியசா(ஜா)லியின் கஸ்டமர்கள் யாருமே பேரம் பேசறது கிடையாதுன்றதால, ஃப்ளைட் செலவெல்லாம் போக, ஊர் சுத்திப் பார்த்துட்டு வீட்டம்மாவுக்காகவும் ரெண்டு லிப்ஸ்டிக், மூணு பெர்ஃப்யூம் வாங்கிட்டு வர்றார் சர்தார்ஜி.

இதுவல்லவோ சுயதொழில்!

அமெரிக்கா வாழ் இந்திய இயக்குனர் ஷோனாலி போஸ் 'ஆமு'ன்னு ஒரு திரைப்படம் பண்ணியிருக்கார். இது அவரோட முதல் முயற்சி. 1984ஆம் வருஷம் இங்கே நடந்த சீக்கிய கலவரங்களை மையமா வைச்ச கதை. ரொம்பத் துணிச்சலான முயற்சின்னு டாக் இருக்கு... இதுல கோன்கோனா சென் (மிஸ்டர் அண்ட் மிஸஸ் அய்யர் புகழ்)தான் ஹீரோயின். அவரோட அம்மாவா நடிச்சிருக்கறது, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்து ஆக்டிவ் மெம்பரான பிருந்தா கராத்! ஆக்டிவிஸ்ட் ஆக்ட்ரஸ் ஆகி, தூள் கிளப்பியிருக்கார்னு நல்ல ரிப்போர்ட்ஸ். நம்ம சென்ஸார்தான் மொழியோட வீரியத்தைச் சகியாம, அஞ்சு ஆடியோ கட் கொடுத்து இந்தப் படத்துக்கு 'ஏ' முத்திரையும் குடுத்திடுச்சு.. இது ரொம்ப அநீதின்னு சினிமா ரசிகர்கள் ஃபீல் பண்றாங்க.

இன்னொரு அநீதி, அக்கிரமம், அநியாயம் கேள்விப்படறேன். இப்போல்லாம் கச்சேரி மேடையில் மிருதங்க வித்வான்கள் சில பேர் செல்போன் தூக்கிட்டு ஏறுறாங்களாம். பாடகர் அல்லது மெயின் ஆர்ட்டிஸ்ட் ஆலாபனை பண்ணும்போது, மிருதங்கக்காரருக்கு வாசிக்கிற வேலை கிடையாது. அந்த நேரத்துல ஆடியன்ஸ்ல உள்ள தங்கள் ஃப்ரெண்ட்ஸுக்கு செல்போன் பண்ணிப் பேசறாங்களாம் மிருதங்கம் ஆர்டிஸ்ட்ஸ்! பாடகருக்கு இது இன்ஸல்ட்ன்றது ஒரு பக்கம் இருக்க, கலைக்கும் ரசிகர்களுக்கும், செய்யற தொழிலுக்கும்கூட துரோகமில்லையா! இந்தப் போக்குக்குத் தீர்மானமா முற்றுப்புள்ளி வைக்க, எந்த சீனியர் முன் வருவார்...?

சாமி

தங்க நிறத்தில் டை அடிக்க அமெரிக்காவுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார் 'அந்நியன்' ஜடாமுடியில் இருந்த சீயான் விக்ரம். குழந்தைப் பருவம் தொடங்கி அவரது குஷியான தருணங்கள் பற்றிக் கேட்டதுதான் தாமதம், உற்சாகம் கொப்பளிக்க, குஷி நினைவுகளைக் கொட்டினார்...



குஷி வந்தா... குத்துவேன்!

● மூன்று வயதில் எனக்கு வீடு தான் ப்ளே ஸ்கூல்! கைக்கு எட்டுகிற பொருள்களையெல்லாம் நொடிக்குள் துவம்சம் பண்ணி விடுவேன். அதில் அப்படியொரு குஷி. 'ஒரு கயிற்றை எடுத்து பையனைக் கட்டிப் போடுங்கள்' என்று வீட்டுக்கு வருகிறவர்கள் ஐடியா கொடுப்பார்கள். அதனால் நான்கு வயது முடிவதற்குள் என்னை முதல் வகுப்பில் சேர்த்து விட்டார்கள்.

● முதல் வகுப்பு படிக்கும்போது எனக்குக் கொண்டாட்டமான விஷயம் பள்ளி விடுமுறை. ஒரு முறை கொஞ்சம் தாமதமாகப் போய்விட்டேன். பள்ளியின் மெயின்கேட்டை மூடி விட்டார்கள். பள்ளிக்குப் பக்கத்தில் இருந்த 'அத்தாச்சி வீட்டு'க்குப் போய்விட்டேன். நாள் முழுதும் அங்கே ஆட்டம். பள்ளி முடிந்து மாண வர்கள் கிளம்பும்போது, நானும் கிளம்பி வீட்டுக்கு வந்துவிட்டேன். மறுநாள் பள்ளிக்குப் போகாமல் நேரே அத்தாச்சி வீட்டுக்குப் போய்விட்டேன். இப்படியே ஒரு வாரம் தொடர்ந்து மட்டம். டீச்சரை ஏமாற்றி விட்டோம் என்று ரொம்ப சந் தோஷமாக இருந்தது. ஆனால், அம்மா விடம் மாட்டிக் கொண்டேன். 'இன்று என்ன ஹோம் ஒர்க் செய்யச் சொன்னாங்க?' என்று அம்மா கேட்க, நான் விழிக்க, பனை ஓலை விசிறியால் என் முதுகு பழுத்துவிட்டது.

● மரத்திலிருந்து விழும் அணில் குஞ்சுகள், மூஞ்சூறுக் குஞ்சுகள், காக்கை கொத்தி இறக்கை ஒடிந்து விழும் மைனா, புல்புல், தெரு நாய்க்குட்டிகள் இதற்கெல்லாம் அடைக் கலம் கொடுப்பதில் நான் பெரிய பிதா மகன். ஒரு கட்டத்தில் ஒரு குட்டி விலங் குகள் காப்பகம் போல வீடு மாறி விட்ட தால், ஏற்காடு மான்ஸ்ஃபோர்டு குருகுலப் பள்ளியில் கொண்டு போய் சேர்த்து விட்

டார்கள். அங்கேயும் எவ்வளவு உயரமான கட்டடமாக இருந்தாலும் ஏறி மைனா பிடிப்பேன். வவ்வால் கூட வளர்த்தேன். இப்போதும் வீட்டில் நிறைய புறாக்கள், நாய், பசு, ஆடு, கின்னிக் கோழிகள், கினிகள் என்று நிறைய பெட்ஸ்.



● பள்ளிப் பருவத்தில் பெட்ஸ் மீதான காதல், திடீரென்று வகுப்பு டீச்சர் மீது திசை திரும்பியது. அப்படியொரு ஈர்ப்பு ஏன் என்றே தெரியாது. டீச்சரின் பேச்சு, அவரது குரல், நளினம், அவர் காதில்



அணிந்திருக்கும் பெரிய வளையம் எல்லாமே ஏதோ கதை சொல்லும். அவர் சின்ட்ரெல்லா கதை சொல்லும்போது அது அவர்தானோ என்று தோன்றும். எனது டீச்சர் ஓர் ஆங்கிலோ இந்தியன். அவருக்கு இங்கிலாந்திலிருந்து ஒரு வெள்ளைக்கார மாப்பிள்ளை கிடைத்துவிட, எனக்கு மனசொடிந்து போய்விட்டது. "பசங்களா, எனக்குக் கல்யாணம். நான் பதினைந்து நாள் லீவு"

என் காதல்
டீச்சர்
மீது திசை
திரும்பியது...
அவரது காது
வளையம்கூட
எனக்குக்
கதை சொல்லும்!

–ஜாலி விக்ரம்!

என்று சொன்னார். கடவுளே! இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது என்று வேண்டிக் கொண்டேன். எனது பிரார்த்தனைக்குக் கடவுள் செவி சாய்க்கவில்லை.

● எட்டாம் வகுப்பை எட்டியபோது நடிப்பின் மீது காதல் வந்துவிட்டது. ஒவ்வொரு நாடகத்திலும் ஒரு முக்கியப் பாத்திரம் எனக்காகக் காத்திருக்கும். நடிப்பில் ஈடுபாடு வந்த பிறகு முதல் ஐந்து ரேங்கில் வந்து கொண்டிருந்த நான், நாற்பதாவது ரேங்குக்குப் போய் விட்டேன். நாடக ஒத்திகை என்றால் குஷியோ குஷி.

● காதல் கடிதம் எழுத வேண்டும். அதை அவளிடம் எப்படியாவது கொடுத்துவிட வேண்டும் என்று துடித்தது



பத்தாம் வகுப்பு படிக்கும்போது. ஏற்காட்டில் எங்கள் பள்ளிக்கு அருகிலேயே பெண்கள் கான்வெண்ட். பரட்டைத் தலை, பல்லுக்கு கிளிப், கண்ணுக்குச் சோடா புட்டி என்று அசல் கோமாளி போன்ற ஒரு பெண்ணை தினசரி பார்ப்பேன். அரையாண்டுத் தேர்வு முடிந்து இருபது நாட்கள் நீண்ட விடுப்பு. மீண்டும் பள்ளி திறந்து, அந்த ஜோக்கர் பெண்ணை யதேச்சையாகப் பார்க்க நேர்ந்தபோது பெரிய அதிர்ச்சி. தலையை பாப்வெட்டி, கண்ணாடிக்குப் பதிலாக கான்டாக்ட் லென்ஸ் அணிந்து, பல் சரியாகி, தேவதை மாதிரி வந்து நின்றாள். கொஞ்ச நாள் எனக்கு பூமியில் நடக்கிற மாதிரியே தெரியவில்லை. அவளுக்குத் தத்துப்பித்தென்று நான் எழுதிய காதல் கடிதத்துக்கு வந்த பதில் "Iam interested in study"

● அதன் பிறகு லயோலா கல்லூரியில் படிக்கும்போது, பிரிட்டிஷ் கவுன்சில் நடத்திய தியேட்டர் ஒர்க்ஷாப்பில் கலந்து கொண்டேன். அங்கே பிஜு தாஸ் என்ற பெண்ணும் நானும் ஒரு டீம். பெண்களிடம் பேசவே பயப்பட்டவன் நான். பிஜு சகஜமாகப் பழகியதால், அந்தக் கூச்சம் தொலைந்து போய், 'பொண்ணுங்கன்னா இவ்வளவுதானா!' என்று துணிச்சல் வந்தது. ரொம்பவே குஷி நிரம்பிய நாட்கள் அவை. ஒர்க்ஷாப் முடியும் தருவாயில் "உனது அப்பா என்ன செய்கிறார்?" என்றேன். "போலீஸ் டி.ஐ.ஜி" என்றாள். அப்போது என் முகம் போன போக்கைப் பார்த்து அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். இப்போதுகூட அதை நினைத்தால் வயிறு கலக்கும்.

● 'சாமி'யில் போலீஸ் கமிஷனராக நடிக்கும்போது திருநெல்வேலியில் ஒரே கலாட்டாதான். போலீஸ் ஜீப்பில் யூனிஃபார்மில் செல்லும்போது, என்னை நிஜ போலீஸ் அதிகாரி என்று நினைத்து, பல டிராஃபிக் கான்ஸ்டபிள்கள் ஓடிவந்து விறைப்பாக சல்யூட் அடிப்பார்கள். ஒரு சிக்னலில் பெல்ட்டை தளர்வாகப் போட்டிருந்த ஒரு போலீஸ்காரரைப் பார்த்து மிரட்டியதும்... "சாரி சார்" என்று மின்னல் வேகத்தில் பெல்ட்டை சரி செய்தார்.

● என்னுடன் பணிபுரியும் சக கலைஞர்களையும், ஊழியர்களையும் கலாட்டா செய்வதில் கிடைக்கும் த்ரில் ரொம்ப அலாதியானது. த்ரிஷாவுக்கு போன் செய்து "உனக்கு தேசிய விருது கிடைத்திருக்கிறது" என்று ரீல் விட்டேன். நண்பர்களை விட்டும் போன் செய்தேன். ஆனால் த்ரிஷா கெட்டிக்காரப் பெண். கண்டுபிடித்து விட்டார்.

● இப்போது 'அந்நியன்' படத்தின் நிர்வாகத் தயாரிப்பாளர் சுந்தரமூர்த்தியை இஷ்டத்துக்குக் கலாய்க்கிறோம். பத்து நிமிடம் லேட்டாகி விட்டால்கூட எனது டிரைவர் பாண்டியின் செல்லுக்குப் போன் செய்வார். நான் பாண்டியன் குரலில், "சார் இன்னும் தூங்குறார், எழுப்ப முடியாது" என்பேன். மறுமுனையில் அவர் பதறிக் கொண்டிருக்கும்போது, அவர் முதுகுப் பக்கம் நின்று அவரது தோளில் கை வைப்பேன். மனிதர் மந்திரித்து விட்ட கோழி மாதிரி ஆகிவிடுவார்.

● மறக்க முடியாத குஷிகள் நிறைய உண்டு. ஆனால் மனைவி, குழந்தைகள், எனது புறாக்களோடு வீட்டை விட்டு வெளியே வராமல், நான் முழுவதும் இருப்பதில் கிடைக்கிற குஷி எதிலும் கிடையாது. நான் குஷியாக இருக்கும் தருணங்களில், நெருங்கிய நண்பர்கள் அருகில் இருந்தால் அவர்கள் வயிற்றில் செல்லமாகக் குத்துவது எனது மேனரிஸம்.

தொகுப்பு: **ஜெய்**

படங்கள்: **சங்கர் சத்தியமூர்த்தி**

சர்ச்சைகளுக்கும் கிசுகிசுக்களுக்கும் அப்பாற்பட்ட வேலூர் ராமபத்ரனுக்கு மியூசிக் அகாடமி 'சங்கீத கலாநிதி' விருது வழங்கியிருக்கிறது. அவருடன் ஒரு குஷி சந்திப்பு.



'சர்வலகு' ராமபத்ரன்!

மிகப்பெரிய பாடகர்களான செம்மங்குடி, முசிறி போன்றவர்களுக்கு மிருதங்கம் வாசித்திருக்கிறீர்கள். இப்போது நிறைய இளைய தலைமுறைக்கு வாசித்து வருகிறீர்கள். என்ன வேறுபாடு தெரிகிறது உங்களுக்கு?

"இளைய தலைமுறையினரிடம் வித்வத் இருக்கிறது. நிறையப் பேர் புத்திசாலிகளாக இருக்கின்றனர். பழையபடி 'மெலடி'யும் இருந்தால் நன்றாக இருக்கும். ஆனால் கவலையே வேண்டாம், இளைய தலைமுறையிடம் நம் இசை பத்திரமாகவே இருக்கிறது."

உங்களை 'சர்வலகு' ராமபத்ரன் என்கிறார்களே...?

"பாட்டுக்கு இடைஞ்சல் இல்லாமல் வாசிப்பது முக்கியம். பாட்டுக்குத்தான் மிருதங்கமே தவிர, மிருதங்கத்துக்குப் பாட்டு அல்ல. உலகமே 'சர்வலகு' ரிதம் இருப்பதால்தான் ஒழுங்காக இயங்குகிறது."

தனி ஆவர்த்தனத்தில்கூட நீங்கள் அதிக நேரம் எடுத்துக் கொள்வதில்லையே...

"கச்சேரி கேட்க வருகிறவர்களைச் சோதிக்கக் கூடாது. எனக்கு லட்சணமும் தெரியும்; லட்சியமும் தெரியும். ஆனால் மேடையில் எனக்குத் தெரிந்ததையெல்லாம் காண்பித்துவிட்டுத்தான் வருவேன் என்று நேரத்தை எடுத்துக்கொண்டு கச்சேரியைக் கெடுத்துவிடக் கூடாதல்லவா? இன்னும் கொஞ்சம் கூடக் கேட்க வேண்டும் என்று ரசிகர்களுக்குத் தோன்றுகிறபோது நிறுத்திக் கொண்டுவிட வேண்டும்."

மைக்கேல் ஜாக்சன்கூட உங்கள் வாசிப்பை ரசித்தார் என்று ஒரு செய்தி உண்டே...

"ஆமாம். நான் அமெரிக்காவில் வாசித்ததைக் கேட்டுவிட்டுச் சொன்னதாகக் கூறினார்கள். ஆனால் அவர் தன்னுடைய ஃப்யூஷன் மியூசிக்கில் வாசிக்க வைக்க நினைத்தாராம். என்னைப் பொறுத்தவரை ஃப்யூஷன் கன்ஃப்யூஷன் ஆகிவிடுகிறது. ஆனால் உலக சுகாதார அமைப்பில் பணியாற்றிய சுப்பிரமணியம் என்ற ஒருவர், ஒரு டாகுமென்டரி தயாரித்திருக்கிறார். எல்லா நாடுகளிலும் காண்பிக்க வசதியாக ஃப்ரெஞ்ச், ஜெர்மன், ஜப்பானிய, ஆங்கிலம், தமிழ் மொழிகளில் எடுத்திருக்கிறார். அதில் ஜெயந்த் என்ற இளைஞரின் புல்லாங்குழலுக்கு பத்து நிமிடங்கள் வாசித்திருக்கிறேன். பத்மா சங்கரின் வயலினுக்கு பத்து நிமிடங்கள் வாசித்திருக்கிறேன். நான் சர்வலகு முப்பது நிமிடங்களுக்கு வாசித்திருக்கிறேன்."

பெண் இசைக் கலைஞர்களுக்கு மிருதங்கம் வாசிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு...

"வாசித்திருக்கிறேனே! இனிமேல் யாராவது வந்து கேட்டாலும் ஆனந்தமாக வாசிப்பேன்!"

புருவத்தை இப்படி அழகாக வில் போல் வரைந்து கொண்டிருக்கிறீர்களே?

"மேடையில் 2 - 3 மணி நேரம் உட்கார்ந்திருக்கிறோம். பிரசன்டபிள் ஆக இருக்க வேண்டுமல்லவா?"

- **சாருகேசி**

படம் : **யோகா**



கலைஞரும் கவிஞரும்...

இதுவரை கவிஞர் வைரமுத்து எழுதிய பதினாறு நூல்களை கலைஞர் தலைமை ஏற்று வெளியிட்டிருக்கிறார். ஒவ்வொரு விழாவும் மூன்று மணி நேரம் போல விஸ்தாரமாக நடைபெறுவதுதான் வழக்கம். ஆனால் கடந்த செவ்வாய்க்கிழமை, சுமார் நாற்பத்தைந்து நிமிடங்களில், கச்சிதமாய் கலைஞரை வைத்து தமது புதிய புத்தக வெளியீட்டு விழாவை நடத்தி விட்டார் வைரமுத்து.

> "என்னை நெகிழ வைக்கும் உற்சாகமான படைப்பாளி அவர்!"


"முந்தைய விழாக்களைவிட, இந்த முறை உடல் நலம் குன்றிய நிலையிலும் கலைஞர் என் புத்தகங்களை வெளியிட்டது என்னை நெகிழ வைக்கிறது" என்று சந்தோஷப்படுகிறார் வைரமுத்து.

"கலைஞரிடம் எப்போதும் ஒரு பழக்கம். புத்தக வெளியீட்டு விழாவில், கலந்து கொள்கிறபோது, புத்தகத்தை முழுமையாகப் படித்திருப்பார். பேசுகிறபோது வெளிப்படையாய்ப் பாராட்டுவார். நாசூக்காக குறைகளைச் சுட்டிக்காட்டவும் தவறமாட்டார்'' என்று கூறியவரிடம், ''அதற்காக, அவரையே தொடர்ந்து எல்லா விழாக்களுக்கும் கூப்பிட வேண்டுமா? இதன் மூலமாக உங்கள் மீது அரசியல் ரீதியான முத்திரை விழுந்துவிடக் கூடுமே?'' என்றோம்.

"தமிழ்நாட்டில் இன்றைக்கு இருக்கும் மூத்த தமிழறிஞர் கலைஞர்தான். அவருடன் உடன்பாடு கொண்டவர்களும் முரண்பாடு கொண்டவர்களும், கட்சிப் பாகுபாடுகளைக் கடந்து அவரது தமிழை மதிப்பார்கள். இன்னொரு விஷயம், என் புத்தக விழாக்களில் கலந்து கொள்கிறபோது, அவர் அரசியல் குறித்துப் பேசமாட்டார். நானும் அப்படித்தான். ஐம்பத்தேழு ஆண்டுகளாகத் தொடர்ந்து ஓர் உற்சாகமான படைப்பாளியாக அவர் விளங்குவது மகத்தானதொரு விஷயம். தொடர்ந்து அவர் என் புத்தகங்களை வெளியிடுவதற்குக் காரணம், நான் அவர்மீது கொண்ட மதிப்பும், அவர் என் மீது கொண்ட பாசமும்தான்'' என்று உருகிப் போய் பேசினார் வைரமுத்து.

விழாவில் கலைஞர், மனைவி ராஜாத்தி அம்மாள், மகள் கனிமொழி, அவரது கணவர் அரவிந்தன் என குடும்பத்துடன் கலந்து கொண்டதில் கவிஞருக்கு ஏக சந்தோஷமாம்.

- கௌதம்



அண்டிப் பிழைக்க வைக்க வேண்டாம்!

மத்திய அரசிடம் 4,800 கோடி ரூபாய் ஆபத்துதவி கோரியுள்ளார் தமிழக முதல்வர். சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் அளிப்பதற்கே இத்தொகை. இது தவிர 54,000 டன் உணவு தானியமும் வழங்கும்படி கேட்டுள்ளார்.

இந்தக் கோரிக்கையை அப்படியே நிறைவேற்றுவது மத்திய அரசுக்கு எளிதல்ல. எனினும், உரிய காலத்தில் உரிய உதவி வரும் என்று எதிர்பார்க்கலாம். ஏற்கெனவே வர ஆரம்பித்துள்ள நன்கொடைகள், பண்டங்கள் உதவியுடன் தமிழக அரசும், தன்னார்வ அமைப்புகளும் நிவாரணப் பணிகளைத் துரிதமாகத் தொடங்கி விட்டன என்பது பாராட்டுக்குரியது.


தொண்டுள்ளம் படைத்தோர், தாங்கள் ஆற்றி வரும் பணியில் இன்று இரண்டு விதமான சவால்களைச் சந்திப்பதாகக் கூறுகிறார்கள்.

முதலாவது: வந்து குவிகின்ற பல பண்டங்களை முறையாக விநியோகிக்க வழியின்றி, அவை ஆங்காங்கே திறந்த வெளியில் குவிக்கப்பட்டு வெயில் / பனியில் வீணாகின்றன, அல்லது சமூக விரோத சக்திகளால் களவாடப்படுகின்றன. மருந்து - மாத்திரைகள் போன்றவை குழந்தைகள் கைகளில் சிக்கி, அவர்களுடைய உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய நிலைமைகூட ஓரிரு இடங்களில் ஏற்பட்டுள்ளது.

இதையெல்லாம் தவிர்ப்பதற்காகத்தான் அரசு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலமாக மட்டுமே உதவிகளை அளிக்கும்படி



கல்கி



2005 ஜனவரி 16
தாரண தை 3
மலர் : 63
இதழ் : 25

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



கூறியிருக்கிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பகிர்ந்து அனுப்பும் பொருள்களை, அந்தந்த ஊர்களில் உள்ள ரௌடிகளும், இடைத்தரகர்களும், அரசியல் செல்வாக்குள்ளவர்களும் வழிமறித்துப் பறித்துக் கொள்வதாகவும், இப்படிப் பறித்துக் கொள்கிற ஒரு சிலர் மட்டுமே 'பயனடை வதாக'வும், உண்மையில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி போய்ச் சேருவதில்லை என்பதும் செய்திகள் மூலம் நமக்குத் தெரிய வருகின்றன. போதும் போதாததற்கு, சில உள்ளூர் அரசியல் வாதிகள் ஆட்சியமைப்பின் செயல்திட்டத்தில் தலையிட்டு, ஒரு பகுதிக்கு அனுப்பப்பட வேண்டிய உதவியை 'மடக்கி', ஏற்கெனவே பயனடைந்துவிட்ட வேறொரு பகுதிக்கு அனுப்பி, தங்களுக்கு அரசியல் ஆதாயம் தேடிக் கொள்கிறார்கள்! இந்தக் கொடுஞ்செயல்கள் மன்னிக்க முடியாதவை.


காவல்துறை இது போன்ற செயல்களைத் தடுத்து, ஆங்காங்கே பாதுகாப்புடன் பண்டங்கள் விநியோகிக்கப்பட உதவி வருவதாகவும், சற்றே ஆறுதல் தரும் செய்திகள் வருகின்றன.

தன்னார்வ அமைப்புகள் சந்திக்கும் இரண்டாவது பிரச்னை: பொருளும் பண்டமும் நிறைய வந்தாலும், சுகாதாரப் பணிகளில் உதவ போதுமான ஆள் பலம் இல்லை என்பதே! தொற்று நோய் பரவக்கூடிய அபாயமுள்ள, துர்நாற்றம் மிக்க, அருவருப்பூட்டும் சூழலில் எல்லோரும் துணிந்து நுழைந்துவிட மாட்டார்கள். "கிராமங்களை தத்து எடுத்துக்கொள்ள முன் வரு வோர்கூட, அந்தக் கிராமங்களை வேறு யாரேனும் சுத்தம் செய்து தந்தால்தான் பராமரிக்கத் தயாராயிருக்கிறார்கள்!" என்கிறார் களத்தில் பணியாற்றும் ஒரு தன்னார்வத் தொண்டர்.

மாணவர்களும், உடல் உரமுடன் நெஞ்சுரமும் படைத்த மக்களும் அந்தப் பணிகளுக்கு உதவ முன் வர வேண்டும்.

மிகச் சிக்கலான சவால்கள் நிறைந்த சூழ்நிலையில், ஒரு பக்கம் விவேக் ஓபராய் போன்ற தனி நபர்கள் திட்டமிட்டு அழகாகச் செயல்பட்டு வருகின்றனர். கிராம மக்கள் தாங்கள் இழந்த வீடுகளைத் தாங்களே கட்டிக் கொள்வதற்கு, உதவியும் மேற்பார்வையும் வழங்கி யிருக்கிறார் விவேக் ஓபராய்.

இதே வழிமுறையை அரசும் பின்பற்றுவதில் தவறில்லை. அரசு இயந்திரத்தைக் கொண்டே அனைத்து கிராமங்களையும் சீரமைப்பது மிகக் கடினம். மிகப் பெரிதான தொழில் - வர்த்தக தனியார் நிறுவனங்களை அணுகி, அவரவர் சக்திக்கு ஏற்ப கிராமங்களைத் தத்தெடுத்துக்



கொண்டு, மீனவக் குடியிருப்புகளை மீண்டும் கட்டித் தரும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்கலாம். அதற்குண்டான நிதியை மட்டும் அரசு தந்து விடலாம். இவ்வாறு செய்தால், இடைத்தரகர்கள், காண்டிராக்ட் பெருச்சாளிகள் போன்ற வழக்கமான இடையூறுகளைத் தவிர்த்து, பணியை விரைவாகவும் சிறப்பாகவும் முடிக்கலாம்.

சுனாமியிலிருந்து உயிர் தப்பியவர்களுக்கு, அவர்கள் இழந்த வீடுகளைக் கட்டித் தந்து, மீண்டும் அவர்கள் தங்கள் தொழிலில் ஈடுபடுவதற்கான வசதியையும் வாய்ப்பையும் ஏற்படுத்தித் தருவதுதான் வெகு முக்கியம். அரசு உதவியையோ அல்லது என்.ஜி.ஓக்களின் சேவையையோ அவர்கள் நீண்ட நாட்களுக்கு அண்டி வாழும்படி செய்யக்கூடாது. இது அரசின் சுமையை அதிகரிப்பதுடன், உதவி பெறுவோரிடம் சோம்பலை வளர்க்கும் வாய்ப்பும் இருக்கிறது.

மனிதாபிமானம், கருணை ஆகியன உயர் பண்புகள். அவற்றின் போர்வையில் அரசியல் ஆதாயம் தேடுகிற கேவலம், இன்றைக்கு நிறையவே நடந்து கொண்டிருக்கிறது. ஜெயா - சன் தொலைக்காட்சிகளுக்கிடையே நடக்கும் பாரபட்சம் மிக்க செய்தி யுத்தம், இந்தப் பிரிவைச் சேர்ந்ததே.

முதலமைச்சர் அறிவித்துள்ள புனர்வாழ்வுத் திட்டங்கள் லட்சக்கணக்கில் பண உதவி அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அநாதைக் குழந்தைகள், பேரலையால் ஊன முற்றோர், அபலைப் பெண்கள் என தனித் தனிப் பிரிவினருக்கு நீண்ட கால நோக்கில் அறிவிக்கப்பட்டுள்ள உதவிகள், நல்ல எண்ணத்தால் எழுந்தவைதான். ஆனால், எத்தனை பேருக்கு, எத்தனை ரூபாய் இறுதியில் போய்ச் சேரும் என்பது, யாருமே அவிழ்க்க முடியாத மர்ம முடிச்சு.

கல்வி அறிவோ, தன்னம்பிக்கையோ இல்லாததால், நிவாரணத் தொகையை இடைத்தரகர்கள் மூலமாகத்தான் பெற்றுக் கொள்கின்றனர் பல ஏழை மக்கள். இவர்களுக்கு முழுத் தொகையும் போய்ச் சேர்வதில்லை என்பது நாடறிந்த உண்மை.

இத்தகைய கையாடல்களுக்கு இடமளிக்காமல், அரசு உதவியும் நிவாரணமும் சென்றடையும் வகையில் திட்டங்களை விரைவாகவும் சாமர்த்தியமாகவும் நிறைவேற்ற, அரசு உடனடியாக விழிப்புக் கொள்ள வேண்டும். வரிப்பணமோ, நன்கொடையோ, மத்திய அரசின் உதவியோ, சுனாமி தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போக வேண்டுமேயொழிய, சுரண்டல் காரர்களுக்கு அல்ல!

கார்ட்டூன் ஜாலி!



மிருதங்கம் மன்னார்குடி ஈஸ்வரன்



கர்நாடக சங்கீத வித்வான்கள் மூன்று பேரைப் பார்த்து பிரபல ஓவியர்கள் வரைந்த கார்ட்டூன்கள்தான் இங்கு ஜொலிக்கின்றன. வித்வான்கள் தங்களைத் தானே கார்ட்டூன் வரைந்தால் எப்படியிருக்கும்? பார்க்க ஆசைப்படுபவர்கள் புரட்டுங்கள் பக்கம் 123...





வயலின்
பத்மா சங்கர்





பாடகி
சாருலதா மணி



பொங்கட்டும் பொங்கல்
பிறக்கட்டும் புதுவாழ்வு

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின்

பொங்கல் நல்வாழ்த்துக்கள்

அதிக பாதுகாப்பு! அதிக வட்டி!!

Period	For Deposits of less than Rs. 25 lakhs	For Senior citizens deposits of less than Rs. 25 lakhs
7 days to 14 days (*)	4.50 %	5.50 %
15 days to 45 days	4.50 %	5.50 %
46 days to 90 days	5.50 %	6.50 %
91 days to 179 days	5.75 %	6.75 %
180 days to less than 12 months	6.00 %	7.00 %
12 months to 5 years	6.50 %	7.50 %
Above 5 years	6.50 %	6.50 %
(*) For deposits of Rs.1 Lac and above		*Rate per annum*

Note : 1) The above rates are applicable for fresh deposits and renewals of maturing deposits.

2) Additional rate of 0.25% is payable for a single deposit of Rs.25 lakhs and above with a maturity period of 7 days and above and upto and inclusive of 179 days

TMB VISA
Value Increased Savings Account
(Auto Sweep Fixed Deposit)

மாலை 4.30 வரை
வங்கிச் சேவை உண்டு

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்.

பதிவு அலுவலகம் : 57, வி.இ. ரோடு, தூத்துக்குடி 628 002

Contact our nearest Branch or Visit us at www.tnmbonline.com


83 years of customer service

Customer Oriented and Committed to Excellence

பங்குச் சந்தை டிப்ஸ்



• ப.சிதம்பரம்



பட்ஜெட் பகீர்!

இந்த வாரம் பத்திரிகைகளில் மத்திய அரசின் வரவு-செலவு கணக்கு பற்றி ஒரு செய்தி வந்திருக்கிறது. 2004 ஏப்ரல் முதல் நவம்பர் வரை, எட்டு மாதக் காலத்தில் மத்திய அரசின் வருவாய் பற்றாக்குறை 73,948 கோடி ரூபாய் என்றும், இது பட்ஜெட்டில் கணக்கிடப்பட்ட தொகையில் 97 சதவிகிதத்தைத் தாண்டிவிட்டது என்றும் தெரிவித்திருக்கிறது. இந்த நிதி ஆண்டு 31 மார்ச், 2005ல் முடியும்போது, நமது வருவாய் பற்றாக்குறை ஒரு லட்சம் கோடியைத் தாண்டிவிடும் நிலைமைகூட ஏற்பட்டு விடலாம்.

இதற்கு என்ன காரணம்?


'சென்ற ஜூலை மாதம் நிதியமைச்சர் ப.சிதம்பரம், நடப்பு ஆண்டின் பட்ஜெட்டை சமர்ப்பித்தபோது, வருவாயை அதிகமாகவும், செலவைக் குறைத்தும் காட்டிவிட்டார்' என்றொரு குற்றச்சாட்டு எழுந்தது. அப்போது ப.சிதம்பரம், 'அரசுக்கு வர வேண்டிய வரி பாக்கி சுமார் 80,000 கோடி ரூபாயை மனத்தில் கொண்டு பட்ஜெட் தயாரிக்கப்பட்டதாகவும், வருமான வரி பாக்கியை வசூலிக்க எல்லா நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதாகவும்' தெரிவித்தார். எதிர்பார்த்த அளவு வரி பாக்கி வசூல் ஆகாததால்தான், அரசின் வருமானத்தில் பற்றாக்குறை அதிகரிக்கிறது என்பது உண்மையே.

ஏற்கெனவே இருந்த சுமையோடு, எக்ஸ்ட்ரா லக்கேஜாக சுனாமி பேரழிவும் சேர்ந்துகொள்ள, மத்திய அரசின் நிதி நிலைமை பாதிக்கப்படலாம். இதன் காரணமாக, வரும் பிப்ரவரி 28ம் தேதி சமர்ப்பிக்கப்படும் மத்திய பட்ஜெட்டில், கூடுதல் வரி விதிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி நேர்ந்தால், கம்பெனிகளின் லாபம் ஓரளவுக்கு பாதிக்கப்படும். அதன் எதிரொலியாக, சில கம்பெனிகளின் பங்குகளின் மதிப்பு, சற்றே குறையலாம்.

வி.கோபாலன்

இருந்தாலும் இரும்பு உற்பத்தி, மருந்து உற்பத்தி போன்ற துறைகளில் உள்ள கம்பெனிகளின் பங்குகள் விலை ஏறுவதற்கு வாய்ப்புள்ளது. இந்தத் துறைகளில் சிறப்பாகச் செயல்படும் கம்பெனிகளின் பங்குகளை வாங்கலாம்.

(அடுத்த வாரம் பார்ப்போம்)



அருள்வாக்கு

ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், 'நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய ஸஹாயம் பண்ண முடியும்?' என்று அது நினைத்ததா? அது பண்ணின சேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணிவிட்டது - ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி 'நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?' என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும், நமக்கு ஈச்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

அநாதைக் குழந்தைகளின் ஸம்ரக்ஷணை, திக்கற்ற ஏழைகளுக்கு ஸேவாஸதனம் வைப்பது, ப்ராணி வதையைத் தடுப்பது, பசு வளர்ப்பது, பசிக் கஷ்டம் யாருக்கும் வராமல் உபகரிப்பது என்றிப்படி எந்தெந்த விதத்தில் முடியுமோ, அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், காரியத்தில் காட்டினால், பரமேச்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

பணி என்றால் ஸர்வீஸ். ஸ்கூல் வைப்பது, ஆஸ்பத்திரி கட்டுவது, ஜல வஸதி பண்ணித் தருவது எல்லாம் ஸர்வீஸ்தான். நாம் ஸோஷல் ஸர்வீஸ் - ஸமூஹப் பணி என்றாலே இதுகளைத்தான் நினைக்கிறோம். ஆனால் இந்தப் பணியெல்லாம் இறைப் பணியில்



கொண்டு சேர்த்தால்தான் நிறைவுள்ளதாகும் என்று நமக்குப் புரிய வைக்கிறதற்காகத்தான் ஈச்வர ஸம்பந்தமான பணிக்கே 'திரு' என்று அடைமொழி கொடுத்து 'திருப்பணி' என்று பேர் வைத்திருக்கிறார்கள். 'திருப்பணி' என்கிற வார்த்தை, எல்லா ஸர்வீஸுக்கும் உச்சி அதுதான் என்று அர்த்தம் கொடுக்கிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

● "சுனாமி நம் தமிழ்நாட்டுக்குச் சோகமான புதிய அனுபவம். ஆனால், அன்று காலை பன்னிரண்டு மணிக்கே சன் தொலைக்காட்சியில் 'எந்த உதவியும் கிடைக்கவில்லை; அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை' என்று மக்கள் சொல்வது போல் ஒளிரப்பினார்கள். இது எந்த அளவுக்குச் சரி என்று தெரியவில்லை'' என்று நம்மிடம் வருத்தப்பட்டுச் சொன்னார் தி.மு.க கூட்டணிக் கட்சித் தலைவர் ஒருவர்.

● மத்திய இணை அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கடலூர் பகுதியில் நிவாரணப் பொருள்களை வழங்கிக் கொண்டிருந்தபோது, மாநில அதிகாரிகள் இணைந்து பணியாற்றாமல் கொஞ்சம் ஒதுங்கியே இருந்தார்களாம். அவர்களது சங்கடத்தைப் புரிந்துகொண்ட அமைச்சர், "நீங்களும் எங்களோடு இணைந்து பணிபுரிய வேண்டிய நேரம் வரக்கூடும்; என்ன புரிகிறதா! நான் ஜனாதிபதி ஆட்சியைச் சொல்கிறேன்'' என்றதும் காங்கிரஸ் தொண்டர்கள் ஆரவாரம் செய்திருக்கிறார்கள். பின்னர் அதிகாரிகள் ரகசியமாக அமைச்சரிடம் "எங்கள் நிலை இப்படித்தானிருக்கிறது'' என்று வருத்தத்துடன் சொல்லிவிட்டுச் சென்றார்களாம்.

● ராஜ் தொலைக்காட்சிக்குப் பிரச்னை மேல் பிரச்னை. ஒளிபரப்புச் சாதனங்களை இறக்குமதி செய்ததில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், அதற்கு கஸ்டம்ஸ் அதிகாரிகள் உடந்தையாக இருந்திருப்பதாகவும் சொல்லப்பட, அவர்களுக்கு ஷோ-காஸ் நோட்டீஸ் கொடுத்துவிட்டதாம் கஸ்டம்ஸ் இலாகா. "ஒரு குறிப்பிட்ட சாதனத்தை பகுதி, பகுதியாக எடுத்து வந்தால் வரி கிடையாது. அந்தத் தொலைக்காட்சி அதுபோல எடுத்து வந்து, இப்போது முழுச் சாதனமாக மாற்றியிருக்கிறது. நாங்கள் மாட்டிக் கொண்டு விட்டோம்'' என்கிறார் அதிகாரி ஒருவர்.

● சிதம்பரத்துக்கு அருகில் கிள்ளை, எம்.ஜி.ஆர் திட்டு என்று கடல் சூழ்ந்த கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டவை. வலது கம்யூனிஸ்ட் தலைவர் நல்லகண்ணு இந்தப் பகுதிகளைப் பார்வையிடச் சென்றபோது, பல ஆளும் கட்சித் தொண்டர்களும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள். நல்லகண்ணு பார்த்து விட்டுக் கிளம்பும் போது அவர்களுள் சிலர் அவரிடம் வந்து "ஆளும் கட்சித் தொண்டர்களும் ஆர்வமாய் நிவாரணப் பணிகளில் இறங்கியிருக்கிறார்கள்'' என்று பத்திரிகையாளர்களிடம் சொல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்களாம்.



• ஆகுடம்...



• ராகுலுக்கு இணையாக...

● உ.பி. அரசியலில் ராகுல்

காந்திக்கு இணையாகத் தமது மகன் அகிலேஷை உருவாக்கிக் காட்ட வேண்டும் என்பதுதான் முலாயம்சிங் யாதவ்வின் தற்போதைய அஜென்டாவாம். இதற்காக மீண்டும் ஒருமுறை உ.பி முழுவதும் சைக்கிள் பயணம் சென்று வருமாறு அன்பு உத்தரவு போட்டுள்ளாராம் முலாயம். இதற்கு காங்கிரஸ் தரப்பில் எதிர்ப்பு வரும் பட்சத்தில் அதைச்

அழகிரியின் அடுத்த இன்னிங்ஸ்!



• கோரிக்கை...



• மீண்டும்...

சமாளிக்கவே சமீப காலமாக பா.ஜ.கவினருடன் நட்பு பாராட்டி வருகிறாராம்.

• 'மும்பை எக்ஸ்பிரஸ்,' 'பெஸ்ட் ஃப்ரெண்ட்' போன்ற படங்களின் தலைப்பு மாறாமல் வருவது தங்கள் தலைமைக்கு மிகப்பெரிய இழுக்கு என்னும், தலைமையின் கண்ணசைவுக்காகக் காத்திருப்பதாகவும் பேசி வருகின்றார்களாம் டாக்டர்களின் தொண்டர்கள். ஆனால், அவர்களை தற்போதைக்கு அமைதியாக இருக்கச் சொல்லி கட்டளை வந்திருக்கிறதாம் இரு டாக்டர்களிடமிருந்தும். 'புலிகள் பதுங்குவது பாய்வதற்குத்தான்' என்று பேசி வருகிறார்கள் தொண்டர்கள்.

• தா.கி விவகாரத்தில் சிக்கி, தொண்டர்களிடமிருந்து ரொம்பவும் ஒதுங்கிப் போயிருந்த மு.க. அழகிரி, மீண்டும் மதுரையில் தமது பரிவாரங்களுடன் கோலோச்ச விரும்பினாராம். அதற்கு வசதியாக 'சுனாமி' அமைந்துவிடவே, தற்போது நிவாரண நிதி கொடுக்கும் படலத்தின் மூலம் தனது அடுத்த இன்னிங்சை அதிரடியாகத் துவக்கியுள்ளாராம். இது தளபதி ஆதரவாளர்கள் மத்தியில் இலேசான கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

• கட்சியைக் காட்டிக் கொடுத்தவர்கள் பட்டியலில் வைகோவையும் இணைத்து, சமீபத்தில் தி.மு.க மேடையொன்றில் பேசப்பட்டது 'தாயக' வட்டாரத்தில் புகைச்சலைக் கிளப்பியுள்ளதாம். இதை இப்படியே விட்டுவிடக் கூடாது என்பதில் ரொம்பவும் தெளிவாக இருக்கின்றனராம் ம.தி.மு.க தொண்டர்கள். ஆக, இனி கழக மேடைகளில் அனல் பறக்கும் என எதிர்பார்க்கலாம். ஆனால் 'புயலோ' இதுவரை வாயைக்கூடத் திறக்கவில்லையாம்.

- கௌசி, கலை

முதுபெரும் எழுத்தாளர் ஜெயகாந்தன், பல வருடங்களுக்குப் பிறகு 'ஹர ஹர சங்கர' என்கிற நாவலை எழுதி இருக்கிறார். காஞ்சி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திரர்தான் கதையின் பிரதான பாத்திரம். புத்தகம் பரபரப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் வேளையில், நாம் ஜே.கே.வை சந்தித்துப் பேசினோம்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு திடீரென்று நாவல் எழுத உங்களைத் தூண்டியது எது?

"நாட்டில் நடக்கிற நிகழ்ச்சிகள்தான் என்னை எழுதத் தூண்டுகின்றன."

கடந்த பல வருடங்களில், பலவிதமான நிகழ்ச்சிகள் நாட்டில் நடந்துள்ளனவே?

"ஆமாம்! ஆனால் எல்லா நிகழ்ச்சிகளையும் பற்றி நான் எழுத வேண்டும் என்கிற அவசியம் கிடையாது. எது என்னுள்ளே எழுத வேண்டும் என்கிற தூண்டுதலை ஏற்படுத்துகிறதோ, அதைப் பற்றித்தான் நான் எழுதுவேன்."

"இது மகா சுவாமிகளின் கட்டளை!"

காஞ்சி பீடாதிபதியின் கைது, உங்களை எந்த விதத்தில் எழுதத் தூண்டியது?

"அதை நான் விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை."

நீங்கள் ஸ்ரீஜயேந்திரரைச் சந்தித்தீர்களா? அவர் சொன்னதன் பேரில்தான் இந்த நாவலை எழுதினீர்களா?

"ஒரு பொது நிகழ்ச்சியில்தான் நான் அவரைக் கடைசியாக சந்தித்தேன். எங்கே? எப்போது என்றுகூட சட்டென்று நினைவுக்கு வரவில்லை. நான் பெரியவர்களைப் பற்றி தொடர்ந்து சிந்திக்கிறவன். உங்களுக்குப் புரிகிற மாதிரி சொல்ல வேண்டுமென்றால், மகாசுவாமிகளின் கட்டளைக்கேற்பவே நான் இதை எழுதி இருக்கிறேன்."

ஸ்ரீ ஜயேந்திரர் கைது பற்றி உங்களது கருத்தென்ன?

"நான் போலீஸ் இல்லை. நீதிபதி இல்லை. ஆஸ்திகனும் இல்லை. பிராமணனும் இல்லை. அபிப்ராயம் சொல்லும்படியாக நேரடியாய்ச் சம்பந்தமில்லை. ஒரு வேளை, பிராமணர்களுக்கும், எனக்கும் பூர்வஜென்மத்தில் தொடர்பு இருந்திருக்குமோ என்னவோ!" *(பலமாய்ச் சிரிக்கிறார்)*

உங்கள் கதையில், ஸ்ரீ ஜயேந்திரர் கைதாகிப் புறப்படும்போது தமது தண்டத்தை மடத்திலேயே விட்டுவிட்டு, "எனக்குத் தரும் மரியாதையை, இனி மேல், இதற்குக் கொடுங்கள்" என்று கூறுவதாக வருகிறது. ஆனால் நிஜத்தில் அதுமாதிரி நடக்கவில்லை. இப்படிக் கதையில் நீங்கள் குறிப்பிட பிரத்யேகமான காரணம் ஏதும் உண்டா?

"மடத்தில் இருந்தாலும், மடாதிபதியின் கையில் இருந்தாலும் தண்டம், தண்டம் தான். அதற்கு வேறு ஒரு அர்த்தமும் இல்லை."

ஹரஹர சங்கர நாவலை ஸ்ரீ ஜயேந்திரர் படித்துவிட்டாரா? அவரது ரியாக்ஷன் என்ன?

"நிகழ்வுகளின் ரியாக்ஷன்தான் என் எழுத்தே தவிர, என் எழுத்துக்கு என்ன ரியாக்ஷன் என்று நான் பார்ப்பது இல்லை. நான் விஜயேந்திரரைச் சந்தித்து நாவலைக் கொடுத்துவிட்டு வந்தேன்."

சரி, அவரது ரியாக்ஷன்தான் என்ன?

"அன்றைக்கு ஜயஜய சங்கர நாவலை எழுதியபோது, மகா சுவாமிகளைச் சந்தித்து, நாவலைக் கொடுத்தேன். வாங்கிக் கொண்டார். மடத்தைச் சுற்றிவிட்டு வந்தபோது, பூதக்கண்ணாடி வைத்து,



"மடத்தில் இருந்தாலும், மடாதிபதியின் கையில் இருந்தாலும் தண்டம், தண்டம்தான்."

–ஜெயகாந்தன்

புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன். எழுதியதை அவர்களிடம் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். அவ்வளவுதான். அப்புறம் ரியாக்ஷன்.. அது... இது என்றெல்லாம் பார்ப்பது கூடாது."

இந்த நாவலின் மூலமாக நீங்கள் சொல்ல விரும்பும் மெசேஜ் என்ன?

"எழுத்தின் மூலமாகத் தானும் உயர்ந்து, மற்றவர்களையும் உயர்த்த வேண்டும் என்பதுதான் ஒரு எழுத்தாளரின் கடமையாக இருக்க வேண்டும். சிறு உணர்ச்சிகளுக்குத் தீனிபோடுவதுதான் எழுத்து என்று நினைத்து, அதைப்பலரும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை நான் செய்ய மாட்டேன். எழுத்தாளன் யாருடைய கையாளுமில்லை. மடத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் மனம் சோர்ந்து போயிருக்கிறார்கள். சிலர் மனத்தில் "ஒரு வேளை அவர் செய்திருப்பாரோ?" என்ற சைத்தான் எண்ணம் நுழையப் பார்க்கிறது. அதைத் தடுத்து, 'சோர்ந்து போகாதீர்கள். இது ஒரு சோதனைக் காலம். நம்பிக்கை இழந்துவிடாதீர்கள்' என்று ஆறுதல் சொல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றியது, எழுதியிருக்கிறேன்."

இந்த நாவலுக்கு என்ன விதமான விமர்சனங்கள் வரும் என எதிர்பார்க்கிறீர்கள்?

"அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. எந்த விமர்சனமாக இருந்தாலும், அது விமர்சனம் செய்பவர் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளும் விமர்சனமாகத்தான் இருக்கும்."

- எஸ்.சந்திரமௌலி





குஷி சிறப்பிதழுக்காக 'மொட்டையும் மொட்டையும் முட்டிக்கிட்டா என்ன'வென்று தோன்ற, உடனே செயல்படுத்த களத்திலிறங்கினோம். ஊரெங்கும் தேடிய பின் கடைசியாக நம்மிடம் அகப்பட்டது காலச்சுவடு பத்திரிகையின் இணையாசிரியரும், கவிஞருமான பவுத்த அய்யனாரும், காமெடி கிங் பாஸ்கியும்தான். விடுவோமா? பாஸ்கி வீட்டு மொட்டை மாடியில் வைத்து, மொட்டைகளின் அட்டகாசத்தை அரங்கேற்றினோம்.

பாஸ்கி: அய்யனே, மொட்டையா கேக்கறேன்னு நினைச்சுக்காதீங்க, தங்கள் மொட்டையின் ரகசியம் என்னவோ?

அய்யனார்: நான் தற்போது பவுத்த மதத்துக்கு என்னை மாற்றிக்கொண்டு விட்டேன். அங்குள்ள புத்த பிட்சுகளெல்லாம் மொட்டை தான். அதுவுமில்லாமல் எனக்கு முடியும் இல்லை... ஹி-ஹி-ஹி அதுதான் உண்மையான காரணம். நீங்கள் எப்படி ஐயா இந்த மொட்டைக்குத் தாவினீர்கள்?

பாஸ்கி: ஐயய்யோ... இப்படி செந்தமிழ்ல கூவாத நைனா... நல்ல தமிழ் பேசுங்க... எப்படி மொட்டைன்னுதானே செப்புனீங்க... கேட்டுக்கோங்க... 'அரிகிரி அசெம்ப்ளி' நூறாவது ஷோவுக்காக திருப்பதிக்குப் போய் மொட்டை போட்டுட்டு வந்து மதன் சார்கிட்ட நின்னப்போ "இதே கெட்-அப்புல இரு. இது உன்னை நிச்சயமாக ஃபேமஸாக்கும்"னு கரெக்டா கணிச்சாரு. அது இன்னைக்கு உண்மையாயிருக்கு. ஆமா... பல வருஷமா மேன்ஷன்ல இருக்கீங்களாமே. மேன்ஷன் கவிதைன்னு புக்குகூட போட்டிருக்கீங்களாம்.. சரி, 'காதல்' படத்துல வர்ற மாதிரி, பெண்களெல்லாம் மேன்ஷனுக்குள்ளார நுழைய முடியுமா? மேன்ஷன் வுமேன்ஷனாக வாய்ப்பிருக்கா?

அய்யனார்: அதுக்கு அனுமதியே கிடையாது. மேன்ஷன் என்பது கட்டற்ற சுதந்திரம் இருக்குமிடம். எதுவும் கேட்க நாதியிருக்காது. கிராமத்திலிருந்து சென்னைக்கு வருபவர்கள், மிகக் குறைந்த வாடகையில் தங்குவதென்பது மேன்ஷனில்தான் முடியும். இளைஞர்கள் முதல் இருபத்தைந்து வருடங்களாக தங்கும் வயோதிகர்களெல்லாம் அங்கு





காதலுக்கு கண் இல்லைன்னு சொல்வாங்க... அட! ஹீட் கூடவா இல்ல?

மொட்டைகளின் அட்டகாசம்!

இருப்பார்கள். விஜய் டீவியில் தங்கள் கலாய்க்கும் நிகழ்ச்சியிலும், சில சமயம் சமுதாயப் பிரச்னைகளையும், சினிமாவையும் தொடும்போது கற்பனையான பிரம்மாண்டத்தை உருவாக்கி நிஜத்தை மறைக்கிறீர்கள் என்று சொல்லப்படுவது குறித்து...


பாஸ்கி: அதுக்கு இத்தனை அர்த்தம் இருக்கா? பரவாயில்லையே. சத்யராஜ் 'மகாநடிகன்'ல எல்லா நடிகர்களையும் கிழி கிழின்னு கிழிச்சிருக்காரு. அதைப் பார்த்துட்டு 'கம்'முன்னு இருக்கறவங்க, சினிமாவுல ஜீரோவான என்னை ஏன் கேர் பண்ணனும்? அப்போ நான் கரெக்டான பாயிண்டைப் பிடிக்கறேன்னு தானே அர்த்தம்? போலீஸோட தொப்பை, ரவுண்டானா மாதிரியிருக்குன்னு சொன்னதுக்கு, சென்னை கமிஷனர் கூப்பிட்டு வைச்சு பாராட்டினாரு. நம்ம நடிகர்களுக்கு எப்பவும் 'தலைவா நீதான் சூப்பர்'னு பூத் தூவிட்டேயிருக்கணும்.

அய்யனார்: அமெரிக்க டீவிக்களில் ஆயிரம் விதமான புரோக்ராம்கள் உள்ளன. நமது ஊரில் உங்களைப் போன்றவர்களே வித்தியாசம் காட்டுகிறீர்கள். 83லிருந்து 'இந்தியா டுடே'வில் விமர்சனக் கட்டுரைகள் எழுதும் என்னைக்கூட சிலர்

மேன்ஷன் அறைக்கு வந்து மிரட்டியிருக்கிறார்கள். தங்களின் சொந்த ஊர் கும்பகோணம்தானே? காரணம், அந்த ஊரின் குசும்பு உங்களிடம் நிறைய உள்ளது.

பாஸ்கி: அப்டியா? நீங்க சென்னையைப் பத்திக்கூட புக் எழுதியிருக்கிங்க. எனக்கு சென்னையில ஆச்சர்யமான விஷயம், மதியம் ஒரு மணிக்கு காதலர்கள் 107 டிகிரி கத்திரி வெயில்ல லவ் பண்ணிட்டு இருக்கறதுதான். காதலுக்குக் கண் இல்லைன்னு சொல்வாங்க. அட! ஹீட் கூடவா இல்லை?

அய்யனார்: நான்கூட சென்னைக்கு வந்த புதிதில் கவிதை எழுதினேன். சென்னையில் இருப்பவர்கள் கொம்புகளுடன் அலைவதாகக் கூறிவிட்டு இறுதியாக 'நானும் கொம்புகளுடன் அலையத் தொடங்கினேன். கொம்புகளற்ற மனிதனைத் தேடி' என்று முடித்திருப்பேன்.



பாஸ்கி: இந்தக் கவிதைக்காக மாடு மாதிரி உழைச்சிருப்பீங்கன்னு நினைக்கிறேன். முன்னெல்லாம் கவிதை எழுதறதுக்கு பீச்சுக்குப் போவாங்க. ஆனா இப்போ போனா, அவங்களே கவிதையாயிடுவாங்க!

அய்யனார்: (எதிர்பாராத ஜோக்கில் விழுந்து விழுந்து சிரிக்கிறார்) ஐயா, உங்களுக்குத் தெரியுமா, சுனாமி வருவதற்கு முன்பே அதுபற்றி நான் 'மெரீனாவின் பேரலை ஒன்று அறையுடன் சேர்த்து கடலுக்குள் இழுத்தது' என்று ஒரு கவிதையிலும், மற்றொன்றில் 'நடுஇரவில் கடல் அலை என் அறையின் கதவைத் தட்டியது!' என்றும் எழுதியிருக்கிறேன்.

பாஸ்கி: ஆஹா! உங்க கடல் அறையையே தொட்டிட்டிருக்கு... வாங்க, பார்க்கலாம்!

அய்யனார்: என்ன ஐயா, கடலையா?

பாஸ்கி: அட, அதில்லங்க. 'ஆளவந்தான்'ல கமலும், கமலும் பளு பார்ப்பாங்களே... அது மாதிரி நாம வலு பார்க்கலாம் வாங்க.

(இருவரும் எழுந்து நின்று கைகுலுக்குவதற்குப் பதிலாக மொட்டையோடு மொட்டை குலுக்கிக் கொண்டு, 'ஆளவந்தான்' கமலாக மாறினார்கள். கொஞ்ச நேரம் விளையாடி விட்டுத் திரும்பவும் பேச உட்கார்ந்தார்கள்)

அய்யனார்: ஐயா, நான் சோர்ந்துவிட்டேன் உரையாடலை முடித்துக் கொள்ளலாம். கடைசியாக உங்களிடம் ஒரு கேள்வி. நீங்கள் கவிதைகள் எழுதுவதுண்டா?


பாஸ்கி: பத்திரிகை, டீ.வி, டிராமான்னு நான் முழுக்க பிஸியா இருக்கேன். கிடைக்கிற கமர்ஷியல் ப்ரேக்குல, ஐ.ஓ.பி பேங்க்லே வேலை செஞ்சுட்டு வர்றேன். உங்க அட்வைஸை ஏத்துக்கறேன். ஒரு பெரிய கவிஞர் 'ஏ கடலலையே'ன்னு ஒரு கவிதை எழுதின மாதிரி நானும் எழுதியிருக்கேனே... 'ஏ ஜல்லிக்கட்டுக் காளையே, நீ முட்டுவது எதனாலோ, உனக்கென்ன கொம்பெனன்று நினைப்போ!

(இருவரும் சிரிப்பலையில் மூழ்குகின்றனர்!)

- நீலாவள்ளி

படங்கள்: ஸ்ரீஹரி

பொங்கல் ரீல்!



* 'அய்யா'

சரத்:- இந்தத் தடவை நடிகர் சங்க தலைவர் பதவிக்குப் போட்டியிடப் போறேன் பங்காளி...

நெப்ஸ்:- தோள் கொடுக்க நான் இருக்கேன். துணிச்சலா குதி. ஜெயிச்ச பிறகு சங்கத்தோட கணக்கு வழக்கை பார்க்க ஒழுங்கா ஒரு ஆடிட்டரைப் போடு. அதோட காதும் காதும் வச்ச மாதிரி தென்னிந்திய நடிகர் சங்கத்தைத் திராவிட நடிகர் சங்கம்னு பெயரை மாத்திடு...

சரத்:- பாய்ண்ட் பங்காளி! இல்லேன்னா 'கேப்டன் மன்றம்'னு மாறிடும்!

விஜய்:- 'அட்டகாசம்' படம் மட்டையாயிடும்னு நினைச்சேன். ஆனால், பட்டையக் கிளப்பிடுச்சு! இந்த அதிர்ச்சி ஒரு பக்கம்னா, விஜய் - த்ரிஷா வெற்றி ஜோடிங்கிற கான்செப்டை உடைக்கிற மாதிரி, 'ஜி' படத்துலே அஜித்கூட டூயட் பாட போயிட்டியே இது அடுக்குமா?

த்ரிஷா:- அடுத்த படத்துலே அறுபது லட்சம் சம்பளம் தர்றேன்னு சொல்லு. அஜித்தோடு இனி நடிக்க மாட்டேன்னு பிரஸ்மீட் கொடுக்குறேன். நம்பலேன்னா உன் கன்னத்துலே அடிச்சு சத்தியம் பண்றேன்.

விஜய்:- சென்டிமீட்டர் கேப்புல சைக்கிள் ஓட்டுறதுன்னு சொல்லுவாங்களே அது இதுதான்...!



* 'திருப்பாச்சி'

கஜாலா:- லேசான நில நடுக்கத்துக்கே இப்படி ஏற்காடு வரைக்கும் ஓடி வந்துட்டியே ஜீவா! அதோ அந்த அருவி யிலே குளிச்சா எல்லாம் சரியாயிடும்.

ஜீவா:- நடுங்கறது அதுக்காக இல்லே... 'ராம்' படத்தை எதிர்த்து வி.எச்.பி நீதிமன்றத்துக்குப் போகப் போறதா செய்தி வருது.

கஜாலா:- அப்படி நடந்தா சந்தோஷப்படு! உங்க அப்பாவுக்கு விளம்பரச் செலவு அப்படியே மிச்சமில்லே!



* 'ராம்'

சினேகா:- நீங்க மீசை வைச்சு நடிச்சிருந்தா அஜித், விஜய்யெல்லாம் 'அய்யோ! அம்மா'ன்னு மூட்டை கட்டியிருப்பாங்க தெரியுமா?

பிரசாந்த்:- நான் என்ன மாட்டேன்னா சொன்னேன். இத்தனை நாள் ஒழுங்கா வளர மாட்டேன்னு அடம் பிடிச்ச மீசை, இப்போதான் வீசை கணக்குலே மண்டுது!

சினேகா:- தங்கர்பச்சான் காதுல கேட்கிற மாதிரி சொல்லிடாதீங்க. 'மீசை வளர்ந்த கதை'ன்னு புதுப் படத்துக்கு பூஜை போட்டுருவார்!

'பொங்கலுக்கு வெளிவரும் படங்களைப் பற்றி மாங்கு மாங்கென்று எழுதாதே' என ஆசிரியர் உத்தரவு போட்டதால், குஷியான ரவுண்ட்ஸ் பாய் கற்பனை உலகில் ஒரு ரவுண்ட் வந்து விட்டார்.




* 'ஆயுதம்'

ஸ்ரீதேவி:- என்ன புது மாப்ளே, ஹனிமூன் டூரெல்லாம் எப்படியிருந்தது?

தனுஷ்:- 'நீ நிக்கணும்! அதுக்குத் தேவை சிக்கனம்'னு மாமா பஞ்ச் டயலாக் அட்வைஸ் கொடுத்தார். அதனாலே உள்ளூர் நட்சத்திர ஹோட்டல்லையே கொண்டாடினோம்.

ஸ்ரீதேவி:- முடியை எப்படி சிக்கனமா வச்சுக்கிறதுன்னு மாமா 'பன்ச்' அட்வைஸ் பண்ணலையா?

தனுஷ்:- முடியோட இருக்கிறது முக்கியமில்லே! ஜாடிக்கேத்த மூடியா இரு... ஜுஜுபி...



* 'தேவதையைக் கண்டேன்'

கௌசல்யா: பேசாம மெகா சீரியல் பக்கம் வந்துடுங்க. 'கணவன்'னு டைட்டில் வச்சு, வருஷக் கணக்குலே கலக்கலாம்.

கார்த்திக்: இப்போ மட்டும் என்ன! நான் நடிக்கிற பல படங்களை எடுக்குறாங்க... எடுக்குறாங்க... எடுத்துக்கிட்டே இருக்காங்க... எது எப்போ வரும்ங்கிறது அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

கௌசல்யா: அப்போ தியேட்டர் ரிலீஸ் செய்யாம, நேரா டீவிக்குக் கொடுத்துடுங்க.




* 'மனதில்'

கற்பனை:
ரவுண்ட்ஸ் பாய்
படங்கள் உதவி:
ஜான்சன்,
மௌனம் ரவி,
சுந்தர்ஜி

இப்போது விறுவிறுப்பான விற்பனையில்!!!

புகழ்பெற்ற ஆன்மீக ஆசான்

பரமஹம்ச யோகானந்தரின்




ஒரு யோகியின் சுயசரிதம்

20ஆம் நூற்றாண்டில் வெளியான சிறந்த 100 ஆன்மீக நூல்களில் ஒன்றானதும் 22 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதுமான உள்ளங்கவர் மகாகாவியம்.

கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பாடப் புத்தகமாகவும் கலந்தாராய்வு செய்வதற்காகவும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிற அரிய நூல்.

788 பக்கங்கள் ரூ. 100.00



இறைவனுடன் நீங்கள் பேசுவது எப்படி

இறைவனுடன் பேசவும், நமது பிரார்த்தனைகளுக்குத் திட்டவட்டமான பதில்களைப் பெறவும் உண்மையிலேயே முடியுமா? ஆன்மீக ஆசான் யோகானந்தர் இப்புத்தகத்தில் பதில் அளிக்கிறார்.

பாக்கெட் சைஸ். **51 பக்கங்கள். ரூ. 5.00**

வெற்றியின் விதிமுறை



உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் தடைகளைக் கடந்து வெற்றியை முழுமையாக அடைய உறுதுணையாக இருப்பது உங்களுடைய திறமை மட்டுமின்றி இறைவன் உங்களுக்கு அளித்திருக்கும் உட்சக்திகளின் ஆற்றல்களே என்பதை யோகானந்தர் இப்புத்தகத்தின் மூலம் அறிவுறுத்துகிறார்.

பாக்கெட் சைஸ். **40 பக்கங்கள். ரூ. 5.00**

மற்றும் இதர நூல்கள் (ஆங்கிலத்தில்)

வெளியீடு : **யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா,**
ராஞ்சி - 834 001. ✆ : **0651-2460071**

கிடைக்குமிடங்கள் : **யோகதா சத்சங்க தியான மண்டலி,**
23, III கிராஸ், டோக் நகர், கோச்சடை P.O., மதுரை-625016
✆ : **0452-2384805, Cell : 098421 79797**

யோகதா சத்சங்க தியான கேந்திரம்,
புதிய எண் 14, ராஜரத்தினம் தெரு, கீழ்ப்பாக்கம் சென்னை - 600 010.
✆ **044-26481232, 26411564**

ஜனவரி 2004ல் சென்னையில் நடைபெறும் புத்தகக் கண்காட்சி

RAE-3652



கொரடிகள்

"எங்கே போறீங்க?"

"ஆவடிக்கு."

"ஓ மை காட். ஆவடிக்கா போறீங்க?"

கலவரத்துடன் அவனைப் பார்த்தேன்.

"ஏன் ஆவடில ஏதாவது ப்ராப்ளமா?"

"நோ... நோ... நானும் அங்கதான் போறேன்."

சிரித்துக் கொண்டே என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தவனை வெறியோடு பார்த்தேன்.

கண்டக்டர் விசில் கொடுத்து பஸ் நகரத் தொடங்கியதுதான் தாமதம்... உயிரே போய் விடுவதுபோல என் கையைப் பிடித்து இழுத்து, உச்சஸ்தாதியில் கத்தினான்.

"அதோ அதோ, அங்க பாருங்க. சிக்கிரம்..."

படிக்கலாம் என்று எடுத்த பேப்பரை அப்படியே கீழே போட்டுவிட்டு, எட்டிப் பார்த்தேன். ஒன்றுமே இல்லை!

"இந்த ரோட்லதான் என் லவ்வரை ஃபர்ஸ்ட் டைம் மீட் பண்ணினேன்."

எனக்கு உள்ளுக்குள் கொலை வெறி.

கீழே குனிந்து பேப்பரை எடுத்துப் பிரித்தவுடன், திடீரென்று தலையை உள்ளே விட்டான். மெயின் பேஜ் கிழிந்து விட்டது. பேசாமல் மடித்து அவனிடம் கொடுத்தேன்.

"இல்லை, நான் நியூஸ் பேப்பர் படிக்க மாட்டேன்" என்று என்னைப் பார்த்துச் சிரித்தான். "மை நேம் ஈஸ் கண்ணன். ஆவடிக்கு ஒரு வேலையா போறேன்."

நான் சுற்றிலும் கண்களைச் சுழல விட்டேன். எந்தச் சீட்டும் காலியில்லை.

"ஆவடில வாட்டர் ப்ராப்ளம் இருக்கா?"

"பேப்பர்ல என்ன போட்டிருக்கான்?" ஏதேதோ பேசினான்.

"எனக்குத் தலைவலி. நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கணும்..."

"ஒத்தைத் தலைவலியா?"

முறைத்தேன்.

"என் லவ்வருக்கும் அடிக்கடி ஒத்தைத் தலைவலி வரும்."

இவனை லவ் பண்ணினால் வேறு என்ன வரும்?

"இப்ப அவ போயிட்டா."

"சாரி"

"இல்லை. ஊரை விட்டுப் போயிட்டா." கடவுளே!

"என் லவ்வர் இப்போ யாரைக் கல்யாணம் பண்ணியிருக்கா தெரியுமா?"

என் கையைப் பிடித்து சொறிந்தான். நான் ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டேன்.

"என்னைத்தான். என் லவ்வர் எப்படி இன்னொருத்தனை மேரேஜ் பண்ணிப்பா. ஆனா இப்போ ஊரை விட்டுப் போயிட்டா."

அந்த அதிர்ச்சியில்தான் 'இப்படி' ஆகி விட்டான் போலும்.

நான் கண்களை மூடித் தூங்குவது போல் பாசாங்கு செய்தேன். எப்பொழுது தூங்கினேன் என்று தெரியவில்லை. எழுந்து பார்த்தால், ஆவடி. நல்லவேளை அவனைக் காணவில்லை.

அவசர அவசரமாக என் ப்ரீஃப்கேஸை தூக்கிக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வீட்டை அடைந்து, கதவைத் தட்டி உள்ளே நுழைந்த என்னை விநோதமாகப் பார்த்தாள் மனைவி ஸ்வேதா. அவளது முகத்தில் அதிர்ச்சி!


"என்னங்க, சரியான ப்ளேடா?"

"அட, உனக்கு எப்படித் தெரியும்?"

"அதான் ஷர்ட் பாக்கெட் வாயைப் பொளந்துக்கிட்டு நிக்குதே." ○

கங்கா


Built to Last
Butterfly
Stainless Steel Vacuum Flask
KAILASH
அதிக நேரம் சூடு இருக்கக் கூடியது
கண்ணாடி ரீஃபில் இல்லாதது
அதிக நாட்கள் உழைக்கக்கூடியது
உடையாதது
துர்நாற்றம் வீசாதது
பட்டர்ஃபிளை®
Good for a lifetime
கங்காதரம் அப்ளையன்சஸ் லிமிடெட் & பட்டர்ஃபிளை ஹோம் அப்ளையன்சஸ்
377, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
Tel: 24345199, 24364449, 24345313, Fax:24343522 Website:www.buterflyindia.com
பட்டர்ஃபிளை
ஸ்டெயின் லெஸ் ஸ்டீல்
வெக்கும் பிளாஸ்க்
With 'Space-Age Technology'





வலைபாயுதே

தண்டவாளத்தில் சென்று கொண்டிருந்த ரயில், திடீரென வயலுக்குள் ஓட ஆரம்பிக்கிறது. பயணிகளிடம் அதிர்ச்சி. சில நொடிகளில் ரயில் தடுமாறி நிற்கிறது. பயணிகள் டிரைவரிடம் கோபமாகச் செல்கிறார்கள்.

"ஒருத்தன் தண்டவாளத்தில் நடுவுல நின்னான். அதான்" என்கிறார்.

"அந்த ஒருத்தனுக்காக எல்லோரையும் கொல்லப் பார்த்தியே. அவன் மேல ஏத்த வேண்டியதுதானே" என்கின்றனர்.

அதற்கு டிரைவர், "அதான் நானும் நினைச்சேன். ஆனா திடீர்னு அவன் வயலுக்குள்ள இறங்கி ஓட ஆரம்பிச்சுட்டான்..." - இப்படி புஷ்டியான ஜோக்குகளுடன் குஷிப்படுத்தும் இந்தியத்தளம் netfundu.com. குழந்தைகளை குதூகலப்படுத்தும் சகல அம்சங்களையும் உள்ளடக்கியிருக்கிறது இத்தளம். ஈஸியாக மேஜிக் செய்ய, கேரம் முதல் கிரிக்கெட் வரை ரூல்ஸோடு கற்றுக்கொள்ள, ஜாலியா போங்க இத் தளத்துக்கு!

'ரொம்ப போர் அடிக்குது... என்னத்த செய்ய'ன்னு தலையைப் பிச்சுக்கிட்டு இருக்கீங்களா? www.i-am bored.comக்கு ஒரு விசிட் அடிங்களேன். கோக்கு மாக்கா ஏதாவது கொஸ்டின் கேட்டு குழப்புறதிலிருந்து, 'கொல்'லுன்னு சிரிக்க வைச்சு குஷிப்படுத்துற வரை, எக்கச்சக்கமான விஷயங்களை வைச்சிருக்கற இத்தளம், ஓர் ஆலமரம். அதன் விழுதுகளா பல இன்ட்ரஸ்டிங்கான தளங்களுக்கு லிங்க் விரியுது. "நீங்கள் வசீகரமானவரா?", "உங்க கேர்ள் ஃப்ரெண்ட் எத்தனை சதவிகிதம் பர்ஃபெக்ட்?" இப்படி எடக்கு மடக்கான டெஸ்ட்டுகளும் கிடைக்குது.


('இந்த வெப்சைட் ரொம்ப போர்'னு எனக்கு யாராவது மெயில் அனுப்பிடாதீங்க!)

செம குஷியில் ஷெராவத்!

மல்லிகா ஷெராவத் செம...செம... செம... குஷியில் குதித்துக் கொண்டிருக்கிறார். காரணம் 2004-ன் பாலிவுட்டின் 'பக்கா ஹிட்' படம் 'மர்டர்'தானாம். (மர்டரைத் தொடர்ந்து அதேபோல் 'சூடாக' வந்த சில படங்கள் கள்ளான் ஆகிவிட்டன.) அதுபோக 'மல்லிகா'வின் வால்பேப்பர்கள்தான் சென்ற வருடம் நெட்டில் (ஐஸுக்கு அடுத்தபடியாக) அதிகம் டௌன்லோட் செய்யப்பட்டதாம். (indiafm.com)

('அட...அட... மல்லிகா ஷெராவத்துக்கும் 'சேலை' கட்ட உங்களால் மட்டும்தான் முடியும்'னு நீங்க சொல்றது கேட்குது!)

- ப்ரௌஸர்





புக்பேங்க்



ஆன்மிக வினா விடை - முதல் பாகம் - சுவாமி கமலாத்மானந்தர்

கடிதம் எழுதக்கூட கம்ப்யூட்டரைத் தேடுகிற தலைமுறை, ஆதாரமில்லையென்று ஆன்றோர் வார்த்தையையும், சாஸ்திரம் சம்பிரதாயமென்னும் சான்றோர் மொழிகளையும் ஏற்க மறுக்கிறது. 'ஆண்டவன் அருள் நோய் தீர்க்குமென்றால் அப்பல்லோ எதற்கு? செவ்வாய் தோஷத்தைப் போக்க சோயுஸ் கலத்தில் போகலாமா?' என்றெல்லாம் கேட்கிறது. கொஞ்சம் தெளிந்தவர்களுக்கும் குறைவில்லாத கேள்விகள் இருக்கின்றன. 'ஆங்கிலத்தில் அர்ச்சனை செய்தால் ஆண்டவனுக்குப் புரியாதா? அரச மரத்தைச் சுற்றி வந்தால் ஆண் குழந்தை பிறந்துவிடுமா? அடுத்த உயிரைக் கொல்வது பாவமென்றால் ஆலயத்தில் பலிபீடம் எதற்கு? 'உ' எழுத்தில்தான் உட்கார்ந்திருக்கிறாரா பிள்ளையார்? 'மழை வேட்டல் பதிகம்' படித்தால் தேவர்கள் ஸில்வர் அயோடைடு தூவுவார்களா?' - எத்தனையோ கேள்விகள் இளைய தலைமுறைக்கு.

மறுபக்கம் மற்றொன்றும் நிகழ்கிறது. கல் சுமப்பவனும், காய்கறி விற்பவனும், கம்ப்யூட்டர் இஞ்சினீயரும் ஒன்றாய் விரதமிருக்கிறார்கள், மலைக்குப் போகிறார்கள். அமெரிக்காவிலிருந்து அன்பர் கூட்டம் அண்ணாமலையைக் காண ஓடி வருகிறது. அங்கே சம்பாதித்த டாலர், ஆலயத் திருப்பணிக்கு அள்ளி வழங்கப்படுகிறது. முதிர்ச்சி வந்தபின் ஆன்மிகத்தில் முழுக் கவனமும் திரும்புகிறது. இரண்டு பக்கமும் பார்த்துவிட்டு, இளைய தலைமுறை எதிர்வாதம் செய்கிறது. காதலியர் கண்ணசைவுக்கும், கட்சித் தலைவன் நாவசைவுக்கும் கடலில் குதிக்கவும் செய்பவர்கள், கடவுளைப் பற்றிச் சொன்னால் மட்டும் காரணம் கேட்டு நிற்கிறார்கள். அமுதம் கிடைக்கும் இடத்திலேயேதான் ஆலகாலமும் கிடைக்கிறது. ஆக்கம் தரும் விஞ்ஞானம்தான் அழிவையும் சேர்த்து வளர்க்கிறது.

வளரும் தலைமுறைக்கு வழிகாட்டினால், பாரதம், ஆன்மிக வல்லரசாகும்.

அத்தனைக்கும் பதில் ஆன்மிகத்தில் இருக்கிறது. நெறிப்படுத்த, வளப்படுத்த ஆன்மிகத்தை அறிய வேண்டும், பதில் சொல்லும் இதம் வேண்டும், புரிய வைக்கும் பதம் வேண்டும். தெரியவும், புரியவும், வாழும் தலைமுறையும், வளரும் தலைமுறையும் வாசிக்க வேண்டிய நூல்.

ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், பெரிய நாயக்கன்பாளையம், கோவை - 641 020, விலை: ரூ.70

- விஷ்வக்

மாம் ஃப்ரம்



சுகந்தா அமெரிக்காவுக்குப் போகப் போகிறாள்... இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறது...

நினைக்க நினைக்க மலைப்பாக இருக்கிறது...

சின்ன வயசில், அவள் கையைப் பார்த்துப் பலன் சொன்ன சுப்பாமணி வாத்தியார்கூட இவளை கடல் தாண்டிப் போவாள் என்று சொல்லவில்லை!

சுப்பாமணி எது சொன்னாலும் பலிக்கும்...

இவளுக்கு வரன் தேடி தஞ்சாவூருக்கும், குடவாசலுக்கும் இவள் அப்பா அலையாய் அலைந்த



கலகல தொடர் ஆரம்பம்...

இண்டியா

அனுராதா ரமணன்



1

"ஏதோ, நான் வந்தாலும் பரவாயில்லே. ஒண்டியா வேற போறே... உன் பொண்ணுக்கு அம்மா வந்தாப் போதும். அப்பன்காரன் வேண்டாம். நீயின்னா ஒத்தாசையா இருப்பே. சுடச் சுட அடையும், தோசையும் பிரசவ மாற வரைக்கும் பொண்ணுக்கு ராஜோபசாரம் செய்வே... அப்பன் எதுக்குப் பிரயோசனம்? வி.ஆர்.எஸ் பணத்தை எல்லாம் போட்டு கல்யாணம் செஞ்சு வைக்கத்தான்

போதுகூட, 'நறுக்'கெனச் சொன்னாரே...

"ஏண்டா கவலைப்படறே... உன் பொண்ணுக்கென்ன குறைச்சல்... இந்த ஐப்பசிக்குள்ள கல்யாணம்... கவர்ன்மெண்ட் மாப்பிள்ளை... நீ வேண்டாம் வேண்டாம்னாகூட கொத்திண்டுப் போயிடப் போறான்... பார்த்துண்டே இரு..."

அவர் சொன்னபடியேதான் நடந்தது... மஞ்சள் கலந்த சிவப்பாய், பப்பாளிப் பழம் மாதிரி பரமேஸ்வரன்... கோடி வீட்டு விசாலியைப் பெண் பார்க்க வந்துவிட்டு, சகுனம் சரியில்லை என்று, கொஞ்ச நேரம் இவர்கள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து, ஒரு சொம்பு தண்ணீரை வாங்கி மாப்பிள்ளையின் தாய் மாமன் குடிக்க...

தண்ணீர் கொண்டு வந்து தந்த சுகந்தாவை பரமேஸ்வரனுக்குப் பிடித்துப் போக...

பெருமூச்செறிந்தாள் சுகந்தா...

"என்ன பெருமூச்சு... மொத்தமே ரெண்டு சூட்கேஸ்தான் ஒருத்தருக்கு. நீ என்னடான்னா, கஸ்தூரி கோரோஜனத்துல இருந்து அங்காயப் பொடி, பருப்புப் பொடின்னு ஒரு அம்பிகா ஸ்டோரையே அமெரிக்காவுக்கு எடுத்துட்டுப் போகணும்ங்கறே... கொஞ்சம் சாமானைக் குறை... இல்லே, அங்கே 'செக்கிங்'லே எல்லாத்தையும் வீசிக் கடாசிடுவான். அப்ப மூஞ்சியத் தூக்கி வச்சுட்டு ஒரு பிரயோஜனமுமில்லே!"

பரமு - பரமேஸ்வரன் - தன்னைச் சுற்றிக் குவிந்திருக்கும் சாமான்களுக்கிடையிலிருந்து குரல் கொடுக்கிறார்.



தகப்பன்...''

சுகந்தாவுக்குக் கணவனின் புலம்பல் சங்கடத்தை உண்டு பண்ணினாலும், மகளை விட்டுக் கொடுக்க முடியவில்லை.

''அடடா... எதுக்காக இவ்வளவு ஸெல்ஃப் ஸிம்பொனி?''

''ஸிம்பொனி இல்லேடி... ஸிம்பதி... நீயும் உன் இங்கிலீஷும். தினமும் காலம்பற டீ.வியில இங்கிலீஷ் பாடம் நடக்கறதே... ஒரு மாசம் கேட்டிருந்தியானாக்கூட கொஞ்சம் டெவலப் செஞ்சிட்டிருக்கலாம். பட்டிக்காடு... பட்டிக்காடு... உன்னையெல்லாம் அமெரிக்கா வெத்தலை பாக்கு வச்சு அழைக்கறது பாரு...''

சுகந்தா வாயை இறுக மூடிக் கொண்டாள்.

உண்மைதான். சுகந்தாவின் ஒரே பெண் பிரியம்வதா அமெரிக்காவில் இருக்கிறாள். திருமணமாகி ஐந்தாறு வருடங்களாகியும் குழந்தைப் பேறு இல்லாமல் இருந்து, அவள் வயிற்றில் ஒரு பூச்சி, புழுவாவது உதிக்க வேண்டுமென்று சுகந்தாவும் பரமேஸ்வரனும் ஊரிலிருக்கிற கோயில் குளங்கள் போதாதென்று, மாநிலம் வாரியாகப் போய் நேர்ந்துகொண்டு வந்ததன் பலன்...

பிரியம்வதா இப்பொழுது ஏழு மாத கர்ப்பம். தான் பாட்டியாகப் போகிறோம் என்பதில் சுகந்தாவுக்குக் கொள்ளை சந்தோஷம்தான்... என்றாலும் பரமுவினால் அத்தனை சுலபத்தில் தன்னை தாத்தா ஸ்தானத்தில் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

''பெண்ணுக்குப் பிள்ளை பிறந்தா, அதனால நாம தாத்தா பாட்டி ஆயிடறதில்லை. நம்ம நாட்டுல பதினெட்டு வயசுல எல்லாம் பொண்களைக் கட்டிக் கொடுத்து, அடுத்த பத்தாம் மாசமே குழந்தையும் பொறந்துடறது... பொண்ணைப் பெத்தவளுக்கு நாப்பது வயசுகூட ஆறதில்லே... அதெப்படி 'பாட்டி'ன்னு சொல்ல முடியும்... என் சிநேகிதன் சகாதேவனுக்கு ஆறு வயசுல ரெட்டைக் குழந்தைகள் இருக்கு... அவன் நெஞ்சை நிமிர்த்திட்டு, 'என்னடா, தாத்தாவாகப் போறியா'ங்கறான்... எனக்கு நாக்கைப் பிடுங்கிக்கலாம் போல இருந்தது...''

''யாரு... நீங்கதானே... இருக்கற ஒரு நாக்கையும் பிடுங்கிட்டா வெத்தலைப் பாக்கு, பன்னீர் புகையிலை, டிகிரி காபிக்கெல்லாம் ரப்பர் நாக்கா வச்சுக்க முடியும்? உங்க பொண்ணு ஒண்ணும் பதினெட்டு வயசுல பிள்ளை பெறப் போறதில்லே. இந்த ஆனி வந்தா இருபத்தஞ்சு முடியப் போறது. இதுவே டுலெட்...''

''டு லேட்டுடி சுகந்தா... நீ கொஞ்ச நாளைக்கு இங்கிலீஷ் பேசாம இரேன்... உன்னை அமெரிக்காவுக்கு அனுப்பிட்டு, நான் வயித்துல புளியக் கரைச்சிட்டு உட்கார்ந்திருப்பேன்... பேசத் தெரியாம எதையாவது பேசிட்டு சங்கடத்துல மாட்டிக்கப் போறியோன்னு...''

சுகந்தா, கணவரை கனிவுடன், சற்றே காதலுடன் பார்த்தாள். உடனேயே தன் பார்வையை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.

சாதாரணமாகவே பரமுவின் பலம், பலவீனம் இரண்டுமே மனைவிதான்... எப்பொழுதும் அவள் தலைப்பைப் பிடித்துக்கொண்டு அலைய வேண்டும். இத்தனைக்கும் பரமுவுக்கு ஐம்பது வயதாகிறது. சுகந்தாவுக்கு நாற்பத்தியைந்து. மணி மணியாய் இரண்டே குழந்தைகள். பெரியவள்தான் ப்ரியம்வதா. ஒரு பஞ்சாபிப் பையனைக் காதலித்து, மணந்து அமெரிக்காவில் இருக்கிறாள். அடுத்தவன் ப்ரவீன் லண்டனில்... இன்னும் கால் கட்டுப் போடவில்லை.

என் குஷி!

இலந்தைப் பழத்தைப் பார்க்கும்போதும் கடற்கரையில் குதிரை சவாரி செய்யும்போதும் எனக்குள் அப்படியொரு குஷி பிறந்துவிடும்.

சென்னையில் பிரசித்தி

பெற்ற மயிலாப்பூரில் தனி வீடு பரமுவுடையது. மாடி போர்ஷனில் இவர்கள்... கீழ் போர்ஷனில் எப்பொழுதும் புதுசாய் மணமான அல்லது இரண்டு வயசுக்குள் குழந்தை இருக்கிற தம்பதிகள்.

அப்படித்தான் பார்த்துப் பார்த்து வாடகைக்கு விடுவார் பரமு.


''வயசானவங்கன்னாலே அலர்ஜிப்பா... பொழுது போகாம அல்லாடும். மாடியில் இருந்து நான் ஒரு நாளைக்குப் பத்துத் தரம் கீழே போவேன். வருவேன்... நிறுத்தி வச்சு மணிக்கூறு கணக்காப் பேசும்... 'திடுக் திடுக்'குனு மாடியேறி வரும்... நேரம் காலம் தெரியாம அழுத்தமா உட்கார்ந்துடும். வேதாந்தம் பேசும். நமக்குச் சரிப்பட்டு வராது...

மிடில் ஏஜ்லேயும் என்ன அவஸ்தைன்னா, பத்துப் பன்னெண்டு வயசுல வால் பசங்க இருக்கும். சும்மா, 'பந்து விழுந்துடுத்து மாமா', 'ஸ்கோர் என்ன மாமீ'ன்னு மேல வந்து கழுத்தை அறுக்கும்... 'யங் கபிள்'னா நோ ப்ராப்ளம்... குழந்தை பொறந்து 'தத்தக்கா புத்தக்கா'ன்னு மாடி ஏற ஆரம்பிச்சதுன்னா, வீட்டைக் காலி பண்ணிடச் சொல்லிடுவேன். இதனாலே 'பரமேஸ்வரன் முசுடு'ன்னு சொல்லுவாங்க. பட் ஐ டோன்ட் கேர்...''

கணவரின் இந்த சுபாவத்தினாலேயே சுகந்தா, அவரிடம் சண்டை போடுவாள்.

''நீங்க இப்படி மனுஷாளே வேண்டாம்னு இருக்கறதுனாலேதான், ஒரு ஈ காக்கா கூட நம்ம வீட்டை எட்டிப் பார்க்க மாட்டேங்கறது. குழந்தைகள் இல்லாத வீடு ஒரு வீடா... 'வேண்டாம்; வேண்டாம்'னா தெய்வம் எப்படிக் கண் திறக்கும்?''

''தெய்வத்து மேல ஏன் பழி போடறே? அதான் ஒண்ணுக்கு ரெண்டா உனக்குக் கொடுத்திருக்கே... அதுகளுக்குப் பொறக்கலைன்னா தெய்வம் என்ன செய்யும்? உன் மாப்பிள்ளைக்கு வாரத்துல ஆறு நாள் ஏதோ ஒரு தீவுல வேலையாம். ஏழாவது நாள் வீட்டுக்கு வந்தவுடனே அம்மா, அப்பா, அக்கா, அக்கா புருஷன்னு கும்பலைச் சேர்த்துட்டு, சப்பாத்தியையும், கபாப்பையும் தின்னுட்டு கவாலே பாடிட்டு, தூங்கப் போயிடறான்.



• டி.வி நடிகர் பாஸ்கர்

மறுபடி திங்கட்கிழமை பாவ்பாஜி பன்னைத் தின்னுட்டே ஃபிளைட் ஏறிடறான். அப்படியே வீட்டுல தங்க நேர்ந்தாலும், தாடி மீசைக்கு எண்ணெய் தடவி சிசுருஷை செய்யவே நேரம் சரியாயிடறது. இதுல பெண்டாட்டிய கவனிக்க ஏது நேரம்... அசடு மாதிரி அழாதே... கோயிலைச் சுத்தினாப்பல ஆச்சா... பொண்டாட்டியச் சுத்தணும்டீ. இப்ப நான் இல்லே?''

''போதுமே... அசடு நானில்லே. நீங்கதான். அம்பது வயசுக்கும் காதல் மன்னன் மாதிரி கோணப் பார்வை பார்க்க வேண்டாம்...''

சுகந்தா அந்த நேரத்துக்கு 'சுள்'ளென எரிந்து விழுந்தாலும், அப்புறம் இதற்காக ரொம்பவுமே வருத்தப்படுவாள்.

திருமணமாகி வந்த நாளிலிருந்து இன்று வரையில், முதல் பிரசவத்துக்காக மூன்று மாதங்கள் போல பெண்டாட்டியை, பிறந்த வீட்டுக்கு அனுப்பியிருந்ததைத் தவிர - மற்றபடி விளையாட்டுக்குக் கூடப் பிரிந்ததில்லை.

இதற்காகவே இரண்டாவது பிரசவத்தை தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டு, தானே மாங்கு மாங்கென்று பிறண்டைத் துவையலும், மிளகுக் குழம்புமாய் பத்தியம் செய்து போட்டார்.

அதிசயமாய் வீட்டுக்கு யாராவது உறவினர்கள் வந்தால் அல்லது இவர்கள் ஏதாவது கல்யாணம், விசேஷம் என்று போக நேர்ந்தால்கூட, பரமுவின் பார்வை முழுவதும் பெண்கள் பகுதியிலேயே வட்டமிடும்...

''எதுக்காக இப்படி விறைச்சு விறைச்சுப் பார்க்கணும்? மானம்



லிமரைக்கூ...


ஜெயிக்கும் வரை வந்தான் தொகுதி;
ஜெயித்ததும் விரைந்து போய்
டெல்லியிலே ஆனான் அகதி.



சாகடிக்கப்பட்டு விட்டான் வீரப்பன்;
அவன் பதுக்கி வைத்துள்ளதாய்
நம்பிடப்படும் பணத்துக்கு இனி
யாரப்பன்?



டீவியிலே மழைவருமென
வானிலை!
சொன்னதிலிருந்து ஒரு
துளியைக்கூட காணலை.



கவிதை எழுதிய பேனா;
திரையுலகம் சென்றதும்
எழுதப் பழகிக்கொண்டது
'கானா.

கடைசிவரை தரப்படாத லஞ்சம்;
கோப்பை அங்குலம்கூட
நகர விடாமல் செய்தது வஞ்சம்.

- வீ. விஷ்ணுகுமார்

போறது..."

"ஒருத்தி முஞ்சியும் பார்க்கற மாதிரியில்லே. நீ எங்கேயிருக்கே, கிளம்பலாமான்னு பார்த்தேன்... அசடே..."

இப்படி பரமுவின் வாயால் தினமும் ஆயிரம் அசட்டுப் பட்டம் வாங்கினாலும் - அவரது இதயத்தில் என்றென்றும் இளமையுடன் கொலுவிருக்கும் சுகந்தா, மகளின் பிரசவத்துக்கு உதவியாக இருக்க அமெரிக்கா போகிறாள்.

"ஆறு மாசம்... பஞ்சாபிக்காரன் பிள்ளையை வளர்க்க நீ போகணுமா...?"

"ஆறே மாசம்... ஓடற ஓட்டம்... நீங்கதான் ஏதோ ரவுஸிங் சென்டர்னு தினமும் போய் உட்காருவேளே... அதுல ஈ மெயிலோ, கொசு மெயிலோ ஏதாவது அனுப்புங்கோ..."

"அசடே... அது பிரவுஸிங் சென்டர்... உனக்கும் இன்டர்நெட்டுக்கும் ஸ்னானப்பிராப்திகூட கிடையாது... நான் எழுதற ஈ மெயிலை எப்படிப் படிப்பே... அதுக்கு ஒன் பொண், மாப்பிள்ளை எல்லாரும் வரணும். அதெப்படி ஓபன் லெட்டர்லே 'செல்லக்குட்டீ'ன்னு உன்னைக் கொஞ்சறதாம்?"

சுகந்தா சிரித்தாள்.

"அசடு வழியறது... ஈமெயில்னாதானே எல்லாரும் படிப்பாங்க... யாருக்கும் தெரியாம, நான் மட்டும் படிக்கறாப்பல ஒரு 'பிளாக்மெயில்' பண்ணிடுங்களேன்... கம்ப்யூட்டர்லே ஏதாவது வழி இருக்கும்..."

"அசடே, 'பிளாக் மெயில்'ங்கறது வேற. உன்னை யாராவது கடத்திட்டுப் போய், 'இவ்வளவு ரூபா கொடுத்தாத்தான் விடுவிப்பேன்'னு மிரட்டினா, அதுக்குப் பேருதான் 'பிளாக் மெயில்' இப்பக்கூட 'ஈராக்'லே நடக்கறது பாரு..."

இதைச் சொன்னவர் வெற்றிலைப் பாக்கு புரையேறச் சிரித்தார்.

"நாப்பத்தஞ்சு வயசுக்கு உன்னை எவன் 'கிட்நாப்' பண்ணுவான்... அதுக்கு என்னை மாதிரி எவனாவது ஏமாந்த சோணகிரி அமெரிக்காவுல இருந்தாத்தான் உண்டு."

கணவரின் கிண்டல், கோபத்தை உண்டு பண்ணினாலும், அவரை அதிகமாய் நேசிக்கிற ஒரே காரணத்தினால், சுகந்தாவும் 'குபுக்'கெனச் சிரித்தாள்... உண்மையிலேயே .

வெகு சீக்கிரத்தில் தான் கடத்தப்படப் போவதை அறியாமல்...

(தொடரும்)



• பார்த்தசாரதி

சிலருக்குச் சுற்றுலா போறது குஷி... பலருக்கு சினிமா பார்க்கறதுன்னா குஷி... ஆனா 'மத்தவங்களுக்குத் தொண்டு செய்யறதுதான் எங்களுக்கு குஷி'ன்னு சொல்றவங்களைப் பார்த்திருக்கீங்களா? இதோ நாம சந்திக்கப் போற நாலு பேரும் அந்த ரகம்தான். இவங்கள்லாம் 'சேவா ரத்னா' பட்டமெல்லாம் வாங்கினவங்க கிடையாது. ஆனால் தொடர்ந்து சேவை செய்துக்கிட்டு வர்றாங்க, வெளியில் தெரியாம!



மனிதம் இன்னும் இருக்கு!

பார்த்தசாரதி :

நான் ஒரு போர்வெல் காண்ட்ராக்டர். எனக்கு இருபத்தைஞ்சு வயசு இருக்கும்போது, கஷ்டப்படறவங்களுக்கு உதவி செய்யணும்ங்கற எண்ணம் வந்தது. ஆரம்பத்துல சின்னச் சின்னதா ரத்ததானம் பண்றது, மரம் நடுறதுன்னு செய்துக்கிட்டு இருந்தேன். அந்தச் சமயத்துலதான் தமிழ்நாட்டை ஒரு பெரும்புயல் கடுமையாத் தாக்குச்சு. அதுல பாதிக்கப்பட்டவங்களுக்கு உணவு ஏற்பாடு பண்றது, பழைய துணிகள் சேகரிச்சுத் தர்றதுன்னு தொடர்ந்து ஈடுபட ஆரம்பிச்சேன். இன்னிக்கும் தீ விபத்தோ, வெள்ளமோ எங்காவது வந்தா நிச்சயம் என்னால முடிஞ்ச உதவியை செய்வேன். இப்போ கூட கடலூர் போயி 'சுனாமி'யால பாதிச்சவங்களுக்கு உதவி செய்துட்டு வந்தேன். எனக்கு ரொம்ப திருப்தி தந்த விஷயம்னா, அது மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தறதுக்கு முன்னாடியே என்னால முடிஞ்ச வரைக்கும் அதுபற்றி மக்கள்கிட்ட எடுத்துச் சொன்னதுதான்.



• சேஷாத்ரி

சேஷாத்ரி :

மத்தவங்களுக்கு உதவணும்னு எனக்கு உணர வைச்சதே என்னுடைய பள்ளிப் பருவம்தான். அப்போ நான் ஸ்கௌட்ல இருந்தேன். அப்போ ஊர் ஊரா கேம்ப் கூட்டிட்டுப் போவாங்க. ஒரு வருஷம் குடிசைப் பகுதிகளை சுத்தம் செய்யச் சொல்லி, எங்களை ஒரு ஊருக்கு கூட்டிட்டுப் போனாங்க. அப்போ அவங்க

படற கஷ்டம் இலேசா எனக்குள்ள சின்ன தாக்கத்தை ஏற்படுத்துச்சு. நாம பெரிய ஆளா வந்தவுடனே, இவங்களுக்கு என்ன தேவையோ அதைச் செய்யணும்னு நினைச்சேன். இன்னிக்கு நான் ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியாவில வேலை செய்யறேன். இன்னிக்கும் என்னால முடிஞ்சதக் கொடுத்துக்கிட்டு இருக்கேன். ஆறு மாசத்துக்கு ஒரு தடவை ரத்த தானம் பண்றேன். என் குருப் ரத்தம் ஒருத்தருக்குத் தேவைப்படுதுன்னா, டாக்டர் என்கிட்ட தகவல் கொடுத்துருவாங்க. நேர்ல போய் ரத்தம் கொடுப்பேன். சுவாமி தரிசனத்துக்கு வர்ற பக்தர்களுக்கு உதவுறதுன்னா, எனக்கு சின்ன வயசுலருந்தே ஆர்வம் ஜாஸ்தி. கூட்டத்தை ஒழுங்குபடுத்தறது, தங்கறதுக்கு இடம் அரேஞ்ச் பண்ணித் தர்றதுன்னு பலதும் செய்வேன்.

• ராகவன்



ராகவன் :

வயசானவங்கன்னு சொன்னாலே நிச்சயமா அவங்களுக்குத் தேவை அன்பும், பாசமும்தான். ஆனா அதைக்கூட தராம பல பேர் இப்போ பெத்தவங்களை அனாதை இல்லத்துல சேர்த்துடறாங்க. அந்த மாதிரி அனாதை இல்லத்துக்குப் போயி, அங்க இருக்குற பெரியவங்களோட, ஒரு மணி நேரமோ, ரெண்டு மணி நேரமோ அன்பா பேசிட்டு வர்றது எனக்குப் பிடிக்கும். அதுதான் எனக்குத் தெரிஞ்சி உண்மையான தொண்டு. பூகம்பமோ - புயலோ - வெள்ளமோ வந்திடிச்சின்னா, எங்க ஊர்ல இருக்கற சில பேர் கூட்டமா சேர்ந்து நிவாரணப் பணிக்குக் கிளம்பிடுவாங்க. நான் கேட்டரிங் சென்டர் நடத்துறேன். எனக்கு நல்லா சமைக்கவும் தெரியும். அதனால நானும் அவங்ககூட கிளம்பிடுவேன். பாதிக்கப்பட்டவங்களுக்கு நான் ஃப்ரீயா சமைச்சுத் தந்துடுவேன். என்னால முடிஞ்சது உடலுழைப்பு. அதைக் கூடத் தரலைன்னா எப்படி? நான் சமைக்கிற கல்யாண வீடுகள்ல சாப்பாடு ஓரளவுக்கு மீந்துடும்னு தெரிஞ்சா, உடனே அவங்க அனுமதியோட பக்கத்துல இருக்குற அனாதை, சிறுவர், முதியோர் இல்லம் எதுக்காவது தகவல் கொடுத்துடுவேன். கரெக்டான சமயத்துல அனுப்பியும் வச்சிடுவேன்.

கணபதி :

நான் ஒரு கார்ப்பரேஷன் ஊழியர். இல்லாதவங்களுக்கு செய்யறதுதான் உதவி. அதுவும் தேவையான சமயத்துல செய்யணும். எனக்குக் குழந்தைகளுக்குக் கல்வி சம்பந்தமா உதவி செய்யறதுன்னா ரொம்ப இஷ்டம். சிலபேர் குழந்தைகளை ஸ்கூல்லயே சேர்க்கமாட்டாங்க. அவங்ககிட்ட போயி விஷயத்தைச் சொல்லி, ஸ்கூலில் சேர்க்கச் சொல்றது, நோட்-புக் வாங்க வசதி இல்லாதவங்களுக்கு என்னால முடிஞ்சா உதவுறது, இல்லன்னா முடியறவங்ககிட்ட அறிமுகப்படுத்தி உதவி பண்றது, ஸ்காலர்ஷிப் கிடைக்க ஏற்பாடு பண்றதுன்னு கல்வி தொடர்பா என்ன வேணும்னாலும் செய்வேன். அதுக்காக யாரை வேணும்னாலும் போய்ப் பார்த்து, செஞ்சு கொடுப்பேன். பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய தீ விபத்து, வெள்ளம் மாதிரின்னா, உடனே ஸ்பாட்ல இருப்பேன். என்னால முடிஞ்சதை செய்துட்டுத்தான் வருவேன்.

- இரா.முத்துக்குமார்

• கணபதி



குடிகார முள் ஒன்பதைத் தொட்டால் போதும் தாங்களும் அழுது ஒட்டுமொத்த தமிழகத்தையும் கண்ணீரில் கரைய வைக்கும் மெட்டி ஒலி சிஸ்டர்ஸை, ஒரு மாறுதலுக்கு சிரித்த முகத்தோடு பார்க்க வேண்டும் என்கிற நப்பாசையில் ஷூட்டிங் ஸ்பாட்டுக்குச் சென்றோம். சொந்தப் பெயரே மறந்து போகும் அளவுக்கு தனம், லீலா, விஜி, பவானி என்றாகிவிட்ட நால்வரையும் மோதவிட்டு, சிரிக்கவிட்டு, வேடிக்கை பார்த்ததில் குஷியோ குஷிதான்.



பவானி : மை டியர் அக்காஸ், பார்த்திங்களா, நாமெல்லாம் சிரிச்சுச் சிரிச்சு பேசணுமாம். என்ன தைரியம் இவங்களுக்கு? ஒண்ணு தெரியுமா... நிஜத்துல நாங்க அழுமூஞ்சி இல்ல. பயங்கர சிரிப்புப் பார்ட்டிங்க.


* பவானி

தனம் : ஏய் பவானி, போய் விடிய விடிய படிடி. அப்பத்தான் அப்பா இரண்டு மணிக்கு லைட்டப் போட்டு ஃபீலிங்ஸா உன்னைப் பார்த்து அவரு கறுகறுப்பாவாரு.

லீலா : ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம்... பவானியை ஏதோ ஸ்கூல் போற பொண்ணுதானேன்னு நினைக்கறவங்களை முதல்ல திருத்தணும். பி.ஏ. இங்கிலீஷ் லிட்ரேச்சர் முடிச்சு ஒரு ஸ்கூல்ல டீச்சரா வேலை பார்க்கிறவளுக்கு, கிட்டத்தட்ட என் வயசு ஆகுது, பொதுமக்களே... அப்பாடா... இப்பத்தான் நிம்மதி.



பவானி : சொல்லிக்கோங்க. நோ ப்ராப்ளம். தனக்கா, நான் ஏன் தெரியுமா விடிய விடிய படிக்கறேன்? என் அக்காங்களெல்லாம் சரியா படிக்காத தாலதான். (ஏய்... என்று மீதமுள்ள த்ரீ ரோஸஸு"ம் அடிக்க வந்தன) சரி சரி... என்னைப் பார்க்கிறவங்கெல்லாம் 'பவானி, எவ்வளோ நல்லா படிக்

"நாங்க அழுமூஞ்சி
மெட்டி ஒலி சிஸ்டர்ஸ்

இறேம்மா. உன்னைப் பார்த்துத்தான் என் பொண்ணும் நல்லாப் படிக்கறா'ன்னு சொல்லும்போது செம வேடிக்கையா இருக்கும்.

விஜி : ஏங்க்கா, 'மெட்டி ஒலி'யில நம்ம குடும்பங்கள் பிரிஞ்சதால நம்மால இப்ப அடிக்கடி மீட் பண்ணிக்க முடியறதில்லே.

லீலா : ம்... நாம எல்லோரும் கொடைக்கானல், சிங்கப்பூர் ட்ரிப் போனதையெல்லாம் ஆயுசுக்கும் மறக்க முடியுமா? சீரியல்ல போஸ் மாமாவை பாடாபடுத்துற தனக்கா என்ன அருமையா பாடுவாங்கன்னு இந்த டூர்லதான் தெரிஞ்சுக்கிட்டோம்.

தனம் : ஏய் என்னங்கடி, திடீர்னு ஃபீலிங்ஸ் ஆஃப் இண்டியாவா ஆயிட்டீங்க. ஏய் பவானி, சின்னப் புள்ளையாட்டம் கடி ஜோக்கடிப்பியே, எங்க ட்ரை பண்ணேன் பார்ப்போம்.

பவானி : சரிக்கா ஆரம்பிக்கறேன்.. ஆமா நீங்க மென்டல்னு உங்க வீட்ல எல்லோருக்கும் தெரியுமா?

தனம் : இல்லையே... ஏண்டி என்னைப் பார்த்து அப்படிச் சொல்ற?

பவானி : ஓ... அப்ப நீங்க மென்டல்தான். ஆனா வீட்டுக்கு மட்டும் தெரியலை. அதானே. ஹே... (கைகொட்டிச் சிரிக்கிறார்.)

லீலா : அச்சச்சோ, பி.ஏ. முடிச்சும் குழந்தைத்தனம் இவளுக்குப் போகலை பாருக்கா... சிங்கப்பூர் ட்ரிப்புக்காக இவ முதன் முதலா ஃப்ளைட்ல போனப்போ, ஃப்ளைட் டேக் ஆஃப் ஆகும்போது 'என்னக்கா ட்ரெயின்





• விஜி

இல்ல!''



* லீலா

மாதிரி ஊளையிடுது'ன்னு பயந்தாளே. செம ஜோக்கில்லே.

பவானி : அக்கா, அன்னைக்கு நம்ம கேமராமேன் உங்க ஜடையில உங்களுக்கே தெரியாம பேப்பர்ல செஞ்சு வால் கட்டி... ஷாட்ல கூட அது தெரியாம நீங்க நடிச்சீங்களே... ஹா... ஹா... ஹா... அதைவிடவா நான் அப்பாவி!

விஜி : ஏய், என்ன நீ எங்கக்காவைத் திட்ற. அதுக்குத்தான் நான் இருக்கேன்ல, ஆங்....

லீலா : சரி சரி, மானத்தை வாங்காதே. ஆமா, இப்ப எல்லோரும் மெட்டி ஒலி எப்ப முடியும்னு சதா கேட்டு நச்சரிக்கறாங்களே.

விஜி : சிம்பிளா சொல்லிடு. நைட் 9.30க்குத்தான் முடியுதுன்னு. நமக்கே அன்னைக்கு ஸ்பாட்டுக்கு வந்த பிறகுதான் ஸீன் என்னன்னு தெரியுது.

தனம் : சோகமா ஸீன் நடிக்கும்போது செம காமெடியா இருக்கும் இல்லே. அட நாம தான் வேற வழியில்லாம ஸீன்ல இன்வால்வ் ஆகி அழறோம்னா, ஷாட் முடிஞ்சு பார்த்தா டெக்னீஷியன்களெல்லாம் கண் கலங்கி நின்னுட்டிருப்பாங்க. (யூனிட்டில் பிறகு விசாரித்தபோது தெரிந்தது. அனைவரும் அழுதது நடிப்பினாலல்ல. டீ.வி. நேயர்களை நினைத்து என்று).

பவானி : ஓ.கே. விஜிக்கா, சொல்லுங்க... ஒரு காட்ல உலவிட்டிருந்த பத்து மான்கள்ல நாலை மட்டும் சிங்கம் அடிச்சு சாப்பிட்டுச்சாம். ஏன் மீதி மானையெல்லாம் திங்கலை?

விஜி : ஏன் அதெல்லாம் குளிக்கலையா?

பவானி : ச்சீ... ஏன்னா அதுங்கெல்லாம் லயன்ஸ் க்ளப் மெம்பர்ஸ்!

தனம் : வாங்க வாங்க. இப்போ நான் கேக்கறதுக்கு பதில் சொல்லுங்க. ஒரு குளத்துல குளிச்சிட்டிருந்தவனை லபக்குனு முதலை கவ்விப் பிடிச்சிடுச்சு. என்ன சொன்னா அந்தப் பையனை முதலை விட்டுடும்?

பவானி : (நீண்ட நேரம் யோசித்து விட்டு) தெரியலையேக்கா.

தனம் : தெரியலையேன்னா விட்டுடுமா?

பவானி : ஐய்யய்யோ. அது வந்து...

தனம் : ஐய்யய்யோ அதுவந்துன்னா விட்டுடுமா?

பவானி : ஆஹா, இதானா விஷயம்? என் ஷாட்டுக்கு டைமாச்சுப்பா. நான் கிளம்பறேன். ஐயாம் எஸ்கே...ப்!



* தனம்

(கடைக்குட்டி சிட்டாக அங்கிருந்து பறக்க, நடந்த காமெடியைப் பார்த்து மெய்மறந்து சிரித்தது மூவர் குழு. இந்த வெடிச்சிரிப்பு ஒலியில் மீண்டும் சுனாமிதான் வந்துவிட்டதோ என்று யூனிட் சில நிமிடங்கள் பதறிப் போனது நிஜம்.)

- செந்தில்

படங்கள் : **ஸ்ரீஹரி**



"இனி பிட் அடிக்கமாட்டேன்!"

வெளியே தலை காட்டவே பயப்படுகிறார் பரத். ஷங்கரின் பிரம்மாண்ட இயக்கத்தில் உருவான 'பாய்ஸ்' படம் தந்த புகழை விட, பல மடங்கு அள்ளிக் கொடுத்துவிட்டது 'காதல்'.

"'பரத் என்றால் துறுதுறுப்பான டான்ஸர், நன்றாக ஆடுவான்' என்றுதான் 'ஃபோர் ஸ்டூடண்ஸ்' வரை சொன்னார்கள். 'நல்ல பாத்திரம் கிடைத்தால் பின்னிடுவான் இந்த பரத்' என்று 'காதல்' வந்த பிறகு சொல்கிறார்கள். எனக்கு இப்படியொரு கேரக்டரைக் கொடுத்த இயக்குனர் ஷங்கர், பாலாஜி சக்திவேல் இருவருக்கும் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்" என்னும் பரத், 'காதல்' படத்தின் இறுதிக் காட்சியில் எப்படி இத்தனை இயல்பாகச் செய்தாராம்?

"சிறு நகரங்களில் திரியும் தீவிர மனநோயாளிகளைத் தேடிப் போய் அவர்களைப் பல நாட்கள் கவனித்து, அதில் கிடைத்த பாதிப்பைக் கொண்டு நடித்தேன். இப்போது சீயான் விக்ரம் தொடங்கி பாராட்டுகிறார்கள்" என்கிறார்.

"பி.ஏ தேர்வில் பிட் அடித்த விவகாரம் உண்மைதானா?" என்று கேட்டால் "இனி மேல் அடிக்க மாட்டேன். ஆளை விடுங்க தலைவா!" என்று கையெடுத்துக் கும்பிட்டார்.

பாவம்! விட்டுவிடலாம்.



- ஜெ

கிராமத்து குஷி!



திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி கிராம விவசாயி வண்ணமுத்து. ஒரு ஏக்கர் வயலில் நெல் பயிரிட்டிருக்கிறார். இருபத்தைந்து நாள் பயிர். வளர்ச்சியின் போதே பயிருக்குள் பச்சை பிடிக்காமல், ஒரு பகுதியில் வெளுத்த மாதிரி காணப்பட்டுள்ளது. பயிர்களைக் காக்கும் பொருட்டு அவர், செம்பட்டி கிராமத்தில் கடந்த மூன்று மாதங்களாக இயங்கி வரும் கிராமவள மையத்துக்கு வந்து சேருகிறார். ஆலோசனை கேட்கிறார். அந்த மையத்தின் திட்ட அலுவலர் சில விவரங்களைச் சொல்கிறார். மேலும் விவரங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென அந்த விவசாயி விரும்புகிறார். செம்பட்டி கிராமத்து கிராம வள மையத்திலிருந்து திருவையாறு மையத்தில் வீடியோ கான்ஃபரன்சிங் மூலமாக கேள்விகளும், பதில்களும் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. சந்தேகங்கள் அனைத்துக்கும் விளக்கங்கள் பெற்ற வண்ண முத்துவின் முகத்தில் திருப்தி தெரிகிறது.

இதுபோன்ற கிராம வள மையங்கள் இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில் நான்கு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமும் (ISRO) எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையமும் இணைந்து இவற்றை நிறுவியுள்ளன. சென்னை தரமணி, தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு, திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி, இராமேஸ்வரம் அருகில் தங்கச்சி மடம் ஆகிய நான்கு இடங்களில், கிராம வள மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

சென்னை, தரமணி எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில், கிராம வள மையங்களின் மாநில மையம் இயங்கி வருகின்றது. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் இதர கிராம வள மையங்கள் மூன்றும், மாநில மையத்தோடு செயற்கைக்கோள் மூலமாக இணைக்கப்பட்டுள்ளன. அந்தந்தப் பகுதிகளுக்கான தகவல்கள், கிராம மக்களைச்

• கிராம வள மையம், திருவையாறு



சென்றடையச் செய்வதே இதன் நோக்கம்.

கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து, குடிநீர், பாசனநீர், வேலைவாய்ப்பு போன்ற துறைகள் சார்ந்த தகவல்கள், இந்த மையங்கள் மூலமாகக் கிடைத்து வருகின்றன. இயற்கை வளங்கள், குடிநீர் கிடைக்கும் இடங்கள், நிலத்தடி நீர் வளத்தைப் புதுப்பிக்கும் வாய்ப்புகள், நீர் சேமிப்பு, தரிசு நிலங்களை மேம் படுத்துதல், கிராம வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், சுற்றுச்சூழல் மேம்பாடு கட்டமைப்பு வளர்ச்சி, சுழற்சி முறை வேளாண்மை போன்றவை பற்றிய தகவல்கள், இந்த மையங்களில் பரி மாறிக் கொள்ளப்படுகின்றன.

இராமேஸ்வரம் தீவின் மையப் பகுதியாக விளங்குகின்ற தங்கச்சிமடம், மீனவர்களுக்கென்றே பயன்படும்படி யாக அமைக்கப்பட்டுள்ளது.

செயற்கைக்கோள் உதவியுடன் இயங்கும் மின்னணுத் தகவல் பலகை ஒன்று, இக்கிராம வள மையத்தில் பரி சோதனை முயற்சியாக அமைக்கப்பட் டுள்ளது. இந்த மின்னணுத் தகவல் பலகையை, ஐதராபாத்தில் உள்ள இந்திய தேசியக் கடல் வள சேவை மையம் வழங்கியுள்ளது. செயற்கைக் கோள் மூலம் பெறப்படும் தகவல்கள், அங்கிருந்து நேரடியாகத் தகவல் பல கைக்கு வந்து சேர்கின்றன. இந்தத் தகவல் பலகையில், கடலில் எந்தப் பகுதியில் மீன் வளம் உள்ளது? அதில் எந்த வகையான மீன்கள் உள்ளன? அந்த இடம் எத்தனை அட்சரேகை, தீர்க்க ரேகையில் உள்ளது போன்ற விவரங்கள், செயற்கைக்கோள் உதவியுடன் பதிவாகின்றன.

"மின்னணுத் தகவல் பலகையில் 'ஸ்க்ரோலிங்' முறையில் வரும் எழுத்துக்கள் மட்டும் ஆங்கிலத் தில் உள்ளன. இதனையும் தமிழாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ் வடிவம் பெற்றவுடன், மீனவர்கள் அதிகம் கூடுகின்ற பாம்பன் பகுதியில் பொருத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் பெரிதும் பயன் அடைவார்கள். மேலும் நமது கடல் பகுதிகளுக்குள்ளேயே போதிய மீன் பிடிக்க வழி காட்டப்படுவதால், இனி தமிழக மீனவர்கள் எல்லை தாண்ட வேண்டிய அவசியம் இல்லை!" எனக் குறிப்பிடுகிறார் தங்கச்சிமடம் கிராம வள மையத்தின் திட்டச் செயலாளர், வேல்விழி.

திருவையாறு கிராம வள மையத்தில் தொடு திரைக் கணினி ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது. லண்டன் மாநகரில் உள்ள ரீடிங் பல்கலைக்கழகம் அதை உருவாக்கித் தந்துள்ளது. அந்தத் தொடு திரைக் கணினியின் உள்ளே கால்நடைப் பரா மரிப்பு குறித்த தக வல்கள் விளக்கப் படங்களுடன் குவிந்துள்ளன. இதன் மூலமாக விவசாயிகள் தங் கள் கால்நடை வளர்ப்பு பற்றிய முழு விவரங்களை யும், கிராம வள மையத்துக்கு வந்து தெரிந்து கொள் கிறார்கள்.

மகளிர் சுய உத



• முருகன்



• தொடுதிரைக் கணினியில் தகவல் தேடும் விவசாயி...

விக்குழுவினரின் வரவு செலவுக் கணக்குகளை நிர்வகிக்க, தனியாக மென்பொருள் ஒன்றும், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் கணக்குகள் கணினியில் பதிவு செய்யப்படுகின்றன. கிராம வள மையத்தின் ஒரு பகுதியில், கிராமவாசிகளுக்காக கணிப்பொறி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.



• கிராம வள மைய செயல்பாடு விளக்கப்படுகிறது...

ஓர் உலகு சர்வதேசம் (One world International) என்ற அமைப்புடன் இணைந்து, திறந்த நிலை தகவல் வலையம் (Open knowledge Network) என்கிற தகவல் வலைப் பின்னல் ஒன்றும் இங்கு பின்னி விடப்பட்டுள்ளது. அதன் செய்தி சேகரிப்பாளராக ஜி. முருகன் பணியாற்றி வருகிறார். திருவையாறு சுற்று வட்டாரப் பகுதி கிராமங்கள் பலவற்றுக்கும் சென்று, அங்கு வயோதிகர்களைச் சந்திக்கிறார். அவர்களிடம் நமது பழைமையான விவசாய முறைகள், மருத்துவ சிகிச்சைகள் குறித்த தகவல்களைத் திரட்டி குறிப்புகள் எடுத்துக் கொள்கிறார். அவற்றை திறந்தநிலை தகவல் வலையத்தில் தமிழில் பதிவு செய்து விடுகிறார். மறைந்து வரும் அரிய பொக்கிஷங்களான மருத்துவக் குறிப்புகளும், பழைமையான விவசாய முறைகளும் திறந்த நிலை தகவல் வலையம் வாயிலாக உலா வந்து கொண்டேயிருக்கின்றன.



• வீடியோ கான்பரன்சிங் மூலம் உரையாடும் சூரியநாராயணன், அமுதா...

"இந்தியாவின் ஆறரை லட்சம் கிராமங்களிலும், இன்னும் மூன்று ஆண்டுகளில் ஆங்காங்கே கிராம வள மையங்களும், பரவலாக கிராமத் தகவல் மையங்களும் கால் பதிக்க உள்ளன. இதனால் கிராமப்புற மக்களுக்கு அதி நவீன உயர் தொழில்நுட்பங்கள் பலவும் சென்றடைய இருக்கின்றன. இது போன்ற கிராம வள மையங்கள் ஆற்றி வரும் தகவல் புரட்சி, கிராமப்புற அறிவுப் புரட்சிக்கு வித்திட்டு வருகின்றன!" எனக் குறிப்பிடுகின்றனர் திருவையாறு கிராம வள மையத்தின் திட்ட இணை அலுவலர்களாகப் பணியாற்றி வரும் க. அமுதா மற்றும் எஸ். சூரிய நாராயணன் இருவரும்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ஆறு மணிக்கு அலாரம் அடித்து விட்டது.

கற்பகம் புரண்டு படுத்தாள். மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள்.

பக்கத்தில் படுத்திருந்த கணவன் முகுந்தன், நல்ல உறக்கத்தில்!

அவிழ்ந்த கூந்தலை முடிந்து கொண்டு கற்பகம் எழுந்து நாலடி நடக்க, தலை சுற்றுவதைப் போல இருந்தது. படக்கென கட்டிலில் உட்கார்ந்தாள். அவள் உட்கார்ந்த வேகத்தில் முகுந்தன் விழித்துக் கொண்டான்.

"எனக்குத் தலை சுத்துதுங்க! நிக்க முடியல..." முகுந்தன் பதற்றமாக எழுந்து விளக்கைப் போட்டான்.

"என்னாச்சு?"

"தெரியலை. சுத்தமா முடியலை."

"சரி! நீ படு. நான் ஹரியை எழுப்பறேன்! வயசு நாப்பதைத் தாண்டினா எல்லா வியாதியும் வரும். ரத்த அழுத்தம் இருக்கும். டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போறேன்!"

ஹரியை எழுப்பி உட்கார வைத்து விட்டு வருவதற்குள், கற்பகம் வாந்தி எடுக்கும் ஓசை கேட்டது.

முகுந்தனின் எழுபது வயது அம்மா எழுந்து வந்தார்.

"யாரு வாந்தி பண்றது?"

"கற்பகம்தான். தலையும் சுத்துதாம்."

மாமியார் அருகில் வந்தார்.

"நான் சமைச்சுக்கறேன் கற்பகம். நீ முடியலைன்னா படு!"

"உங்களால முடியாது அத்தே!"

"முகுந்தன் கூடமாட உதவி செய்வான். நீ படு!"



ஜனனம்

தேவிபாலா

காலை ஏழு மணிக்குள் கற்பகம் இல்லாத குறை நன்றாகத் தெரிந்தது!

ஹரியைத் தயார் செய்து பள்ளிக்கு அனுப்பி விட்டு, முகுந்தன் ஆட்டோ கொண்டு வந்தான்.

இருவரும் ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள். பரிசோதித்தார் டாக்டர்.

சிறிது நேரத்தில் ரிப்போர்ட் வந்தது.

"வாழ்த்துக்கள்! நீங்க கர்ப்பமா இருக்கீங்க! அனிமிக்கா இருக்கீங்க! டானிக் எழுதித் தர்றேன். காய்கறிகள், பழங்கள் சாப்பிடணும்!"

இருவரும் வெளியே வந்தார்கள். எதுவும் பேசிக் கொள்ளவில்லை. வீடு திரும்பினார்கள்.



"என்னடீ கற்பகம்?"

"கர்ப்பம் ஊர்ஜிதமாயிருக்கும்மா!"

மாமியார் முகம் சட்டென மலர்ந்தது!

"பெருமாளே! ஒரு பேத்தி வேணும்னு ஆசைப்பட்டேன். பேரன் பொறந்து பதினேழு வருஷம் கழிச்சு, பெருமாள் கண் திறந்திருக்கார்!"

இருவரும் பேசவில்லை!

"நீ ஜாக்கிரதையா இரு. வீட்டு வேலைகளை நான் பாத்துக்கறேன்."

முகுந்தன் உள்ளே போய் விட்டான்.

பின்னாலேயே கற்பகம் வந்தாள்.

"சரி! நான் ஆபீசுக்கு புறப்படறேன் கற்பகம்!"

"கொஞ்சம் இருங்க! பேசணும்!"

"என்ன?"

"டாக்டர் கர்ப்பம்னு சொன்னது முதல் உங்க முகத்துல சிரிப்பே இல்லை! நீங்க இதை விரும்பலையா?"

படக்கெனத் திரும்பினான் முகுந்தன்!

"ஆமாம் கற்பகம்!"

கற்பகம் பேசவில்லை.

"உனக்கு நாப்பத்தி ரெண்டு, எனக்கு நாப்பத்தி எட்டு. நான் அறுபதுல ரிடையர் ஆகும்போது, நம்ம குழந்தைக்கு பன்னண்டு வயசா இருக்கும்! அதை ஆளாக்கி விடற வரைக்கும் நான் உயிரோட இருக்கணுமே கற்பகம்?"

அவன் குரல் இடறி விட்டது.

"என்னங்க நீங்க? உணர்ச்சி வசப்படறீங்களா?"

"தாண்டி யோசிக்கும்போது பயமா இருக்கு கற்பகம்! வெளில கேட்டாலும் சொல்லக் கூச்சமா இருக்கு! உனக்கும் வயசு கடந்த பிறகு, இந்தப் பிள்ளை பிறக்கும் போது சிக்கல்கள் நிறைய வரும். இப்ப ஆரோக்கியமா இருக்கற நீ, இதன் காரணமா நோயாளியா ஆயிடக் கூடாதில்லையா?"

"........!"

"நான் பேசிட்டே இருக்கேன். நீ எதுவுமே பேசலைன்னா எப்படி?"

"நீங்க சொல்ற எல்லாமே நியாயம் தான். நான் எதையும் தப்புனு சொல்ல மாட்டேன்!"

"என் ஒரு சம்பளத்துல இப்பவே நாலு ஜீவன் சாப்பிட அவஸ்தையா இருக்கு. எந்தச் செலவையும் குறைக்க முடியலை. ஹரி பிளஸ்டூ முடிச்சா, மேல் படிப்புக்கு எத்தனை வேணுமோன்னு தெரியல. ஒரு புது வரவுக்காக இன்னும் கஷ்டப்படணுமில்லையா?"

"ஆமாம்!"

"கலைச்சிடலாமா?"

"வேற வழியே இல்லை! இதைப் பெத்

துக்கற காரணமா, பின்னால வரக்கூடிய பிரச்னைகள் ஒரு பக்கம் இருக்கட்டும். இப்ப நடக்கறதைப் பாருங்க! நான் ஓய்வுல இருந்தா, இந்த வீடு தாங்குமா? ஒரு விடியற்காலையை சமாளிக்கவே உங்களால் முடியலை."

"அதுதான் பயம்மா இருக்கு. ஆனா பேத்தி வரப் போறான்னு அம்மா ஆசைப் படத் தொடங்கியாச்சு!"

"நான் பேசறேன்!"

இருவரும் வெளியே வர, பூஜை அறையில் அம்மா விளக்கேற்றி, ஸ்லோகங் களைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"அம்மா!"

மெதுவாக எழுந்தாள்.

"பேத்தி பொறந்தா காயத்ரி - பேரன் பொறந்தா ஆதித்யன்!"

திரும்பி, கற்பகத்தைப் பார்த்தான் முகுந்தன்!

"இந்தக் குழந்தை வேண்டாம்னு நாங்க ரெண்டு பேரும் முடிவெடுத்திருக்கோம்!"

"அதனால?"

"கலைச்சிடலாம்மா!"

"சிவ சிவ! என்னடா பேசற நீ? கலைக்கறதா? பைத்தியம் புடிச்சிருக்காடா உங்க ரெண்டு பேருக்கும்? இந்த வீட்ல ஏழெட்டுப் புள்ளைங்கா இருக்கு? ஹரி பொறந்து பதினேழு வருஷம் கழிச்சு ஒண்ணு வரப் போகுது! அதைக் கலைக் கப் போறீங்களா?"

"புரிஞ்சு பேசும்மா! புள்ளைங்களை பெத்துட்டு வெறும் சோறும் துணிமணி யும் மட்டும் குடுத்தா போதாதும்மா! அதுங்களை ஆளாக்கணும். நல்லாப் படிக்க வைக்கணும். பொண்ணாப் பொறந்தா, நல்ல புருஷனைத் தேடித் தரணும். அதுங்களை சமூகத்துல கௌரவமா நிக்க வைக்க பல லட்சங்கள் செலவாகும்! அத்தனை சம்பாதிக்க எனக்குத் துப்பிருக்கா?"

"நான் எட்டுக் குழந்தைங்களைப் பெத்தேண்டா! எல்லாரும் நல்லாத்தானே இருக்கீங்க! ஏன்? கற்பகத்துக்கு நாலு அக்கா, தங்கச்சிங்க! எல்லாரும் நல்ல படியா வாழலையா?"

"என்னைப் பேச விடும்மா! தயவு பண்ணி கோவப்படாதே! நீ எட்டு பெத்தே! நாங்க யாரும் ஓஹோன்னு இல்லை! அப்பாவுக்கு விவசாயம். பணப் பற்றாக்குறை. எங்களை வளர்க்க நீங்க ரெண்டு பேரும் பட்ட கஷ்டம் கொஞ்சமில்லை! பெருசா படிக்க வைக்க முடியலை. அதனால சுமார் உத்யோகம். அதனாலதான் மாசக் கடைசியில இப்பவும் போராட்டம். காலம் முன்னைய மாதிரி இல்லைம்மா! தேவைகள் அதிகமாயிடுச்சு. அதைச் சந்திக்க அதிகம் சம்பாதிக்கணும். இருக்கறவங்க வாழறதே பிரச்னை! இன்னொரு ஜீவன் வந்துட்டா எப்படிம்மா?"

கற்பகம் அருகில் வந்தாள்.

"அத்தே! ஹரி பிளஸ்டூ படிக்கறான். அவன் மேல உள்ள கவனம் எனக்குச் சிதறக் கூடாது! அவனோட வாழ்க்கை யின் அடுத்த கட்டத்தைத் தீர்மானிக்கற நேரத்துல, நான் ஓய்வெடுக்க முடியாது! கூடாது! நார்மல் டெலிவரின்னா குறைஞ்ச பட்சம் பதினைஞ்சாயிரம். சிசேரியன்னா இருபத்தி அஞ்சுக்கு மேல.. அப்புறம் குழந்தை வளர்ப்பு, எப்படி.... எப்படி அத்தே?"

"இந்த அளவுக்கு நியாயம் பேசற ரெண்டு பேரும் அது உருவாகாம தடுத்திருக்கணும்!"

இருவருக்கும் 'சுருக்'கென்றது.

"ஒரு உயிரை உருவாக்கிட்டு, அதை அழிக்கறது மகாபாவம். சுகம் பெரியவங்களுக்கு. வேதனை அந்தச் சிசுவுக்கா!"

"அம்மா!"

"எந்தச் செலவையும் குறைக்க முடி யாது. அது எனக்கும் தெரியும். வரவைக் கூட்ட வழி பாருங்களேன்! அது வளரத் தொடங்கும்போது, ஹரி தலையெடுத்

துடுவான். தம்பியோ, தங்கையோ, அதை அவன் விட்டுடுவானா?"

"எப்படி நம்ப முடியும்? கடமை எங்களுக்குத்தானே அத்தே?"

"அதெப்படிடீ! பெத்த புள்ளைங்களை நம்பணும்! நாங்கள்லாம் நம்பினோம். நாலுக்கு ரெண்டு பழுதாகலாம். விதின்னு விட்டுட வேண்டியதுதான்! இந்தத் தலைமுறைல புள்ளைங்களுக்கு நல்ல விலாசம் தர்றீங்க. ஆனா அதுங்க மேல நம்பிக்கை இல்லை! அதனாலதான் புள்ளைங்களுக்கும் பெத்தவங்க மேல ஒட்டுதல் இல்லை! நாங்க உங்களை



எதிர்நோக்கி வாழலைன்னு சொல்லும் போது, அதுங்களுக்கும் ஆத்திரம் வருது! இப்ப செய்ய வேண்டியது உங்க கடமை! நாளைக்குத் தலையெடுத்ததும் திருப்பிச் செய்ய வேண்டியது புள்ளைங்க கடமை. அந்த உணர்வை உண்டாக்கணும்."

"சரிம்மா! நீ என்னதான் சொல்ற?"

"உங்க பிள்ளை ஹரி! அவனையும் கேக்கணும்!"

"ஹரியைக் கேக்கறதா?"

"அவன் பச்சக் குழந்தை இல்லை! விவரம் தெரிஞ்சவன். கேளுங்க! அவனுக் கும் ஒரு பொறுப்பை உண்டாக்குங்க! பிரச்னைகளைச் சொல்லுங்க! என்ன பதில் வருதுன்னு பாக்கலாம்! உங்க மகன் கிட்ட பாசம் இருக்கா? இல்லை, அவன் சுயநலக்காரனா, தெரிஞ்சிடுமில்லையா? அதை வச்சு உங்க முடிவை எடுங்க!"

இது புதிதாக இருந்தது. முகுந்தனுக்குப் பிடித்திருந்தது.

"சரிம்மா! பேசிடலாம்!"

ஹரி பள்ளிக்கூடம் முடிந்து வந்தான்.

"அம்மா! டாக்டர்கிட்டப் போனியா? என்ன சொன்னார்?"

"ஹரி! இப்படி ஒக்காரு!"

"என்ன? ஏதாவது பிரச்னையா?"

"அதை நீதான் சொல்லணும். உனக் கொரு தம்பியோ, தங்கையோ காலம் கடந்து வரப் போகுது. உங்கம்மா உண்டாகியிருக்கா!"

"கங்கிராட்ஸ்மா!" ஹரியின் முகமெல் லாம் சிரிப்பு!

"ஹரி! இது பொறந்து பன்னண்டு வயசாகறதுக்குள்ளே நான் ரிடையர் ஆயிடுவேன். உன்னைப் படிக்க வைக்க, இப்ப நான் வாங்கற கடனுக்கு, ரிடை யர்மெண்ட் சமயத்துல வர்ற பணம் சரியா இருக்கும். புதுசா வரப்போற குழந்தையை எப்படி நான் ஆளாக்கு வேன்? இதுதான் எங்க குழப்பம்!"

"அப்பா! நான் அதிகபட்சம் ஆறு வருஷத்துக்குள்ள நல்ல நிலைமைக்கு வர மாட்டேனா? அப்ப நீங்க சர்வீஸ்லதானே இருப்பீங்க?"

"ஆமாம்!"

"எனக்கு வரப் போற தம்பிக்கோ, தங்கச்சிக்கோ நான் செய்ய மாட்டேனா?"

"ஹரி!"

"எனக்கு அந்தக் கடமை இல்லையா? நீங்க என்னை ஆளாக்கின மாதிரி, அவ னையோ, அவளையோ நான் ஆளாக் கறேன்! எனக்கும் ஒரு கமிட்மெண்ட் வந்துட்டா, நானும் கடுமையா உழைப் பேனில்லையா? ஏன் கவலைப்பட றீங்க? பாட்டி! அம்மா ரெஸ்ட் எடுக் கட்டும். நாளை முதல் உனக்கு, நானும் அப்பாவும் ஹெல்ப் பண்றோம். என்ன சொல்ற?"

"பாத்தீங்களா என் பேரனை?" என பெருமை பொங்கப் பாட்டி கண்களால் பேச, முகுந்தனும், கற்பகமும் ஹரியை நெகிழ்ச்சியுடன் பார்த்தார்கள்.

இனி கலைப்பதைப் பற்றி அவர்கள் பேச மாட்டார்கள். ●

இந்தப் பேட்டிய ராமதாஸ் படிச்சாருன்னா குஷி வருமா, டென்ஷன் வருமா?



புதுப்படம், புது ஹீரோயின் என்று எக்ஸ்ட்ரா குஷியோடு இருக்கும் எஸ்.ஜே.சூர்யாவிடம் ஒரு ஜிலுஜிலு பேட்டி...

எப்பவும் குஷியோடு இருக்கீங்களே எப்படி?

"பிடிச்ச தொழில்ல இருக்கிறதால சினிமா வேலை 'செய்யும்போதெல்லாம் ரொம்ப குஷியா இருப்பேன். தியேட்டரி லிருந்து சந்தோஷமா திரும்பி வர்ற முகங்களை நினைச்சாலே குஷி தானா வந்துடும்."

டென்ஷனான இயக்குனர் வேலையில், குஷி வர்றது கஷ்டமாச்சே...?

"இயக்குனர்களோட குஷியே டென்ஷனா இருக்கறதுதான்(!). எப்படி வெவ்வேறு விதமான மூட்ல ஆடியன்ஸ் தியேட்டருக்கு வருவாங்களோ, அதே மாதிரிதான் ஆர்ட்டிஸ்ட்டும் ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வருவாங்க. அவங்களை சமயோஜிதமா கூல்படுத்தறதுலேயே இயக்குனர்கள் தானா குஷியாயிடுவாங்க."

அதென்ன, உங்க அடுத்த படத்துக்கு 'குஷி பார்ட் 2'னு சப் டைட்டில்...?

"பெஸ்ட் ஃப்ரெண்ட் கதைப்படி ஹீரோவும், ஹீரோயினும் அடிக்கடி சண்டை போட்டுக்குவாங்க. மக்கள் பார்த்துட்டு 'என்னய்யா இது, 'குஷி' மாதிரியே இருக்குன்னு சொல்லிடுவாங்களோன்னு பயந்துதான், நானே குஷி பார்ட்-2ன்னு' பெஸ்ட் ஃப்ரெண்ட் படத்தை விளம்பரம் செய்றேன். எப்படி நம்ம ஐடியா?

"ராமதாசை நினைச்சா



ஸ்ரீதேவியோட கடைக்குட்டி 'குஷி' உங்க ஃப்ரெண்டாமே..?

"ரொம்ப க்ளோஸ் ஃப்ரெண்ட். போனிகபூர் பாதி, ஸ்ரீதேவி பாதின்னு கரெக்டா மிக்ஸ் ஆகி, அழகா ஜொலிக்கற நாலு வயசு தேவதை. ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வந்துச்சுன்னா, 'ஜங்'னு வந்து என் தோள்ல தொத்திக்கும்."

உங்க படம்னாலே, சென்சார் குஷியோடு கத்திரிக்கோலை ரெடி பண்றாங்களே...?

"சென்சாருக்கும் எனக்கும் எந்தப் பிரச்னையும் கிடையாது. அப்படி இருந்திருந்தா படமே வெளிவந்திருக்காதே. பிரச்னையை மாதர் சங்கம் கிளப்பினதால, ரெண் பாட்டு வேண்டாமேன்னு சென்சார் சொன்னாங்க. நான் வேணும்னு அடம் பிடிச்சேன். இதுதான் உண்மை. இப்பவும் சென்சார் ராஜு சார் கூட அடிக்கடி பேசுவேன். பெஸ்ட் ஃப்ரெண்ட் ட்ரெய்லர் கூட பார்த்துட்டு,

குஷிதான்!”



கரெக்டா இருக்குன்னு சொன்னார்.”

நம்மூர் நடிகைங்கல்ல யாரைப் பார்த்தா உங்களுக்குக் குஷி பிறக்கும்?

“ஐயையோ... நம்மூர் ஹீரோயின்களைப் பார்த்தா குஷி வருமா என்ன? ஆளை விடுங்க சாமி!”

சரி, உங்க புது ஹீரோயின் நிலாவைப் பார்த்துக் குஷியானது எப்படி?

“மும்பை முழுக்க அலைஞ்சும் புது ஹீரோயின் கிடைக்கலை. ஊருக்குக்



• நிலா

—எஸ்.ஜே.சூர்யா அதிரடி

கிளம்பற நேரம், ஒரு கடையில பாடி ஸ்பிரே வாங்கப் போனபோது, ஒரு மேகஸின் அட்டையில சிம்ரனைப் பார்த்தேன். ‘அட, இங்க எப்படி’ன்னு பக்கத்துல போய்ப் பார்த்தா, அசப்புல சிம்ரன் மாதிரி வேறொரு பொண்ணு! ‘ஆஹா’ன்னு அடிச்சுப் பிடிச்சு கண்டு பிடிச்சு, ஸ்க்ரீன் டெஸ்ட்டுல ஓ.கே. ஆனப்போ ‘ஹுர்ரே...’ன்னு பெரிய குஷி ஏற்பட்டுடுச்சு”

உண்மையைச் சொல்லுங்க, ஹீரோவா முதன் முதல்ல வேஷம் கட்டி நின்னப்போ, குஷியாயிருந்துச்சா, உதறலாயிருந்துச்சா?



ஆதங்கம்

'**ஆ**ட்டோகிராப்' திரைப்படத்தை மாண்ட்ரியல் பெஸ்டிவலில் 'திரையிட்டபோது. வேறு எந்த மொழிப் படங்களும் ஆங்கிலத்தில் டைட்டில் வைக்காததைக் கண்டு மனமாற்றம் அடைந்து. 'டூரிங் டாக்கீஸ்' என்றிருந்த தனது அடுத்த படத்தின் தலைப்பை மாற்றியிருக்கிறார் சேரன். நல்ல தமிழில் விரைவில் பெயர் சூட்டு விழா நடைபெறுமாம்.

போலீஸ் தேர்வின்போது தோல்வியுற்ற பெண்ணைக் கதாநாயகியாக சேரன் தேர்வு செய்தது தவறான செய்தியாம். 'பார்க்க நன்றாக இருக்கிறாரே... நடிக்கச் சம்மதம் தெரிவிப்பாரா?' என்றுதான் சேரன் கேட்கச் சொன்னாராம். அதன்பின் பத்திரிகைகள் நடத்திய அதிரடிப் பேட்டிகளால், தற்போது வேறு வழியின்றி தமது அடுத்த படத்தில் அப்பெண்ணுக்கு ஒரு கேரக்டர் ஒதுக்கவிருக்கிறார் சேரன். ''நான் வாய்ப்பு வழங்காவிட்டால் அந்தப் பெண் கேலிக்குரியவர் ஆகிவிடுவார். இருந்தாலும் பத்திரிகைகள் என்னிடம் தெளிவாகக் கேட்டறிந்து தகவல், பேட்டிகளை வெளியிட்டிருக்கலாம்'' என்று ஆதங்கப்படுகிறார்.

'' '**அ**ந்நியன்' முடித்துவிட்டு வாருங்கள். நான் 'சந்திரமுகி' முடித்துவிட்டு வருகிறேன். அடுத்த படம் பற்றி விவாதிப்போம்'' என்று இயக்குனர் ஷங்கரிடம் கூறியிருக்கிறார் ரஜினி.

வீடியோ சர்ச்சையில் மாட்டியிருக்கும் த்ரிஷாவுக்காக வாதாட நளினி சிதம்பரம் முன் வந்துள்ளார். சென்னை, ஹைதராபாத் போலீஸ் கமிஷனர்களும் இப்பிரச்னையின் தீவிரம் அறிந்து துரித நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

'**மு**ம்பை எக்ஸ்பிரஸ்' முடிந்த பின் கமல், இயக்குனர் கௌதம் இருவரும் ஒரு ஆக்ஷன் படத்துக்காக இணைய உள்ளனர்.

''குஷியாத்தான் இருந்துச்சு. நடிக்கறதுல எனக்கு பயமெல்லாம் கிடையாது. முதல் ஷாட் எடுத்தப்போ 'சோ'ன்னு மழை. 'சூப்பர்! நல்ல சகுனம் இது'ன்னு மழையெல்லாம் ஓய்ஞ்ச பிறகு, சிம்ரன் 'ஐ லவ்யூ' சொல்ற காட்சியை எடுத்தேன்.''

டாக்டர் ராமதாஸை நினைச்சா உங்களுக்கு வர்றது குஷியா, டென்ஷனா?

''எதுக்கு டென்ஷன் வரணும்? குஷிதான் வரும். நான் அவர்கிட்டயே சொல்லிட்டேன். பெஸ்ட் டீஃப்ரெண்ட் டைட்டிலை மட்டும் விட்டுடுங்க. அடுத்த படத்திலிருந்து தமிழ்லயே டைட்டில் வைக்கறேன்னு. அவங்களும் நம்ம தாய் மொழியை வளர்க்கத்தானே போராடறாங்க. ஆதரிச்சுட்டுப் போறேன்.''

ஓ.கே., லேட்டஸ்ட் குஷி என்ன?


''பெஸ்ட் ஃப்ரெண்ட் பட போஸ்டர் ஃபஸ்ட் க்ளாஸ்னு, ஆல் ஓவர் தமிழ்நாட்லருந்து வந்துக்கிட்டிருக்குற நியூஸ்தான்.''

- ச.ந. கண்ணன்

ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!

ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திரமுண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் மறையகம் பாபா. உடனே அணுக வேண்டிய முகவரி



அருள்

மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ. 3, அப்துல் ரசாக் தெரு,
நூர்ஜஹான் தியேட்டர் எதிரில் (தற்போது ராஜ் தியேட்டர் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை,
சென்னை – 600 015.
☏போன் : 2435 1190, 2433 2047. செல்போன் : 3100 5716

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சினை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சினைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.

ESTD : 1959 ஸ்ரீ குரு ராகவேந்த்ராய நமஹ **Phone : 28444538**

புனித யாத்திரை **46 வருட அனுபவமுள்ள ஸ்தாபனம்** **28442850**

ஸ்தாபகர் : வி. சுப்பாராவ் உரிமையாளர் : எஸ்.பத்ரி. செல் : 9444019151

16.01.05 **21.01.05** **25.02.05**	: 4 நாட்கள் கொண்ட நெல்லூர், ஸ்ரீசைலம், மந்திராலயம், மகாநந்தி, அஹோபிலம் ஆகியன. கட்டணம் ரூ.**1,650/-** (2 - 2) பஸ் வசதி
21.01.05	: 13 நாட்கள் கொண்ட மஹாராஷ்டிரா யாத்திரை. நாசிக், திரியம்பகேஸ்வர், ஷிர்டி, குஷ்னேஸ்வரம், எல்லோரா, சனிசிங்கனாப்பூர், நாகநாதம், பரலிவைத்தியநாதம், பண்டரிபுர், பிமாசங்கர், மகாகாளேஸ்வர், ஓங்காரேஸ்வர் ஆகியவை கட்டணம் ரூ.**6,700/-**
5.02.05	: 14 நாட்கள் கொண்ட பஞ்சதுவாரகா யாத்திரை. அகமதாபாத் டாக்கூர், துவாரகா, பேட்டதுவாரகா, நாகேஷ்வரம், ஹரிசித்திமாதா, போர்பந்தர், புஷ்கர், பாலக், விர்புர், மாத்ருகயா, அம்பாஜி, மவுண்ட்டாபீ, ஸ்ரீநாத்துவாரகா, காங்ரோலி, துவாரகா, கோமதிதுவாரகா ஆகியன. கட்டணம் ரூ.**6,700/-**
03.03.05	: 12 நாட்கள் கொண்ட காசி யாத்திரை பூரி, புவனேஸ்வர், கோனார்க், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம் ஆகியன. கட்டணம் ரூ.**5,700/-**
07.03.05	: 8 நாட்கள் கொண்ட காசி யாத்திரை. காசி, கயா, அலகாபாத் ஆகியன. கட்டணம் ரூ.**4,000/-**
17.04.05	: 14 நாட்கள் கொண்ட சுற்றுலா. சிம்லா, குளு, மணாலி, மணிக்கர், டெல்லி, ஆக்ரா, மதுரா, ஹரித்துவார் ஆகியன.
17.04.05	: 15 நாட்கள் முக்திநாத் யாத்திரை. காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம், சித்ரகூடம், பொக்ரா, முக்திநாத் ஆகியன. கட்டணம் ரூ.**8,000/-**

60 நாட்கள் முன்பு ரயில்வே டிக்கெட் ரிசர்வேஷன் செய்ய இருப்பதால் 2 மாதங்களுக்கு முன்பே பெயர், வயது, விவரங்களுடன் அட்வான்ஸ் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு : காலை காபி, டிபன், 2 வேளை சாப்பாடு அங்கு தங்கும் இடவசதி, ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு அனைத்தும் கம்பெனியாருக்கு உட்பட்டது.

மேலும் விவரங்களுக்கு: **ஸ்ரீ விஜயா டிராவல் சர்வீஸ்**

Old No.29, New No.18, ஆரிமுத்து ஆசாரி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை-5. ✆ : 28444538, 28442850 Cell : 9444019151



நிழல்

நண்பனாக
என் நிழலை
நினைப்பதில்
சில அசௌகரியங்கள்...

சில நேரங்களில்
நிழல்
எனக்குப்
பின்னாலிருந்து
வேலை செய்கிறது!

சில நேரங்களில்
எனக்கு
முன்னாலிருந்து

மார்கழி

ஒரு மார்கழிப் பொழுதில்
ஆண்டாளின் திருப்பாவை
பனிக்கூழாய் காதில் விழ
கோலமிடும் கன்னியர்கள்

கூரை வேய்ந்த வீட்டின்
திண்ணையில் குளிருக்காய்
முகம் மூடிய போர்வையை
விலக்கிப் பார்க்கிறேன்
நீயும் பார்க்கிறாய்

புள்ளியிட்ட கோலமாய்
சிக்குண்ட நம் விழிகள்
மோதியதில் ஒளிக் கற்றையுள்
ஆயிரமாயிரம் மின்மினிகள்

பிடுங்கித் தின்ற வெட்கத்தில்
கோணல் மாணலாய் சிரித்ததில்
அரங்கேறியிருக்கலாம் நம் காதல்

சூடித் தந்த சுடர்க்கொடி
சூட்டிக் கொண்டு போனாலும்
இன்னொரு மார்கழி
வராமலா போய்விடும்?

பாக்கியம் சங்கர்





அதிகப்பிரசங்கித்தனங்கள்
செய்கிறது!

நானே இதுவரை
தொடாத என்
காதலியின் மேல்
மெலிதாகப் படருகிறது!

சில நேரங்களில்
'நான், நான்தானா'
எனச் சந்தேகிக்கும்படி
உருவத்தைப்
பெருக்கி, சுருக்கி
படுத்துகிறது!

திடீரென
ஒன்றுக்கும் மேல் பெருகி,
'நிஜமான நிழல் எது'
'நிழலான நிழல் எது'
எனக் குழப்புகிறது!

இருந்தும்
என் நிழலை
நம்பிக் கொண்டுதானிருக்கிறேன்.
என்னுடன் எப்போதும்
நிழலாக இருப்பதால்!

முகில்

ஓசை



கதவு தட்டப்படும் ஓசை
கேட்டுக்கொண்டே இருக்கிறது

முதல் முறை தட்டப்படுகையில்
கதவை நோக்கித் தவழ்ந்தேன்
கைப்பிடித்து அழைத்து வரப்பட்டேன்

மறுமுறையும்
கதவின் ஒலி
உட்புறம்
வீசியெறியப்பட்டேன்.

மற்றுமொரு முறை
ஓசையெழுகையில்
சங்கிலியால்
பிணைக்கப்பட்டேன்.

கடைசி முறையில்
சங்கிலியை அறுத்தெறிந்து
முழு பலத்துடன்
கதவினைத் திறந்தேன்.

பின்பு என்றுமே
கதவு தட்டப்படும் ஓசை
கேட்கவே இல்லை.

மதுமிதா

ஆச்சாரிய பிக்ஷு தொடர்ந்து கூறினார்... "மகா ஜனங்களே! இதுவரையில் நாம் இந்தப் பக்கத்திலேயே கண்டும் கேட்டுமிராத கொடும் புயல் நம்மை நெருங்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அதோ, உங்கள் பின் பக்கமாகத் திரும்பிப் பாருங்கள்!"

ஜனங்கள் திரும்பிப் பார்த்தார்கள். பிக்ஷு கூறியபடியே அவர்களுடைய வாழ்க்கையில் என்றுமே காணாத அதிசயமான காட்சியைக் கண்டார்கள். அதிசயமான காட்சி மட்டுமன்று; பயங்கரமான காட்சியுந்தான்.

கடலானது பொங்கி மேலுயர்ந்து வானத்தில் மேலே மேலே வந்து கொண்டிருந்த கரிய கொண்டல்களைத் தொட்டுக் கொண்டிருந்தது. அந்தக் கரிய நிறத் தண்ணீர் மலையானது நின்ற இடத்தில் நிற்கவில்லை. மேலே மேலே நகர்ந்து வந்து கொண்டிருந்தது. ஜனங்கள் நின்ற இடத்திலிருந்து பார்க்கும்போது, அந்த மலையானது அவர்கள் இருக்குமிடம் வரையில் வந்தால், அவர்கள் மட்டுமல்ல, சூடாமணி விஹாரமே மூழ்கிப் போவது திண்ணம் என்று தோன்றியது.

இந்தக் காட்சியைப் பார்த்து மக்கள் பிரமித்து நின்றபோது, ஆச்சாரிய பிக்ஷு மறுபடியும், "அதோ, நீங்கள் எல்லாரும் வசிக்கும் நாகைப்பட்டினத்தைப் பாருங்கள்!" என்று சொன்னார்.

நாகைப்பட்டினம் நகரம் சூடாமணி விஹாரத்துக்குச் சிறிது வடதிசையில் அமைந்திருந்தது. வெகு தூரத்துக்கு வெகு தூரம் பரவியிருந்தது.

கடல் பொங்கிப் பண்டக சாலைகளும், சுங்கச் சாவடிகளும் இருந்த இடத்தையெல்லாம் தாண்டிக் கொண்டு வந்து, பட்டினத்தின் தெருக்களிலும் புகுவதற்கு அச்சமயம் ஆரம்பித்திருந்தது.

கடலில் இருந்த படகுகளும் நாவாய்களும் எங்கேயோ ஆகாசத்தில் அந்தரமாகத்



பொங்கியது கடல்...




தொங்குவதுபோல் தண்ணீர் மலைகளின் உச்சியில் காட்சி அளித்து, இப்படியும் அப்படியும் ஆடிக் கொண்டிருந்தன. படகுகளின் பாய் மரங்கள் பேயாட்டம் ஆடிச் சுக்கு நூறாகப் போய்க் கொண்டிருந்தன.

முறிந்த பாய் மரங்களுடனே பெரிய பெரிய நாவாய்களும், சின்னஞ்சிறு மீன் பிடிக்கும் படகுகளும் கடற் பக்கத்திலிருந்து கரையை நோக்கி வந்து கொண்டிருந்தன. அவற்றில் பல கரை தட்டியும், கட்டடங்களின் மேல் மோதியும், பேயாட்டம் ஆடிய மரங்களின் மீது இடித்துக் கொண்டும், சுக்கு நூறாக நொறுங்கி விழுந்தன.

பெருங்காற்றில் வீடுகளின் கூரைகள் அப்படியே பிய்த்துக் கொண்டு பறந்து சென்று வெள்ளத்தில் விழுந்தன. வேறு சில கூரைகள் மிதந்து கொண்டிருந்தன. அவற்றில் சிலவற்றில் மனிதர்கள் மிகுந்த சிரமத்துடன் தொத்திக் கொண்டிருந்தார்கள். ஓவென்று அவர்கள் ஓலமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

பெரிய பெரிய மரங்கள் காற்றில் முறிந்து விழுந்தன. முறிந்த மரங்களில் சில மிதந்து சென்றன. மிதந்த மரங்களைப் பிடித்துக்கொண்டு சில மனிதர்கள் உயிர் தப்ப முயன்றார்கள்.

ஆடு மாடுகள் வெள்ளத்தில் அலறிக்கொண்டு மிதந்து சென்றன.



"மகா ஜனங்களே! ஒரு காலத்தில் காவிரிப்பட்டினத்தைக் கடல் கொண்டது என்று கேள்விப் பட்டிருக்கிறோம். அம்மாதிரியான விபத்து நமது நாகைப்பட்டினத்துக்கு நேராமல் புத்த பகவான் காப்பாற்றுவாராக! ஆனாலும் நீங்கள் உடனே திரும்பிச் சென்று, உங்கள் குழந்தை குட்டிகளையும் உடைமைகளையும் கூடுமானவரை காப்பாற்றிக் கொள்ள முயலுங்கள்!" என்று ஆச்சாரிய பிக்ஷு தழுதழுத்த குரலில் கூவினார்.

'பொன்னியின் செல்வனி'லிருந்து, வானதி பதிப்பகம்.



“எப்படி சினிமாவுக்கு வந்தீக, எப்படிப்பட்ட பயல்களைப் பிடிக்கும் என்ற எலிமெண்ட்ரி கேள்விகளையெல்லாம் கேட்க மாட்டோம்'' என்றதும்தான் தாமதம், ''அப் பாடா வெரி பிக் ரிலீஃப்...'' என்று பெருமூச்சு விடும் 'காதல்' சந்தியா (என்ன ஒரு அழகான அடைமொழி!), தமிழ்நாடே இன்றைக்குச் சந்தியா ராகம் பாடிக் கொண்டிருப்பதில், திக்குமுக்காடிப் போயிருக்கிறார்.

ஒரு நிமிடம் நண்பர்களே, 'காதல்' கிளைமாக்ஸில் கரைபுரண்டு 'முகாரி' ராகம் பாடியவரின் ஒரிஜினல் சுபாவம் என்ன தெரியுமா? நொடிக்கு முன்னூறு முறை சிரிப்பது! ''இல்லையில்லை... அதைவிட அழறதுதான் ஈஸியா வரும்'' துடுக்காகப் பேசும் பதினைந்து வயதுப் புன்னகையை, அவரது தோழிகளுடன் சினிமா காமெடி பற்றிக் கலாய்க்க விட்டோம்.

''அப்போதான் முதன் முதலா நானும் சந்தியாவும் யார் துணையுமில்லாம, ஒரே சைக்கிள்ல வெளியே வர்றோம். திடீர்னு 'புஸ்'னு குக்கர் சத்தம். டயர்ல காத்து இறங்கிடுச்சு. நான் டென்ஷன்ல இருக்க, இவ அப்படி சிரிக்கறா பாருங்க... அப்பப்பா, காமெடி படத்துக்கெல்லாம் இவளைக் கூட்டிட்டுப் போனா, நாம ஒழுங்கா படம் பார்க்க முடியாது.'' உயிர்த் தோழி ஜனனி தன் அவஸ்தையைக் கூறும்பொழுது, வாய் பொத்திச் சிரித்துக் கொண்டிருந்த சந்தியா, தொடர்ந்து தானே டாபிக்கை ஆரம்பித்து வைத்தார்.

''காமெடி வசனங்களை அப்படியே ரியல் லைஃப்ல நாமளும் ஃபாலோ பண்றது ரொம்ப





ஜாலியான விஷயம். இப்போ என்னைப் பார்த்து 'ஐய்யய்யோ ஐய்யய்யோ'ன்னும் 'முருகா முருகா'ன்னும் கத்தி எப்படி கிண்டல் பண்றாங்க தெரியுமா? எப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்'' என்று கூறியவர், தனது கூக்குரலை வழிமறித்து சாட்டில் லேட்டாக நுழைய வந்த ஸ்வாதியைப் பார்த்து ''அடடா, வந்துட்டாய்யா... வந்துட்டா'' என்று தோள் குலுக்கிச் சிரித்தார். இந்த உற்சாகத்தில் அதுவரை 'கப்சிப்' என்றிருந்த ஐஸ்வர்யாவும் அபிநயாவும் பேச ஆரம்பித்தனர்.

''அஜித், விஜய் மாதிரியான ஆக்டர்ஸெல்லாம் ஆக்ஷன் ஹீரோவாக மாறிட்டதால, இன்னைக்கு தமிழ் சினிமாவுல கமலைத் தவிர வேறு யாரும் ஃபுல் லென்த் காமெடி படம் பண்றதில்லை.



பண்ணவும் முடியாது போலிருக்கு. அடியே ரேவதி (சந்தியாவின் ஒரிஜினல் பெயர்), என்ன பண்ணுவியோ ஏது பண்ணுவியோ, நீ ஒரு காமெடி படத்துல நடிச்சு எங்களையும் விழுந்து விழுந்து சிரிக்க வைக்கற'' தோழிகளின் ஸ்ட்ராங்கான கட்டளையை ''சரிடி சரிடி'' என்றபடி ஏற்றுக்கொண்ட சந்தியாவின் சொந்த ஊர் கேரளா என்பதால், சேச்சி இவிட கொஞ்சம் மலையாள இண்டஸ்ட்ரியையும் சம்சாரித்தது.

''மலையாளத்துல எல்லா ஹீரோஸும் நல்லா காமெடி பண்ணுவாங்க. கதையோடு சேர்ந்து காமெடி வர்றதால,

ட்டாய்யா வந்துட்டா...''



அந்த ஸ்டைல் ஆஃப் காமெடியை மக்கள் ரொம்பவே ரசிப்பாங்க. ஏன், மலையாள ரீமேக்கான 'ஃப்ரெண்ட்ஸ்' நமக்கெல்லாம் எவ்வளவு வித்தியாசமான காமெடியா தெரிஞ்சது! அங்கே ஜெகதீஸ் காமெடி ரொம்பவே பிடிக்கும். காமெடியில எள்ளுன்னா எண்ணெய்யா நிப்பாரு'' என்றவரை மடக்கினார் ஸ்வாதி.

''ஏன் அவருக்குக் காது கேட்காதா? ஹே.... இது பார்த்திபன் - வடிவேலு காமெடி டயலாக் இல்லே! இது மாதிரி ஹீரோவும் காமெடியனும் சேர்ந்து காமெடி பண்றதுதான் இப்போதைய ட்ரெண்ட். இதனால தனி ட்ராக்குல காமெடி போகாம, கதையோடு ஒட்டி வருது'' என்றபோது, மீண்டும் உற்சாகமானார் சந்தியா. '''பிதாமகன்', 'பேரழகன்' காமெடியெல்லாம் ரொம்பவே ரசிச்சேன் தெரியுமா. லேட்டஸ்டா வடிவேலுவோட 'இரி' காமெடி, அப்புறம் விவேக்கோட 'மின்னலே' காமெடி, ஆல் டைம்... ஃபேவரிட். 'வசீகரா'வுல விஜய் - வடிவேலு காம்பினேஷனும் சூப்பர்'' என்று தனக்குப் பிடித்த காமெடிப் பட்டியல்களை வாசித்தார்.

பேச்சு கவுண்டமணி - செந்தில் பக்கம் திரும்பியது. ''கொடி கட்டிப் பறந்த கூட்டணி அது. கவுண்டமணி பேச ஆரம்பிச்சாலே நாமெல்லாம் சிரிச்சுடுவோம். ஒரு டீக்கடையும் நியூஸ் பேப்பரும் கொடுத்தா போதும். ரெண்டு பேரும் அசத்தலா காமெடி பண்ணிடுவாங்க. ஆனா அவங்க காலத்துல நடிச்ச ஹீரோஸே இன்னைக்குக் காணாமப் போயிட்டதால, அடுத்த தலைமுறைக்கு இவங்களும் வழிவிடணும். ஆயிரம் முறைன்னாலும் இவங்க் காமெடியைத்தான் டிவியில அலுக்காம ரசிக்கிறோமே'' என்ற இளம் சிட்டுகளுக்கு ஆபாசக் காமெடியில் விருப்பமில்லை.''இவங்களை காமெடிதான் பண்ணச் சொல்றோம். ரொம்ப வல்கரா போனா யாராலயும் ஒப்புக்கவே முடியாது'' என்ற சந்தியா, இறுதியாக 'காதல்' கட்டையாண்டியைப் பற்றி மறக்காமல் பேசினார்.

''அவன் பேரு அருண்குமார். வந்த முதல் நாள்லயே யூனிட்ல எல்லோரையும் வசியப்படுத்திட்டான். 'அதான் சொல்றமுல'ன்னு படத்துல வர்ற மாதிரியே, நீட்டி நீட்டி மதுரை ஸ்லாங்குல காமெடியாப் பேசுவான். 'காதல்' ஷூட்டிங் ஆரம்பத்துல நான் யார்கிட்டயும் பேசாம தனியா உட்கார்ந்திருக்கும்போது, அருண் எல்லார்கிட்டயும் பேசிட்டிருந்த விதம் பிடிச்சுப் போய், நானே வலியக் கூப்பிட்டு 'பேர் என்ன'ன்னு கேட்டேன். ஃபுல் டீடெயில்ஸூம் ஒப்பிச்சான். 'அக்கா, அக்கா'ன்னு என்னைச் கத்திச் கத்தி வர்ற பாசமான தம்பி அவன்'' என்று நினைவுகளில் மூழ்கிப்போன சந்தியா, அடுத்ததாக சசி இயக்கும் 'டிஷ்யூம்' படத்தின் ஹீரோயினாகியிருக்கிறார்.

- சநகன்

படங்கள்: **ஸ்ரீஹரி**

Wish you all a happy & prosperous

New Year 2005

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை

P.R. JEWELLERY


GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES

102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 600 017.

PH: 2434 4442, 2432 7764 TUESDAY HOLIDAY

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்து பயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)



இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!

ராசிக்கல் மோதிரம் வாங்க
ராசியான கடை **P.R.** ஜுவல்லரி.
எங்கு ஜோதிடம் பார்த்தாலும்
எங்களிடம் வந்து ஒவ்வொரு
ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-க்கு வாங்கிப்
பயன்பெறுங்கள். உடனடியாகக் கிடைக்கும்.
கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம்
தருகிறோம். தங்கத்தில்
2 கிராம் முதல் 8 கிராம் வரை
ரூ. 2000/- முதல்
ரூ. 5000-ம் வரை
உடனடியாகக்
கிடைக்கும்.



அந்த நாள் ஞாபகம் - 11


திரையுலக நினைவுகள்

அப்பச்சியின்

ஏவி.எம்.சரவணன்

1960ம் வருடம் ஜனவரி மாதம் 20ம் தேதி 'பாவமன்னிப்பு' படத்துக்குப் பூஜை போட்டோம். இந்தப் படத்தை நாங்கள் பீம்சிங்கோடு சேர்ந்து கூட்டாகத் தயாரித்தோம். இந்தப் படத்தின் பின்னணியில் சில தகவல்கள் இருக்கின்றன.

கோல்டன் ஸ்டுடியோவில் பீம்சிங், சந்திரபாபுவை வைத்து



• 'பாவமன்னிப்பு'

'அப்துல்லா' என்றொரு படத்தை இயக்கிக் கொண்டிருந்தார். கிட்டத்தட்ட இரண்டாயிரம் அடி வரை படம் வளர்ந்திருந்தது. ஒருநாள் அவர் என்னை அழைத்து, எடுத்தவரை போட்டுக் காட்டினார்.

அந்தக் கதை சந்திரபாபு எழுதிய கதை. ஒருவன் ஹிந்துவாகப் பிறந்து, ஒரு முஸ்லீமால் வளர்க்கப்பட்டு, ஒரு கிறிஸ்துவப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வது போல் கதை அமைந்திருந்தது.

''எவ்வளவு பண்ணியும் சரியா அமையல. முழுசையும் மறுபடியும் ரீடேக் பண்ணியாகணும் போலிருக்கு'' என்று சற்று சலிப்பாகப் பேசினார்.

எனக்கு அந்தக் கதையின் கரு ரொம்பவும் பிடித்திருந்தது. அப்பச்சியிடம் போய், ''இந்தக் கதை புது விஷயமா இருக்கு. நாம பார்ட்னர்ஷிப்ல எடுத்தா நல்லா வரும்னு எனக்குத் தோணுது'' என்றேன்.

''சரி... பீம்சிங்கை அழைத்து வா'' என்றார்.

எல்லோரும் கலந்து ஆலோசித்துக் கொண்டிருந்தபோது 'மொத்தம் எவ்வளவு செலவாகும்?' என்று பீம்சிங்கை என் தந்தை கேட்டார்.

''நாலரை லட்சம் ஆகும்.''

''சரி... நான் ஃபைனான்ஸ் பண்றேன். வர்ற லாபத்தைப் பாதியா பிரிச்சுக்கலாம்'' என்று அப்பச்சி சொன்னதை பீம்சிங் ஏற்றுக் கொண்டார். தான் சொன்ன நாலரை லட்சம் பட்ஜெட், தமது சம்பளம் இல்



அதிரடி!

லாமல் மற்றச் செலவுகள் மட்டுமே என்பதையும் சுட்டிக் காட்டினார்.

ஒப்பந்தம் கையெழுத்தானது.

திரைக்கதை அமைக்கும் முயற்சிகளில் பீம்சிங் தீவிரமாக ஈடுபட்டார். எப்போதும் அவர் தம்முடன் ஓர் எழுத்தாளர் குழுவையே வைத்திருப்பார். இறைமுடிமணி, அரங்கண்ணல், வலம்புரி சோமநாதன் போன்றவர்கள் அவருடன் இருப்பார்கள். திரைக்கதையை தங்கள் தங்கள் பாணியில், ஒவ்வொருவரும் அலசுவார்கள். மொத்தக் கருத்தையும் திருமலை என்பவர் ஒரு ஷேப்புக்குக் கொண்டு வருவார். இப்படிப் பலரது முயற்சிகளில் திரைக்கதை வசனம் எழுதப்பட்டு, அது வசனம் 'சோலைமணி' என்ற பெயரில் வெளிவரும். இதுதான் பீம்சிங்கின் வொர்க்கிங் ஸ்டைல்!

அப்துல்லா கதையும் அப்படித்தான் விவாதிக்கப்பட்டது. ஸ்கிரிப்ட் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்போது நடிகர் திலகம் சிவாஜியின் தம்பி ஷண்முகத்தின் திருமணம் ஆபட்ஸ்பரியில் நடந்தது. நான் போயிருந்தேன். பீம்சிங்கும் வந்திருந்தார்.

''அப்துல்லா கதை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?'' என்று நான் கேட்டேன்.

''ரொம்ப அருமையா வந்திருக்கு. ஹீரோ காரக்டர் பிரமாதமா ஷேப் ஆயிருக்கு. ஆனால் அதை சந்திரபாபு தாங்க மாட்டார். நாம சிவாஜிபாயை வச்சுத்தான் எடுக்கணும்'' என்றார் பீம்சிங்.

அவர் எப்போதும் நடிகர் திலகத்தை சிவாஜி பாய் என்றுதான் அழைப்பார். அதேபோல் சிவாஜி பீம்சிங்கை 'பீம்பாய்' என்பார்.

''அதைப் பத்தி ஒண்ணுமில்லை. ஆனா கதை சந்திரபாபுவுடையதுன்னு சொன்னீங்க. ஆனா அதில அவர் நடிக்கப் போறதில்லங்கற விஷயத்தை அவர்கிட்ட சொல்லணுமில்ல?'' என்று கேட்டேன்.

''நான் ஏற்கெனவே சொல்லியாயிற்று'' என்ற பீம்சிங் ''இன்னொரு விஷயம்'' என்றார். தொடர்ந்து ''நாம முன்ன போட்ட பட்ஜெட்டை ரீவொர்க் பண்ணணும்'' என்று தெரிவித்தார்.

நாலரை லட்சமாக இருந்தது பத்தரை



லட்சமானது. என் தந்தை 'சரி'யென்று சம்மதித்தார். சிவாஜியைப் போட்டு எடுப்பதால், அந்த அதிகச் செலவில் நியாயமிருந்ததை அவர் ஏற்றுக் கொண்டார்.

எங்கள் திட்டப்படி 1960 அக்டோபர் 26ம் தேதி பாவமன்னிப்பை ரிலீஸ் செய்திருக்க வேண்டும். ஆனால் படம் முடியும் நிலையில் இருந்தபோது, நடிகை கண்ணாம்பா காலமாகிவிட்டார். பிறகு எம்.வி. ராஜம்மாவை வைத்துப் படத்தை முடித்தோம்.

அந்தப் படத்துக்கு இசையமைத்த மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதனின் திறமையைக் கண்டு, நான் பலமுறை வியந்து போனேன். அவரும் கவிஞர் கண்ணதாசனும் இணைந்தால், அங்கே வரிகளுக்கும் ஸ்வரங்களுக்கும் பஞ்சமே இருக்காது. இரண்டு பேரையுமே நான் ஒவ்வொரு விதத்தில் 'மேதைக் குழந்தைகள்' என்பேன். இப்போதுகூட எங்கள் ஸ்டுடியோ வளாகத்தில் நான் ஆறாம் நெம்பர் அறையைக் கடந்து போகும் போதெல்லாம், கண்ணதாசனும், விஸ்வநாதனும் அங்கே பேசிக் கொண்டிருப்பது போன்ற பிரமை வருகிறது. அவர்கள் இருவரும் ஓர் அற்புதக் காம்பினேஷன்!

பாடல்கள் எல்லாம் ஒலிப்பதிவானதும் 'மாதிரி இசைத்தட்டு' வரும். சேம்பிள் ரிகார்ட். அதை வொயிட் ரிகார்ட் என்போம்.

'பாவ மன்னிப்பு' படத்தின் வொயிட் ரிகார்ட் வந்தவுடன் நான் அதை எல்.ஆர். நாராயணன் மூலம் அறிமுகமான எனது இனிய நண்பர், ரேடியோ சிலோன் அறிவிப்பாளர் மயில்வாகனனுக்கு அனுப்பி வைத்தேன். அப்போது வர்த்தக ஒலிபரப்பெல்லாம் கிடையாது. மயில்வாகனன் 'பாவ மன்னிப்பு' பாடல்களை இலங்கை வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பிக் கொண்டே வந்தார்.

படம் வெளியாவதற்கு முன்பே எல்லாப் பாடல்களும் மிகவும் பிரபலமாகிவிட்டன.

''இப்படி பாடல்களை முன்கூட்டியே நிறைய தரம் நேயர்கள் கேட்டு விட்டால், அப்புறம் படம் வெளியாகும்போது அவை 'ஸ்டேல்' ஆகிவிடும் அபாயம் உண்டு. எனவே 'போதும், பாடல் ஒலிபரப்பு இனி வேண்டாம்' என்று சொல்லி விடுவோமே'' என்று அபிப்ராயப்பட்டார் பீம்சிங்.

''அப்படி எந்த அபாயமும் இல்லை. நாம் ஒலிபரப்பை நிறுத்தச் சொல்ல வேண்டியதில்லை. அப்படியே போகட்டும்'' என்று நான் உறுதியாகச் சொல்லிவிட்டேன்.

''அந்தக்காலத்தில் நௌஷத் இசையமைத்த 'கோஹினூர்' போன்ற படப் பாடல்கள், வருஷக் கணக்கில் முன்கூட்டியே நேயர்கள் பலமுறை கேட்டும் அவர்களுக்கு சலித்ததில்லை'' என்று நான் எடுத்துக் காட்டினேன்.

பாவமன்னிப்பு படம் வெளியானதும் தியேட்டரில் ரசிகர்களோடு அமர்ந்து பார்த்தோம். படத்தின் ஒவ்வொரு காட்சிக்கும் நல்ல வரவேற்பு. குறிப்பாகப் பாடல் காட்சிகளின் போது ரசிகர்களின் கையொலியும், சந்தோஷக் குரல்களும் உச்சத்தில் இருந்தன. பல மாதங்களாக அந்தப் பாடல்களை ரேடியோவில் பல முறை கேட்டிருந்தும், ரசிகர்களின் காதுகளுக்கு அவை பழசாகிப் போய் விடவில்லை. அப்படி அந்தப் பாடல்



• பீம்சிங்

களில் கண்ணதாசனும், எம்.எஸ். விஸ்வநாதனும் தேன் கலந்திருந்தார்கள்.

'பாவமன்னிப்பு' படத்தை சித்ரா தியேட்டரில்தான் ரிலீஸ் செய்ய வேண்டும் என்று பீம்சிங்கும் மற்றவர்களும் கருதினார்கள். பொதுவாக அப்போது சிவாஜி படங்கள் சித்ரா, சயானி, கிரௌன் போன்ற சிறிய தியேட்டர்களில்தான் ரிலீஸ் செய்யப்பட்டு வந்தன.



* சாந்தி திரையரங்கம்...

ஆனால் அந்தப் படத்தை சாந்தி தியேட்டரில் வெளியிட வேண்டும் என்ற விருப்பம் அப்பச்சிக்கு இருந்தது. பெரிய தியேட்டரில் சிவாஜி படத்தை வெளியிட வேண்டும் என்பது மட்டுமல்ல, அப்போது சாந்தி தியேட்டர் பால்கனிதான் தியேட்டர்களிலேயே மிகப் பெரிய பால்கனியாக இருந்தது. அதைவிடப் பெரிய பால்கனியைக் கொண்ட தியேட்டர் இன்றுவரை தமிழ்நாட்டில் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். சாந்தி தியேட்டர் கட்டப்பட்டு, அதில் வெளியான படங்கள் ஏதும் பிரமாதமான வெற்றி பெறவில்லை அதுவரை. நல்ல படங்களாக அந்தத் தியேட்டருக்கு அமையவில்லை.

'பாவமன்னிப்பு' மீது அப்பச்சிக்கு இருந்த அசைக்க முடியாத நம்பிக்கை, சாந்தியில் அதை ரிலீஸ் செய்ய வேண்டும் என்ற ஆசையை அவருக்குள் ஏற்படுத்தியிருந்தது.


சிவாஜியின் சகோதரர் ஷண்முகம் கூட, "'சாந்தி'யைவிடச் சிறிய தியேட்டரில் போடலாமே" என்று சொல்லிப் பார்த்தார்.

'சித்ராவில் போட்டால் நூறு நாள் நிச்சயம்' என்று வேறு சிலரும் யோசனை சொன்னார்கள். ஆனால் அவற்றை அப்பச்சி உறுதியாக நிராகரித்து, அதிரடியாக 'சாந்தி'யில்தான் வெளியிட்டார். படம் வெள்ளி விழா கொண்டாடியது. அந்தத் தியேட்டருக்குப் பொருத்தமான நல்ல படம் அமையாமல் இருந்த குறையையும் பாவமன்னிப்பு போக்கியது.

ஒரு ராட்சதப் பலூனை ஜப்பானி லிருந்து வரவழைத்து, சாந்தி தியேட்டரின் மேல் அந்த 'மெகா சைஸ்' பலூனைப் பறக்கவிட்டு, அந்தப் படத்துக்கான விளம்பரத்தில் ஒரு புதுமையை நாங்கள் அறிமுகப்படுத்தினோம். அந்தப் பலூனில் 'ஏவி.எம்' என்ற எழுத்துகள் ஆங்கிலத்தில் பெரிதாகவும், வாலில் 'பாவமன்னிப்பு' என்ற எழுத்துகள் ஒன்றன் கீழ் ஒன்றாக தமிழிலும் அமைக்கப்பட்டிருந்தன. அன்றைய மவுண்ட் ரோடில் அந்தப் பலூனை அண்ணாந்து பார்த்து அதிசயிக்காதவர்கள் இல்லை. சென்னை மாநகர மக்களுக்கு, அந்தப் பலூன் ஒரு வித்தியாசமான அனுபவம்.

ஆனால் அந்த விளம்பரத்தைச் செய்ததில் எங்களுக்கு கிடைத்தது வேறு விதமான அனுபவம்.

(தொடரும்)



எந்தச் செயலைத் தொடங்கினாலும் விநாயகனைத் தொழுதுவிட்டுத் தொடங்குவதும், எதை எழுதத் தொடங்கினாலும் 'உ' என்று பிள்ளையார் சுழி போட்டுவிட்டுத் தொடங்குவதும் இன்றைக்கும் வழக்கமாக இருக்கிறது. 'உ' என்ற எழுத்துக்கும் விநாயகருக்கும் அப்படி என்ன தொடர்பு?

வெறும் சிந்தனையாக இருக்கும் எதற்கும் பலனில்லை. அது செயலாக வடிவம் பெற்றால்தான் அதற்குப் பலன். அப்படிச் செய்கிற எந்தச் செயலுக்கும், எந்த

பிள்ளையார்

வினைக்கும் நாயகன் விநாயகன். எதிலும் செயலாக, வினையாக இருந்து நடத்துபவன். பூமி சுழல வேண்டும், நதிகள் ஓட வேண்டும், மரம் செடி கொடிகள் வளர வேண்டும், காற்று வீச வேண்டும், மனிதன் வாழ வேண்டும் - இப்படி இயக்கங்கள் நடந்துகொண்டேயிருக்க வேண்டும். 'செயல்கள்' தொடர்ந்து கொண்டேயிருந்தால்தான் உலகம். உலகத்தைப் படைக்கவும், காக்கவும், அழிக்கவும் ஆண்டவனுக்கு ஆதாரம் வேதங்கள். ரிக், யஜுர், சாம என்னும் ஆதார வேதங்களின் சாரம் எட்டு எட்டாக இருபத்தி நான்கு எழுத்துகள் ஆயின. அந்த 24 எழுத்துகளால் ஆனது காயத்ரி மந்திரம். அனைத்து மந்திரங்களுக்கும் மாதா காயத்ரி. அந்த காயத்ரியின் சாரத்தையும் சுருக்கினால் 'அ' 'உ' 'ம' என்னும் மூன்று எழுத்துகள் கிடைக்கின்றன.

அதில் 'உ' என்பது யஜுர் வேதத்தின் சாரம். ஒரு செயல் தொடங்குவதிலிருந்து, முறையாக நடந்து, சரியாக முடிந்து, நிறைவான பலன் கிட்டும் வழியை, விரிவாகச் சொல்வது இந்த வேதம். விநாயகன் இதன் மையஸ்வரூபன். ஆக்கம் பெறுகிற சிந்தனைக்கு ஊக்கம் கொடுத்து செயலாக்கி, எந்தத் தாக்கமுமின்றித் தொடரவும், வளரவும், வளர்வதைக் காக்கவும் செய்யும் திறன், அவன் அருளால் கிடைக்கிறது. எனவேதான் எந்தச் செயலையும் தொடங்குமுன் விநாயகனைத் தொழுது விட்டுத் தொடங்கவும், எழுதுமுன் பிள்ளையார் சுழியைப் போட்டு படைப்பைத் தொடரவும் செய்கிறோம். முன் வினை, பின் வினை, செய்வினை என்று எல்லா வினைகளுக்கும் நாயகனாய் இருந்து நடத்துபவன் விநாயகன் என்பதால், தீவினைகளால் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளவும் திறன் உள்ளவன் இவன்.

சரஸ்வதி கல்வியை அருளினாலும், மகாலக்ஷ்மி எல்லாச் செல்வத்தையும் அருளினாலும், ஈசன் ஆயுளை அருளினாலும், எம்பெருமான் நல்வாழ்வை அருளினாலும், அத்தனையையும் பெற்று நல்லவற்றை நமக்குச் செய்து கொள்ளவும், பிறர்க்குச் செய்யவும், எல்லாச் செயல்களுக்கும் நாயகன் விநாயகன்தான்.

'உ' என்னும் ஒற்றை எழுத்தும், விநாயகனைக் குறித்த வேண்டுதலும் எழுத்தை, எழுத்தால் வினையும் படைப்பை சிறக்க வைக்கும்.

- வி

* ஸ்ரீகாசி செல்வ விநாயகர்



சுழி ஏன்?

அழகு நாயகன்!

தஞ்சை மாவட்டம் பாபநாசம் நகரில் அரசு அலுவலகங்கள் மத்தியில் அமைந்துள்ளது ஸ்ரீநடன விநாயகர் ஆலயம். மிகவும் பழைமையான கோயிலான இது.

கிழக்குப் பார்த்தவண்ணம் அமைந்துள்ளது.

மூன்றரை அடி உயரமுள்ள மூலவர், ஒரு காலைத் தூக்கியபடி நடனமாடும் நிலையில் இருக்கிறார். முகத்தைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். அப்படியோர் அழகு!

இங்குள்ள அரசு ஊழியர்களின் செல்(வ)ல பராமரிப்பில், இந்த விநாயகர் என்றும் சிரஞ்சீவியாக பக்தர்களுக்கு



• ஸ்ரீ நடன விநாயகர்

அருள்பாலித்து வருகிறார்.

தினமும் ஒரு கால பூஜை நடந்து வருகிறது. அலுவலகத்துக்கு வரும் அதிகாரிகள், அலுவலகத்தைப் பயன்படுத்த வரும் பொது மக்கள் அனைவரும் இவரை வணங்கிச் செல்கிறார்கள்.

பதவி கிடைக்காத அதிகாரிகள் இவரை வணங்கி, பெரிய பதவியை அடைந்துள்ளனர். அரசாங்கத்தின் மூலம்

நடக்க வேண்டிய காரியங்கள் தாமதம் ஆகும்போது, இவரை வேண்டிக் கொண்டால் உடனே நிறைவேறும் என்பது நம்பிக்கை.

- வி.பி.கே.மூர்த்தி, பாபநாசம்

அலங்கார நாயகன்!

மிகவும் புராதனமான பிள்ளையார் கோயில்களில், மாம்பலம் நல்லான்குப்பம் பகுதியில் இருக்கும் ஸ்ரீகாசி செல்வ விநாயகர் கோயிலும் ஒன்று. இது 300 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமையான கோயில் என்பது பலரின் கருத்தாக இருக்கிறது.

இடிந்து, சிதைந்து போயிருந்த இந்த ஆலயத்தைச் சில ஆண்டுகளுக்கு முன்னால் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறார்கள்.

இந்த விநாயகரிடம் மனமுருகி வேண்டிக் கொண்டால், தங்கள் பிரார்த்தனை எளிதில் நிறைவேறுகிறது என்பது இப்பகுதி வாழ் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருக்கிறது. திருமணத் தடை நீக்கம், மக்கட் பேறு, பதவி உயர்வு, வியாதிகள் தீரல், பிரிந்த தம்பதியர் சேர்தல் என்று இவரால் அருள் பெற்றவர் அநேகம்.

நித்திய பூஜை தவிர, மாதந்தோறும் சங்கடஹர சதுர்த்தி பூஜையும் இந்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெறுகிறது. சுக்லபட்ச சதுர்த்தியில் சஹஸ்ரநாம வழிபாடும், விநாயக சதுர்த்தியின்போது உற்சவ மூர்த்தியின் திருவீதி உலாவும் உண்டு. தனுர் மாதத்தில் (மார்கழி) தினமும் விடியற்காலை விசேஷ அபிஷேகமும், அலங்கார வழிபாடும் நடைபெறுகின்றன.

- இ. குருமூர்த்தி, மேற்கு மாம்பலம்



பளீர் இளமைத் தொடர்

சுஜாதா

உள்ளம் துறந்தவன்

மஞ்சரியிடம் கோபித்துக் கொள்வது யாருக்கும் கஷ்டம். அவள் இருப்பிடத்தில் சதா கலகலப்பும் இருக்கும். ஆண் பெண் வித்தியாசமின்றி, சமூக வேறுபாடுகள் இன்றி, எல்லாருடனும் இனிதாக, இயல்பாகப் பேசுவாள். யாராவது பேசினால், பாசாங்கில்லாமல் முகத்தில் முக்கால் பாகம் விரிந்த பெரிய கண்களுடன் ஆர்வமாக நெற்றியைச் சுருக்கிக் கொண்டு, நாம் சொல்லும் விஷயம்தான் அவளுக்கு உலகிலேயே அதிமுக்கியமானது போல கவனிப்பாள். பார்த்த கணத்திலேயே நம் சுயசரிதை அனைத்தையும் அவளுடன் பங்கு கொள்ளத் தோன்றும். உடனே அவளை நேசிக்க வைக்கும். பலவீனமுள்ளவர்கள் பேப்பர் பென்சில் எடுத்து கவிதை எழுத விரும்புவார்கள். பன்னிரண்டிலிருந்து பதினெட்டு வயது வரை, இளைஞர்கள் சந்தித்த மறுகணம் காதல் வசப்படாவிட்டால் சமதிங் ராங். திடீர் திடீர் என்று எதிர்பாராத காரியங்கள் செய்வாள். ஒருமுறை அமெரிக்காவில் சர்ஜன் பாலாவின் மகன் விஜியுடன் டெலிபோனில் பேசிக் கொண்டிருக்கும்போது "உங்க வீட்ல என்ன இருக்கு இடுப்பு வலியா? மூவ் ஆ?" என்றாள்.

"ஆர் யு நட்ஸ்?" என்று கேட்டான்.

எதிர்பாராத தன்மைதான் அவள் சிறப்பம்சம். இத்தனைக்கும் அழகி என்று உடனே சொல்லிட முடியாது. பத்து நிமிஷம் உற்றுப் பார்த்துப் பேசினால் அவள் உண்மை அழகு புலப்படும். உயரமும் இல்லாமல் குள்ளமுமில்லாமல் கச்சிதமான உடலமைப்பு. இடது கைப் பழக்கம் aquline nose (டிக்ஷனரியைப் பாருங்கள்) எல்லாவற்றிலும் ஓரளவுக்கு ஆர்வம். எதில் ஆர்வம் என்பது தினம் தினம் மாறும். ஒருநாள் இகேபானா, ஒருநாள் கர்நாடக சங்கீதம், ஒருநாள் சூடான் நாட்டு பட்டினிக் குழந்தைகள். ராகவேந்தர், மஞ்சரியின் பெற்ற தகப்பன்



அல்ல. அவள் தாய்க்கு ராகவேந்தர் தமையன் உறவு. மஞ்சரிக்கு நாலு வயசு இருக்கும்போது தாய் - தந்தையர் இருவரும் ஒரு சாலை விபத்தில் இறந்து போனார்கள். ராகவேந்தர் வெளிநாடு போயிருந்ததால், அவர்களுடைய அண்ணா பெண் கல்யாணத்துக்கு ஈரோடு போய்விட்டு, கல்யாணம் பார்த்துவிட்டு ராகவேந்தரை வரவேற்க இரவோடு இரவாக சென்னைக்குத்



திரும்பியபோது, மாமண்டூர் அருகில் இருட்டில் நிறுத்தி வைத்திருந்த லாரி மோதி விபத்து. அதிசயமாகத் தப்பித்த மஞ்சரிக்கு அந்தச் சம்பவம் நல்ல வேளை ஞாபகமே இல்லை. பெற்றோரையும் ஞாபகம் இல்லை. அம்மாவும் அப்பா இருக்கும் ஒரு போட்டோவில் தான் நிற்பதை உணர்ச்சி ஏதும் இல்லாமல் பார்த்திருக்கிறாள். அவர்கள் இருவரும் ஜுரம் வந்து செத்துப் போனதாகத்தான் மரகதவல்லி சொல்லியிருக்கிறாள். அவள்தான் அம்மா, ராகவேந்தர்தான் அப்பா. எப்போதாவது மஞ்சரி தனியாகப் படுக்கையில் திடுக்கிட்டு ஏசி இருந்தும் வியர்வை வெள்ளத்தில் எழுந்திருக்கும்போது, கனவின் விளிம்பில் அந்த விபத்தை மறுபடி வாழ்வாள். அது கடந்த காலமா, எதிர்காலமா என்கிற குழப்பத்தில் சற்று நேரம் அழுவாள், எப்போதாவதுதான்.

ராகவேந்தரும் மரகதவல்லியும், மஞ்சரியை மற்றொரு மகள் போலத்தான், ஏன், அதைவிடச் செல்லமாக வளர்த்தார்கள். அவர்களுக்கு சொந்த மகளிர் இருவர். சின்ன மாப்பிள்ளை சரியில்லை. தூரத்து உறவு. கம்பெனியில் வேலை போட்டுக் கொடுத்ததில் பணத்தைக் கையாண்டுவிட்டு, ஆடிட்டர் அதைக் கண்டுபிடித்து மாப்பிள்ளையை வேலையைவிட்டு நீக்குமளவுக்கு ரசாபாசமாகிவிட்டது. மூத்த மாப்பிள்ளை அமெரிக்காவில் க்ளீவ்லண்டில் பெரிய சர்ஜனாக இருக்கிறார். அவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள். இருவரும் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தவர்கள். மகன் விஜய்க்கு மஞ்சரியைக் கொடுக்க ராகவேந்தருக்கு ஓர் ஆசை உள்ளது. அதை மரகதவல்லியிடம் சொல்லியிருக்கிறார். விஜியை, மஞ்சரி சின்ன வயதில் பார்த்திருக்கிறாள். இரண்டாவது மாப்பிள்ளை நாகரத்தினம் - கல்யாணி தம்பதிக்கு ஒரு பையன். பெயர் சரவணன். இரண்டு பெண்கள் அமிர்தா, ரோகிணி. ஒருத்தி டென்த், மற்றவள் எய்ட்த். கோவையில் படிக்கின்றனர். மாப்பிள்ளைக்கு வேலை வெட்டி கிடையாது. மாமனார் ஏற்படுத்திய பணத்தில் வசதியாக வாழ்ந்தாலும், அவ்வப்போது 'உங்கப்பன் உங்கப்பன்' என்று பிரித்துப் பேசி, கல்யாணியை நச்சரிக்கும் குணம் நாகரத்தினத்துக்கு. இத்தனைக்கும் உறவு வேறு. சரவணனை பெரியவரின் செல்லப் பெண் மஞ்சரிக்குக் கல்யாணம் செய்து கொடுக்க பிரயத்தனங்கள் வேறு. மஞ்சரிக்கும், ராகவேந்தரின் மற்ற மகள்களுக்கும் வயசு வித்தியாசம் அதிகம். அதனால் மஞ்சரி, ராகவேந்தரின் கடைசி செல்ல மகளாக, சில சமயம் பேத்தியாகக் கருதப்பட்டாள். இதுபற்றி குடும்பத்தில் அதிருப்தி. மற்றவர்களுக்குப் பெரியவரிடம் ஏதாவது கேட்க வேண்டுமானால், மஞ்சரி மூலமாகத்தான் கேட்பார்கள்.

கம்பெனி ஷேர்கள் பெரும்பாலும் ராகவேந்தரின் பெயரிலும் மரகதவல்லி பெயரிலும் இருப்பதும், மாப்பிள்ளைக்கு சல்லிக்காசு இல்லாததும் பெரிய, பெரிய மனத்தாங்கல். சர்ஜன் பாலா எப்போதாவது இந்தியாவுக்கு வரும்போது அவரை 'கேளு கேளு' என்று தொண தொணப்பார்கள். அவருக்குப் பணத் தேவையில்லை, கேட்க மாட்டார். யாரும் நேரடியாக ராகவேந்தரை எதிர்க்க மாட்டார்கள். பயம். எல்லோரும் சண்டை போடாமல் வசதியாக வாழலாம். அதற்கான ஏராளமான சொத்து தோப்பும் துரவுமாக, ஊருக்கு ஊர் பங்களாக்கள் இருந்தும் குடும்பத்தில் அமைதியில்லை. அனைத்தும் மஞ்சரிக்குப் போகப் போகிறது என்கிற சந்தேகத்தை யாரும் வெளிப்படையாகச் சொல்ல மாட்டார்கள்.

இந்தக் கதையின் முக்கியமான சம்பவம் மே மாதம் 21ம் தேதி வெள்ளிக்கிழமையன்று நிகழ்ந்தது. மாலை மஞ்சரி, தன் சினேகிதிகளுடன் அப்ளிகேஷன் வாங்க ஸ்டெல்லா, எத்திராஜ், டபிள்யு சிசி, மீனாட்சி, எம்.ஓ.பி என்று திரிந்துவிட்டு,

ஃப்ளைஓவர் தாண்டி, நுங்கம்பாக்கம் ஹைரோடு துவக்கத்தில் இருந்த ஒரு நவீன காம்ப்ளெக்ஸில், அரோமா என்கிற காப்பி ஷாப்பில் (அது இன்சாஃப் நிறுவனத்தினுடையது என்பது மஞ்சரிக்குத் தெரியாது) கும்மாளமாக காப்புசினோ ஆர்டர் செய்திருந்தார்கள். வெய்ட்டர் தூய ஆங்கிலத்தில் பேசியது சிரிப்பாக வந்தது. "காபி வருவதற்கு சரியாக ஏழு நிமிஷம் ஆகும், அதுவரை இந்த ஹைக்கூ கவிதையை ரசித்துக் கொண்டிருக்கலாம்" என்று ஒரு சிறிய பூப் போட்ட காகிதத்தைக் கொடுத்தான்.

'கடற்கரையில் திரும்பி பார்த்தால்
என் கால் பதிவுகளைக்
காணவில்லை.'
யு லைக் இட்?



* எழுத்தாளர்கள் சுபா

"கிரேட் பொயம். அர்த்தம்தான் புரியவில்லை" என்றாள் ஒருத்தி.

"நண்டு கொண்டு போயிடுச்சா?"

வெள்ளிமணி போல் அவர்களிடம் சிரிப்பு பீறிட்டது.

"இல்லைங்க, மனிதனின் பதிவுகள் எவ்வளவு சீக்கிரத்தில் மறக்கப்படுகிறதுன்னு சொல்லுது கவிதை."

"கரெக்ட்."

அவர்கள் கை தட்டினார்கள். "உங்களுக்கு இதுக்கும் சம்பளம் உண்டா?"

"இல்லைங்க, ஒரு கப் காப்பி உண்டு."

அவர்கள் ரகசியமாகச் சிரித்துக் கொண்டார்கள்.

அப்போதே அவர்கள் அந்த இளைஞர்களால் கவனிக்கப்பட்டார்கள். சற்றுத் தள்ளி அவர்களையே, குறிப்பாக மஞ்சரியின் சினேகிதி ஒருத்தி 'மூக்கும் முழியு'மாக, ஒரு ஐயங்கார் பெண்... அவளையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அது இவர்களுக்கு கண் விளிம்பில் தெரிந்தது.

"பாத்துட்டுப் போகட்டும், கம்மா ருடி" என்றாள் மஞ்சரி. அவர்களில் ஒருவன் அருகில் வந்து நின்று "ஹாய்" என்றான்.

அவர்கள் திடுக்கிட்டு "ஓ ஹாய்" என்றார்கள்.

"லேண்ட்மார்க்கிலிருந்து உங்களை ஆட்டுக் குட்டி மாதிரி தொடர்ந்து வரேங்க."

"ஏதாவது கேக்கணுமா சாமிநாதன்."

"எம் பேரு சாமிநாதன் இல்லை."

"பின்ன, பேர் சொல்லு."

"ராமநாதன்."

"ஜாஸ்தி வித்தியாசம் இல்லை."

"ஏய் வெய்ட்டர், ரெண்டு மேஜையையும் ஒட்டிப் போடு" என்று அதட்டலாக ஆணையிட்டான்.

வெய்ட்டர் பெயர் அழகேசன், "ஸாரி ஸார்."

"உங்க பேரு?" என்று இளைஞர் கேட்க,

"மஞ்சரி அண் திஸ் இஸ் வைதேகி. நீங்க கண் கொட்டாம பாத்துக்கிட்டிருக்கிற வைதேகி"

"தெரியும், உங்க எல்லார் பேரும் தெரியும்."

"மஞ்சு, ஷட் அப் யார்" என்றாள் வைதேகி.

"வெயிட்டர்! பேரர், க்விக்!" என்று கை சொடக்கினான்!

"ஸாரி! ஓட்டல் டேபிள் அரேஞ்ச்மெண்டை மாத்தறதுக்கு மேனேஜ்மெண்ட் அனுமதியில்லை."

"இப்ப டேபிள இழுத்துப் போடுவியா மாட்டியா? கார்ட்டூன் கே பச்சே!"

"தட்ஸ் நாட் மை ஜாப்."

"வாட்ஸ் யுவர் ஜாப்? எச்சப்ளேட் பொறுக்கறதா"

"என்னடா சொன்னே, நீதாண்டா எச்சப் பொறுக்கி" அழகேசன் அவன் காலரை கொத்தாகப் பிடித்தான். அவனுடன் ஒப்பிட்டால் ராமநாதன் ஒல்லி. அப்பா தியேட்டர் ஓனர். தண்ணி லாரி அடிப்பவர். பணத்திமிர், அவனுக்கு அந்தத் தைரியத்தைக் கொடுத்திருந்தது.

அழகேசன் மஞ்சரியிடம், "நீங்க காபி சாப்பிட்டிருங்க. இந்த மாதிரி கஸ்டமர்ஸை என்ன செய்யணுமுன்னு



'இது ராஜ பாட்டை அல்ல' தனது வாழ்க்கை அனுபவங்களை நடிகர் சிவகுமார் அழகுத் தமிழில் வடித்திருக்கும் புத்தகம். இதன் வெளியீட்டு விழாவுக்கு வந்திருந்த அனைவரும் ஒப்புக்கொண்ட ஒரு விஷயம், 'சிறந்த நடிப்புக்கு உதாரணம் சிவாஜி; சிறந்த நடிகனுக்கு உதாரணம் சிவகுமார்!' சிறப்பான விழாவில் உறுத்தலாய் அமைந்த ஒரே விஷயம், பேசிய பலரும் சிவகுமாரையும் மகன் சூர்யாவையும் ஒப்பிட்டு மதிப்பீடு செய்ததுதான்.

எங்களுக்குத் தெரியும், வாடா" அவனை ஏறக்குறைய ஒற்றைக் கையால் எம்பி எம்பித் தூக்கி அழைத்துச் சென்றான்.

அவனுடன் வந்தவர்கள் சண்டையில் கலந்துகொள்ள அவகாசமே தராமல், அழகேசன் அவனைத் தர தரவென்று இழுத்துச் சென்று விட்டான்.

கொஞ்ச நேரத்தில் திரும்ப வந்து "இனிமே அந்தப் பையன் உங்களுக்குத் தொந்தரவு தர மாட்டான்."

"அடிச்சீங்களா?"

"தேவை இல்லை. ஈவ் டீஸிங் ஸ்க்வாடு. மாறு வேஷத்தில வெய்ட்டர் மாதிரி வந்திருக்கேன்னு சொன்னேன். ஓடிப் போய்ட்டான்."

"தாங்க்ஸ், உங்க பேரு?"

"எனக்கெல்லாம் பேரு கிடையாதுங்க வெய்ட்டர், பேரர்."

"பேரு முக்கியமில்லைங்க."

மஞ்சரி நேராக மேனேஜரிடம் சென்று புகார் கொடுத்தாள். ராகவேந்தருக்கு போன் செய்தாள்.

"மாளவிகா, லெட்மி டாக் டு மை ஃபாதர்."

"சொட்டு, மஞ்சு பேசறேன். அரோமான்னு காபி ஷாப்பிலருந்து பேசறேன். இங்க ஒரு பையன் தொந்தரவு பண்றான் எங்களை!"

"மேனேஜர்ட்ட போனைக் கொடு."

மேனேஜர் குரலில் முதலில் கண்டிப்பும், பிறகு அபரிமிதமான குழைவும் தெரிந்தது.

நடுங்கும் கரங்களுடன் போனை வைத்துவிட்டு, "உக்காருங்க மேடம், ராகவேந்தர் சாருடைய டாட்டர்னு சொல்லிருந்தா, ஹாலையே காலி பண்ணிக் கொடுத்திருப்பேனே."

"எங்கப்பாவைத் தெரியுமா?"

"அவர்தாம்மா இந்த காபிஷாப், புக்ஷாப், இந்த பார்லர் சொந்தக்காரர். இது மட்டுமில்லை, புக்ஷாப் கீழே இருக்கிற செல்போன் கம்பெனி, இந்தக் கட்டடமே இன்சாஃப்க்குச் சொந்தம்."

"தெரியாது."

போகும்போது மஞ்சரி அந்த வெய்ட்டரை ஒருமுறை பார்த்தாள். "வெய்ட்டர்களை காபி மட்டும் கொடுக்கச் சொல்லுங்க, கவிதை எல்லாம் வேண்டாம்னு சொல்லுங்க."

மஞ்சரி புறப்பட்டதும் அழகேசனை மேனேஜர் விளித்தார். "சம்பள பாக்கியை காஷியர்ட்ட வாங்கிட்டு, இடத்தைக் காலி பண்ணு. நாளைலருந்து வேலைக்கு வர வேண்டாம்."

"சரி சார்."

"கஸ்டமர்ங்ககிட்ட காபிதான் பேசணும், கவிதை இல்லை. என்னடா சிரிக்கிறே."

"இதை எதிர்பார்த்தேன்."

(தொடரும்)

மன்மதன்

ஷிவ்

'பண்ணவா... வேண்டாமா?'

'ம்ம் ஓ.கே பண்ணிடலாம்.'

செல்போனை எடுத்தேன் காதலுடன்!

என் விரல்களால் கீ போடை முத்தமிட ஆரம்பித்தேன். உருகி, உருகி, காதலை ஊற்றி டைப் செய்தேன்.

'உன் கண்கள் மீன்களுக்குப் பொருந்தும்... உன் இதழ்கள் சிவப்பு ரோஜாவுக்குப் பொருந்தும். உன் கன்னங்கள் ஆப்பிளுக்குப் பொருந்தும். உன் கூந்தல் இருளுக்குப் பொருந்தும்.

ஆனால் உன் இதயம் எனக்கு மட்டும்தான் பொருந்தும்!

காதலுடன் உன்னைக்
காதலிப்பவன்''

கீ போடுக்கு வலிக்காமல் டைப் செய்து, அவளுக்கு அனுப்பிவிட்டேன்.

அடச்சே! அதற்குள் ஏன் இப்படி வியர்த்துவிட்டது... முதல் காதல் முயற்சி, அதான் டென்ஷன்!

நான் அனுப்பிய காதல் எஸ்.எம்.எஸ் விண்கலம், அவளின் செல்போன் சொர்க்கத்தில் லேண்ட் ஆகிவிட்டதாம். 'மெஸேஜ் டெலிவர்ட்' வந்துவிட்டது.

பிபி, டென்ஷன், ஹார்ட் பீட்ஸ்... எல்லாம் சேர்ந்து உள்ளுக்குள் என்னமோ செய்ய, பயபக்தியுடன் செல்போனை வெறிக்கத் தொடங்கினேன்.

நெட்வொர்க் சிக்னல், பேட்டரியில் சார்ஜ் எல்லாம் ஃபுல்லாகத்தானிருக்கிறது. இருந்தும் இவையெல்லாம் இல்லாமல் போய்விடுமோ என ஒரு வெட்டி பயம்.

வாசித்திருப்பாளா? வேறு ஏதும் வேலையில் இருப்பாளோ? கோபித்துக் கொள்வாளோ? பதில் அனுப்பாமலே இருந்து விடுவாளோ?

எக்கச்சக்க கேள்விகள் எனக்குள்ளே குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருக்கையில், என் செல்போனை ஒரு



மெஸேஜ் முத்தமிட்டது.

கைகள் நடுங்கிக்கொண்டே ஓப்பன் பண்ணினேன்.

அடப்பாவி, பில் கட்டச் சொல்லி எஸ்.எம்.எஸ் அனுப்புற நேரமா இது!

மீண்டும் தவிப்பு...

நொடிகள் மெதுவாக நொண்டி அடித்துக்கொண்டே நகர்ந்தன.

மீண்டும் ஒரு எஸ்.எம்.எஸ் வந்தது.

குல தெய்வங்களையெல்லாம் சப்போர்ட்டுக்கு அழைத்து, இன்பாக்ஸை ஓப்பன் பண்ணினேன். அவள்தான். நாக்கு வறண்டது. விரல்கள் சிம்புவின் விரல்களாக மாறி, இஷ்டத்துக்கு டான்ஸ் ஆடின. எதற்கும் துணிந்து ஓப்பன் பண்ணினேன்.

'நீ ஃபார்வர்டு பண்ணிய கவிதை மெஸேஜ் நல்லாயிருந்துச்சு. ஏதும் சர்தார்ஜி ஜோக் இருந்தா அனுப்பு.'' ◉



"இந்தாங்க அட்வான்ஸ் பணம். காஞ்சிபுரத்துலயே ஒரு வருஷத்துக்கு வீடு வாடகை எடுத்து தங்கி, செய்தி சேகரிச்சு அனுப்பிட்டே இருங்க.."

- ஸ்ரீகாந்த்



"வாயைக் கட்டி, வயித்தைக் கட்டி பணத்தைச் சேர்த்து வைச்சிருந்தேன்..."

"அடடா... என்ன ஆச்சு...?"


"கையைக் கட்டி, காலைக் கட்டி திருடிட்டுப் போயிட்டாங்க!"

- சாத்தூர் சபாபதி

"கனவுல நடிகை அஸின் வந்ததுக்கு ஸ்வீட் குடுத்துட்டுப் போறாரே... யார் அது?"

"என்னோட கஸின்!"

- அம்பை தேவா



"பையன் ஏன் அழறான்...?"

"ஹோம் ஒர்க் ஒழுங்கா செய்தா பீச்சுக்கு கூட்டிட்டுப் போறேன்னு சொன்னேன்... அதான்!"

- வளவன்



"சுனாமி வந்ததுலேர்ந்து பாகவதர் பாட்டை இப்படித்தான் பாடறாரு!"

- ஸ்ரீகாந்த்

கமலை விசாரிக்கணும்!





''ஏன் கமல்ஹாசனை போலீஸ் விசாரிக்கணும்னு சொல்றாங்க?''

''அபூர்வ சகோதரர்கள் படத்தில் அவர் 'அப்பு'வா நடிச்சிருக்காராம்!

- லெ.நா. சிவகுமார்



''மனைவியைத் தூக்கிட்டு எங்கே கிளம்பிட்டீங்க?''

''நம்ம ஊருக்கு ஒரு சாமியார் வந்திருக்காராம்... 'எல்லாக் கஷ்டத்தையும் எங்கிட்ட இறக்கி வை'ன்னு சொல்றாராம். அதான் இவள கூட்டிட்டுப் போறேன்!''

- எம்.ஆர். மூர்த்தி



காதல்

மீனாசுந்தர்



அலுவலகத்திலிருந்து வந்த ஜெயந்தி சோர்வாக இருப்பதாக உணர்ந்த அம்மா கமலா, "என்னாச்சும்மா... தலை வலிக்குதா? காபி போட்டுத் தரட்டுமா?" என்றாள்.

"ஒண்ணுமில்லேம்மா" என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு, குப் புறப்படுத்துக் கொண்டாள், ஜெயந்தி.

"நான் கேட்டால் பதில் சொல்லமாட்டே, அப்பா வரட்டும்."

சுந்தரேசன் வந்தார். காவல்துறை அதிகாரி, நேர்மையானவர். எவருக்கும் எதற்கும் பயப்படாதவர். சவால் என்றால் உடனே ஏற்றுக் கொள்பவர். சரி எனப்பட்டதை, செய்து முடிக்கக் கூடியவர்.

"அப்பா எனக்கொரு மொட்டைக் கடிதம் வந்திருக்கு. கொலை மிரட்டல். அதைப் பார்த்ததிலேர்ந்து பயமாயிருக்குப்பா."

ஜெயந்தி கைகள் நடுங்க அந்தக் கடிதத்தை சுந்தரேசனிடம் கொடுத்தாள்.

'மை டியர் ஜெயந்தி... நீ என்னைக் காதலிக்காவிட்டாலும் நானுன்னைக் காதலிக்கிறேன். ஆனால் நீயோ ராகவனைக் காதலிக்கிறாய். என்னைத் தவிர நீ வேறு யாரை மணந்து கொண்டாலும், உன்னைச் சும்மா விடமாட்டேன். ஜாக்கிரதை.'

கடிதத்தின் வாசகங்கள் அதிர்வூட்ட, நிமிர்ந்தார் சுந்தரேசன்.

"இந்தக் கடிதத்துல சொல்ற மாதிரி நீ ராகவனைக் காதலிக்கிறியா?" குரலில் கடுமை.

"ஆமாப்பா. ராகவன் தனியார் கம்பெனில புரொடக்ஷன் மானேஜரா இருக்கார். நல்ல குடும்பம். எனக்கும் அவருக்கும் ஆறு மாசமா பழக்கம்ப்பா. ப்ளீஸ்பா... எங்கள சேர்த்து வைங்கப்பா..."

"நல்லா நடிக்கிற... போதும் நிறுத்து" ஜெயந்தி ஒடுங்கிவிட்டாள். அடுத்த நிமிடம் சுந்தரேசனின் முகம் மாறியது.

"என்னம்மா ஜெயந்தி, பயந்துட்டியா? கவலைப்படாதே சும்மாதான் மிரட்டினேன். நாளைக்கு அந்தப் பையனை வரச்சொல்லு பேசறேன். இந்த மொட்டைக் கடிதத்தைப் பத்தி மறந்துடு. இதை எழுதினவனை நான் பார்த்துக்கறேன்."

ஜெயந்தியின் முகத்தில் பூரிப்பு.

"என்னோட பொண்ணை யாருக்கு வேணாலும் கல்யாணம் பண்ணிக் கொடுப்பேன். இவன் யாரு அதைக் கேட்க? மொட்டைக் கடிதமா எழுதுறே? பார்க்கலாம். எம் பொண்ணை அவ விரும்புற ராகவனுக்கே கட்டி வைக்கிறேன். உன்னால என்ன செய்ய முடியும்னு பார்க்கிறேன்" சவாலாய்ப் பேசினார் சுந்தரேசன்.

மறுநாள் பீச்சில் -

"ராகவ்... அப்பாகிட்ட நம்ம காதலைப் பத்திச் சொல்லி, எப்படி அனுமதி வாங்கறதுன்னு பயந்துக்கிட்டிருந்தேன். நல்லவேளை... நீங்க சொன்னபடியே மொட்டைக் கடிதம் நாடகம் நமக்குச் சாதகமா முடிஞ்சிருச்சு." என்றாள் ஜெயந்தி. ●



தெம்புக்குப் படிங்க! 11

தென்கச்சி சுவாமிநாதன்

சாதனையாளர் யார்?

அமெரிக்காவில் ஒரு வழக்கறிஞர் இருந்தார். பெயர் ஜோசப் சோட். மிகவும் திறமையான வக்கீல். அவரை எதிர்த்து வாதாட எந்த வக்கீலுமே பயப்படுவார்களாம். அந்த அளவுக்குப் புத்திசாலித்தனமாக எந்த வாதத்தையும் எடுத்து வைப்பாராம். அவரது தாயாரை ஒரு பத்திரிகையாளர் சந்தித்தார்.

"உங்க பிள்ளை இந்த அளவுக்கு வருவார் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்களா?"

"சோட் சிறுவனா இருக்கும்போது இவ்வளவு பெரிய வக்கீலா வருவான் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆனாலும் இப்போது இவன் இவ்வளவு பெரிய வக்கீலா வந்ததுனால, இவன் சின்ன வயசுல செய்த சில நிகழ்வுகள் எனக்கு ஞாபகத்துக்கு வருது!"

"என்ன அது... சொல்லுங்களேன்...!"

"ஒருநாள்... நான் சமையலறையில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தேன்... இவன் அப்பா வரவேற்பு அறையில் ஏதோ செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் சோட்டின் அறையிலிருந்து ஒரு பூனை அலறுகிற சத்தம்... அங்கே என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. நான் சமையலறையில் இருந்தபடியே சத்தம் போட்டேன்.

'டேய்! பூனையின் வாலை இழுக்காதே... பாவம் எப்படிக் கத்துது பாரேன்!' என்று சொன்னேன்.

இதற்கு அவன், 'நான் பூனையின் வாலை இழுக்கவில்லை. பூனைதான் இழுத்துக் கொண்டிருக்கிறது...!' என்றான்.

என்ன நடக்கிறது அங்கே என்று நான் விரைந்து போய் எட்டிப் பார்த்தேன்.

அவன் சொன்னது உண்மைதான்.

பூனையின் வால் மீது சோட் நின்று கொண்டிருக்கிறான். பூனை தன் வாலை இழுத்துக் கொண்டிருக்கிறது.

நடந்த நிகழ்ச்சியை மாற்றிச் சொல்லவும், வார்த்தைகளை மாற்றி அமைத்துப் பேசும் திறமையும் அவனுக்கு அப்போதே இருந்திருக்கிறது!"

இது அந்தத் தாயாரின் மலரும் நினைவுகள்.

வார்த்தைகளை மாற்றிப் பேசுவது ஒரு கலை.


அது வழக்கின் திசையை மட்டுமல்ல... வாழ்க்கையின் திசையைக்கூட மாற்ற வல்லது.



மன இயல் வல்லுனர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"எவன் ஒருவன் தன் மீது வீசப்படும் கற்களைக் கொண்டே வலிமையான அடித்தளம் அமைத்து முன்னேறுகிறானோ... அவனே சாதனையாளன் ஆகிறான்..."

(பேசலாம்)



உதயமே...

வீணையின் தந்திகளில் முகாரி
மீட்ட முடியாது வதந்திகளால்!
புலரும் விடியல் பொழுது
அஸ்தமனம் ஆகாது புழுதியால்!
ரோஜா மலர்ப் பூங்காவில்
புரளியைக் கிளப்பும் அரளிகள்
அரண்டு உதிரும் காலம் வரும்!
எங்கள் இதயமே! உதயமே!
எப்போதும் வாழ்வாய் நீ!



தமிழே...

தோளில் தொண்டனைத் தூக்கிச்
சுமக்கிற
நாளினையே தினமும் பார்க்கிறோம்
வாளில் இருக்கும் வலுவான கூர்மை
வைகோவின்
வார்த்தையிலும் ஒலிப்பதைக்
கேட்கிறோம்!
சிங்கம்போல் கர்ஜித்து சிறுத்தை
போல் பாய்கிறார்
பங்கம் தமிழனுக்கு நேர்ந்துவிட்டால்
தங்கம் போல் ஜொலிக்கிறார்
தமிழைப் போல் இருக்கிறார்
எங்களின் இதயத்தோடு கலந்து
விட்டார்.



மணிவேந்தன்
(மதிமுக)



'உங்கள் தலைவரை குஷிப்படுத்தும் விதமாக கவிதை எழுதுங்கள்' என்று கேட்டதுதான் தாமதம்... உற்சாகம் பொங்க வடித்துக் கொடுத்தனர் அரசியல் இயக்கங்களைச் சேர்ந்த மூன்று கவிஞர்கள்...



நிர்மலா சுரேஷ்
(திமுக)


தலைவா!



அம்மா...!


புதுப்பிக்கப்பட்ட புறநானூறு
புதியதாய் எழுந்த கலிங்கத்துப் பரணி
சாதிக்குத் தலைவணங்கும் தற்காலத்
தமிழகத்தில்
நீதிக்குத் தலைவணங்கும் நிகரில்லாப்
பெருந்தலைவி

அம்மா!
வெல்லப் பிறந்தவர் நீங்கள்; அதனைச்
சொல்லப் பிறந்தது தானிந்த உலகம்!



இளந்தேவன்
(அதிமுக)

தொகுப்பு: முராரி



இந்த குஷி போதுமா?

'வாழ்க்கையில் எப்பொழுதும் குஷியாக இருக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் எப்படி என்றுதான் தெரியவில்லை.' - இதுதானே உங்கள் ப்ராப்ளம்? டோண்ட் ஒர்ரி. இதோ உங்களுக்காக சில ஸ்பெஷல் 'கேம்ப்ரிட்ஜ்' 'ஆக்ஸ்ஃபோர்ட்' லெவல் டிப்ஸ். என்ஜாய்.

அனிமல்ஸ் எப்பொழுதும் குஷியாக இருக்கும். நாம் அவற்றிடமிருந்து நிறைய கற்றுக்கொள்ள வேண்டும். ஃபர்ஸ்ட் லெவல்! பூனை, காண்டாமிருகம், சுவர்க்கோழி, தவளை, கீரிப்பிள்ளை போல மிமிக்ரி செய்ய பழகிக்கொள்ள வேண்டும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி அவற்றின் பாஷையிலேயே 'நல்லா இருக்கீங்களா?' 'சாப்டீங்களா?' என்றெல்லாம் உங்கள் நண்பர்களிடம் குசலம் விசாரிக்க வேண்டும். அவர்கள் திருதிருவென்று விழித்தாலும் பரவாயில்லை.



செகண்ட் லெவல் அனிமல் சேஷ்டைகள். குரங்கு, ஒட்டகச் சிவிங்கி, கோவேறு கழுதை, எட்டுக்கால் பூச்சி இப்படி ஏதாவதொரு பிரபலமான ரோல் மாடலை எடுத்துக் கொண்டு, அதைப் போலவே சேஷ்டைகள் செய்ய வேண்டும். டிஸ்கவரி, நேஷனல் ஜியாக்ரஃபி எல்லாம் கண் விழித்துப் பார்த்து நிறைய ப்ராக்டீஸ் செய்யலாம். யாரும் எதிர்பாராத நேரத்தில் ஏதாவதொரு சேஷ்டையை அள்ளி எடுத்து விடலாம். உதாரணத்துக்கு, அருகில் இருக்கிறவரை உற்று உற்றுப் பார்த்து, நற நறவென்று பற்களைக் கடிக்கலாம். அல்லது செல் ஃபோனை ஆன் செய்துவிட்டு, கொர் கொர் என்று உறுமலாம்.


புத்தகங்களால் ஏற்படும் குஷியே அலாதியானது தான். முன் நவீனத்துவம், பின் நவீனத்துவம், ஒருக்களித்த நவீனத்துவம், குப்புறக் குதித்த நவீனத்துவம் போன்ற அருமையான புத்தகங்களை எடை போட்டு, ஏழு கிலோ வாங்கிக் கொள்ளுங்கள். கட்டிலின் தலைமாட்டில் செங்குத்தாக அடுக்கி வைத்துக் கொள்ளுங்கள். சுற்றிலும் சாம்பிராணி போட்டு வைத்தால் இன்னமும் விசேஷம். அப்புறமென்ன? ஆட்டோமேட்டிக்காக கண்கள் சொக்க ஆரம்பிக்கும். குஷியான ஒரு குட்டித் தூக்கம் போட வேண்டியதுதான்.

திடீர் திடீரென்று மற்றவர்களுக்கு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுக்க வேண்டும். உதாரணத்துக்கு பஸ்ஸில் நின்று கொண்டிருக்கும்பொழுது, திடீரென்று எம்பி எம்பிக் குதிக்கலாம். உட்கார்ந்திருப்பவர் கூட கலவரமடைந்து எழுந்து போய் விடுவார். அல்லது நடு ரோட்டில் நடந்து போய்க் கொண்டிருக்கும்பொழுது 'க்ரீச்சென்று' கால்களால் சடன் ப்ரேக் போட்டு, ஆங்

காங்கே நிற்கலாம். யாராவது கேட்டால் முறைத்துவிட்டு "சிக்னல் ரெட் போட்டிருக்கு, எப்படிப் போவதாம்?'' என்று கேட்கலாம்.

மற்றவர்களை வெறுப்பேற்றுவதைப் போன்ற ஒரு குஷியான சமாச்சாரம் இந்த உலகத்திலேயே கிடையாது. தான் பாட்டுக்குச் சிவனே என்று போய்க் கொண்டிருப்பவரை நிறுத்தி "இப்போ எக்ஸாக்ட் டைம் என்ன சார்?" என்று சீரியசாகக் கேட்க வேண்டும். அவர் சொல்வதை கவனமாக கேட்டுக்கொண்ட பின்னர் "ஸாரி, எனக்கு இந்தியன் டைம் வேண்டாம். உஸ்பெகிஸ்தான் டைம் தெரிஞ்சா சொல்லுங்க. எட்டு மணிக்கு உஸ்பெகிஸ்தான்ல என் ஃப்ரெண்டுக்கு வளைகாப்பு. இங்கேயிருந்து ஆட்டோ பிடிச்சிட்டுப் போகணும்" என்று சொல்லலாம். ஒரு வேளை அவர் முறைத்தால், "சார் ப்ளீஸ், தெரியாதுன்னு மட்டும் சொல்லிடாதீங்க" என்று அப்பாவித்தனமாகக் கெஞ்ச வேண்டும்.





இசை இல்லாமல் குஷியா? உங்களுக்கு பிடித்த டாப் டென் பாடல்களை, விடாமல் காலையிலிருந்து இரவு வரை 'டங்கு டக்கர டங்கு டக்கர' என்று கையில் கிடைக்கும் தம்ளர், குச்சி, டபரா போன்ற இசைக் கருவிகளைக் கொண்டு தாளம் போட்டுக் கொண்டே பாட வேண்டும். நடுநடுவே விசில், டால்பி எஃபெக்ட்ஸ் சவுண்ட் எல்லாம் வாயாலேயே கொடுக்கலாம். தொடர்ந்து பத்துப் பாடல்களுக்கு இசையமைத்த பின், மூன்று நிமிடங்கள் கமர்ஷியல் ப்ரேக் விடலாம். மறுபடியும் 'டங்கு டக்கர டக்கர டக்கர' என்று உற்சாகத்துடன் ஆரம்பிக்கலாம். காலேஜ், கால் சென்டர், ரயில்வே ஸ்டேஷன் எந்த இடமாக இருந்தாலும் சரி, ஒரே குஜாலாக இருக்கலாம்.

டீ.வியில் சீரியல் ஆரம்பிப்பதற்கு முன்பு ஒரு பாடல் போடுவார்கள். அதை அபாயச் சங்காக பாவித்து, டீ.வி. இருக்கும் இடத்திலிருந்து இருபது கிலோமீட்டர் தள்ளி ஓடிவிட வேண்டும். தப்பித் தவறி கால் எபிசோட் கூட பார்த்து விடாதீர்கள். அழுகை சீரியல் பார்க்காத ஒவ்வொரு நிமிடமும் குஷியான நிமிடம்தான்.

டெலிபோன் டைரக்டரியை எடுத்துக் கொள்ளுங்கள். கண்களை மூடிக் கொண்டு ஏதாவதொரு பக்கத்தைத் திருப்புங்கள். ஏதாவதொரு நம்பரை லைனில் பிடியுங்கள். பிறகு உங்கள் குரலை மாற்றி "நான் தான் த்ரிஷா பேசறேன். உங்களுக்கு ரொம்பப் புடிச்ச பாட்டு இன்னாது?" என்று பாப்பா மொழியில் பேசி கலக்குங்கள். லைனில் வந்த ஆசாமி ஏதாவதொரு பாட்டைக் கேட்டால், "இன்னிக்கி மிட்நைட் 12.48க்கு டிஸ்கவரி சேனல்ல நீங்கோ கேட்ட ஸாங்கைப் போட்றோம். ச்சோ ச்வீட்" என்று சொல்லி போனை வைத்து விடுங்கள். எப்படி?


- மருதன்



'குறுந்'தொகை

படைப்பிலக்கியம் அல்லாத கட்டுரைகள் மூலமாகக் கருத்தைப் பதிவு செய்யும் படைப்பாளர்கள் மிகச் சிலரே. இவ்வகையில் அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி, சுந்தர ராமசாமி, சுஜாதா, ஜெயகாந்தன் போன்றோர், இலக்கியம் தொடர்பாகவும், இலக்கியம் அல்லாத விஷயங்கள் தொடர்பாகவும் அவ்வப்போது தங்கள் நேரடிக் கருத்துகளைக் கணிசமான அளவு பதிவு செய்திருக்கிறார்கள். அவை நூல் வடிவம் பெற்றதும் உண்டு. இப்போது அசோகமித்திரனின் முழுக் கட்டுரைத் தொகுப்பு தயாராகிறது. இரு தொகுதிகள். இரண்டாயிரம் பக்கங்கள். விலை ரூ.700. கிழக்கு பதிப்பக வெளியீடு. தலைப்பு : 'அசோகமித்திரன் கட்டுரைகள்'.





மறக்கப்பட்ட ஆனால் மறக்கப்படக் கூடாத முன்னோடி எழுத்தாளர் தி.ஜ. ரங்கநாதன். இவரைப் பற்றி தற்போது நூல் ஒன்று தயாராகிறது. சாகித்ய அகாதமி, 'வாழ்வும் பணியும்' வரிசையில் வெளியிடவிருக்கும் அந்த நூலை எழுதுபவர் வ.ரா. படைப்புகளை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவரும், வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான அறிஞர் பழ. அதியமான். தமிழ் அறிவுலக வரலாற்றின் விடுபட்ட கண்ணிகளைத் தொகுக்கும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டிருக்கிறார். வை.கோவிந்தன், டி.எஸ். சொக்கலிங்கம், வ.வே.சு. ஐயர், சொ. முருகப்பா உள்படப் பலரது அறிவுலகச் செயல்பாடுகளைத் தொகுத்து வருகிறார்.



'இம்மையும் மறுமையும்' என்ற தலைப்பில் பேச வந்தார் கி.வா.ஜ. ஒலிபெருக்கி சரிவர வேலை செய்யவில்லை. காத்திருந்தார். அதை எடுத்துப் போய் வேறோர் ஒலி பெருக்கியைக் கொண்டு வந்து வைத்தார்கள். அதுவும் வேலை செய்யவில்லை. ''ஒலிபெருக்கியே வேண்டாம்'' என்ற கி.வா.ஜ., மைக் இல்லாமலே பேசலானார். ''இம்மையும் மறுமையும் என்ற தலைப்பில் பேச வந்தேன். ஆனால் எனக்கு இம் 'மைக்'கும் பயன்படவில்லை. மறு 'மைக்'கும் பயன்படவில்லை!'' என்று பலத்த கைத்தட்டல்களுடன் பேச்சைத் தொடங்கினார் அவர்.

வெளிவந்து பல்லாண்டுகள் ஆன பின்னும் இப்போதும் பேசப்படும் நாவல் அஸ்வத் எழுதிய 'நல்லூர் மனிதர்கள்'. வெங்கட்சாமிநாதன் போன்ற விமர்சகர்கள் பாராட்டும் 'ஒரு தேவதையும் சில வண்ணத்துப் பூச்சிகளும்' அஸ்வத்தின் சமீபத்திய நாவல். இயற்பெயர் மோகன். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அதிகாரி. விமர்சனக் கட்டுரைகள் எழுதுவதிலும் ஆர்வம். சிவாஜி கணேசன், எழுத்தாளர் கந்தர்வன் போன்றோரைப் பற்றி ஆய்வு நோக்கில் எழுதியுள்ளார். இசை ஞானம் உள்ளவர். தற்போது மனப் பிறழ்வு மனிதர்கள் குறித்த புதினம் ஒன்றை எழுதி வருகிறார்.

திருப்பூர் கிருஷ்ணன்

விஷ்வக்ஸேனன்

25. உறவு என்பது...



'நாமொன்று நினைத்தால் தெய்வமொன்று நினைக்கும் என்பார்கள். ஒன்றை நினைத்து நாம் செயல்படும்போது, தெய்வம் குறுக்கிட்டு அதை மாற்றினால், மகிழ்வோடும் நம்பிக்கையோடும் அதை ஏற்பதுதான் முறை. ஏனென்றால், நாம் நினைப்பது தவறாகவும் கூடும். தெய்வம் நினைப்பது தவறாக ஆகாது. நம்மீது கொண்ட கருணையால்தான் நம் நினைப்பில் குறுக்கிட்டு தெய்வம் அதை நல் வழிக்கு மாற்றியிருக்கிறது'-தந்தை கருணாகரர் அடிக்கடி கூறும் இந்த வார்த்தைகளை அன்று நினைத்துக் கொண்டான் பராந்தகன். தனது வாழ்வைத் தீர்மானிப்பதும் அந்த தெய்வம் தான் என்ற உணர்வும் ஏற்பட்டது, இளவரசியின் விளக்கத்தைக் கேட்டபின்பு.

"வண்டாழஞ்சேரியில் எனக்கு பதவியோ, பெரும் வசதிகளோ, உயரிய அந்தஸ்தோ கிடையாது இளவரசி" என்ற பராந்தகனை நோக்கிய இளவரசியின் முறுவல் விரிந்து, இளநகையாக மலர்ந்து அவனை சொக்க வைத்தது.

"வீரரே, ஒன்றை சிந்தித்துப் பாருங்கள். இதுவரை நீங்கள் பாண்டிய நாட்டுக்குச் செய் திருக்கும் சேவைகளுக்காக மன்னர், பதவியும், அந்தஸ்தையும், தம் மகளையும்கூட அளிக்க எண்ணுகிறார். சோழ நாட்டை ராஷ்டிர கூடரிமிருந்து விடுவித்து படைத் தலைவர் விக்கிரமவரையர் பொறுப்பில் ஒப்படைக்க வும், செங்கட் சோழரின் இளவல்கள் வளர்ந்து பட்டமேற்கும்வரை பாதுகாக்கவும் உறுதி கூறியிருக்கிறார்."

"சரி, அதனால்?"

"உங்களால் விடுதலை பெறும் சோழ நாட்டு மக்களும் சரி, பொறுப்பேற்கப் போகும் படைத் தலைவரும் சரி, ஏன், பின்னர் பட்டம் சூடப் போகும் சோழ இளவலும்கூட, உங் களுக்கு எத்தகைய மதிப்பையும் மரியாதையை யும் அளிப்பார்கள்? உங்கள் வார்த்தை அவர் களுக்கு வேதமாக அல்லவா இருக்கும்? சோழ இளவலையும், படைத்தலைவரையும் விட, உங்கள் செல்வாக்கு அல்லவா மக்களிடம் உயர்ந்திருக்கும். என் யூகம் உண்மையென்றால் பல்லவ மன்னரும் உங்கள் வாழ்வு வளம் பெற ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார். உங் கள் விருப்பத்தை நிறைவேற்ற மூன்று மன்னர்களுமே தயாராக இருப்பார் கள். அத்தகைய நிலையில் வாழ்வு அமைபவருக்கோ, உங்களுடன் துணை



மகுட வைரம்

யாக வரப்போகும் எனக்கோ சோழ நாட்டில் என்ன குறைவிருக்கப் போகிறது?"

அவன் வாதத்தில் உண்மை நிரம்பிக்கிடப்பதை உணர்ந்தான் பராந்தகன். "நாமொன்று தீர்மானித்து வைத்திருந்தால், தெய்வம் இளவரசி மூலம் எதிரிலிருக்கும் உண்மையைக் காட்டி நமது தீர்மானத்தை அசைத்து விடுகிறதே" என எண்ணினான் பராந்தகன்.

இளவரசி தொடர்ந்தாள் "இன்னும் என்ன சிந்தனை வேண்டியிருக்கிறது வீரரே? மன்னரிடம் நாளைய ஏற்பாடுகளை மாற்றும்படி நான் சென்று கூறி விடுகிறேன். உங்கள் நோக்கம் ஈடேறியதும், உங்களுடன் சோழ நாட்டுக்கு வரவும் சித்தமாக இருக்கிறேன். சம்மதம் தானே?" மென்மையாக, ஆனால் உறுதியான குரலில் ஒலித்தது அவள் கேள்வி.

"இளவரசி..." இழுத்தான் பராந்தகன்.


"இன்னும் என்ன இளவரசி? அந்தப் பட்டத்தையும், அதற்குரியவற்றையும், அதோ அந்த அழகரிடம் அளித்து விடுங்கள்."

"உத்தரவு" என்று தலைவணங்கிய பராந்தகனைப் பார்த்து இன்பப் புன்முறுவலைக் கூட்டிய குமுதவல்லி, "நீங்கள் இங்கு வந்தது என்னைச் சந்திக்க அல்ல என்பது எனக்குத் தெரியும். உங்கள் வாழ்வின் போக்கை மாற்ற வேறொருவரும் முயற்சி செய்கிறார் என்பதும் தெரியும். ஆனால் உங்கள் முடிவு என்னவாக இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டேன். நான் இங்கிருக்கும்வரை அவர் வரமாட்டார். நர்ன் செல்கிறேன்" என்றவள், வாயிலை நோக்கி நடந்தாள். அவளது துள்ளல் நடை 'ஜல்ஜல்' என்று இனிய சங்கீதமாக ஒலித்தது.

அரண்மனை வாசத்தையும், அதுவரை அனுபவித்த அரச போகத்தையும், அதிகாரத்தையும், தன் அன்புக்காக உதறித் தள்ளி விட்டு, தன்னுடன் வரத் துணிந்துவிட்ட இளவரசியை வியப்புடன் பார்த்தபடி நின்றான் பராந்தகன். தன்னுடன் வாதாடி, தன் லட்சியத்துக்கு எந்தப் பாதகமுமின்றி, தன்னையும் ஒப்புக் கொள்ள வைத்துவிட்ட அவள் திறமை அவனை பிரமிக்க வைத்திருந்தது.

அவன் சிந்தனையைக் கலைத்து பின்புறமிருந்து திடமான காலடியோசை ஒலித்தது. சட்டென்று திரும்பினான் பராந்தகன்.

அவன் எதிரே ஆஜானுபாகுவான மனிதர் ஒருவர் நின்றார். ராஜரீகமான அவரது உடைகளும், பாதம் வரை நீண்ட கனத்த வாளும், விசாலமான பெரு விழிகளும்,



• ஓவியர் ஷ்யாம்

அவரை இதற்கு முன் எங்கோ பார்த்திருப்பதான நினைவு வந்தது பராந்தகனுக்கு.

காஞ்சியிலிருந்து தப்பி இளவரசியையும், கார்குழலியையும் மீட்டு வந்தபோது, எல்லைப்புறத்துச் சத்திரத்தில் பல்லவ மன்னன் வந்ததும், உடன் வந்த பல்லவ உபதலைவர்களில் இந்த மனிதரும் இருந்ததும் பராந்தகனின் நினைவில் வந்தன.

அதே சமயத்தில் மண்டபத்தின் மறு புறத்திலிருந்து முகுந்தன் வேகமாக வந்து அருகில் நின்றான். பராந்தகனை வணங்கியவன், "மன்னிக்க வேண்டும் பராந்தகரே, தாமதமாகிவிட்டது. இவர் ராஜாதித்தர். பல்லவர் படைத் தலைவர். உங்களைக் காண இரு தினங்களாகக் காத்திருக்கிறார்" என்றான்.

அரை மனதுடனேயே அவரை வணங்கிய பராந்தகன், "இரு தினங்களாகக் காத்திருப்பானேன்? அரண்மனைக்கே நேரே வந்திருக்கலாமே" என்றான் சந்தேகம் தொனித்த குரலில்.

"இவர் பல்லவ மன்னரிடமிருந்து முக்கியச் செய்தியொன்றுடன் வந்திருக்கிறார்..." இழுத்தான் முகுந்தன்.

"பல்லவ மன்னரிடமிருந்து செய்தியெனில் அரண்மனைக்கு வர என்ன தடை? பகைவரே ஆனாலும் தனித்து வரும் தூதுவருக்கோ, படைத் தலைவருக்கோ எந்த அபாயமும் நேரிட பாண்டிய மன்னர் அனுமதிக்கமாட்டார் என்பது நீ அறியாததா முகுந்தா?"

ராஜாதித்தர் பதிலளித்தார், "நான் கொண்டுவந்த செய்தி மன்னருக்கல்ல பராந்தகா, உனக்கு. ஆனால் மன்னரிடம் தெரிவிக்க வேறொரு திட்டமிருக்கிறது. அவர் அதை ஏற்பாரா என்பது சந்தேகம், எனவேதான் முதலில் உன்னைச் சந்தித்து..."

அவர் வார்த்தைகளை முடிக்குமுன் பராந்தகன் சற்று உஷ்ணமாகவே குறுக்கிட்டான். "பாண்டிய மன்னர் ஏற்கத் தயங்கும் ஒரு திட்டத்தை நான் ஏற்பேன் என்று எப்படி எதிர்பார்த்தீர்கள்?"

"பராந்தகா, சற்றுப் பொறுமையாகக் கேள்." என்ற ராஜாதித்தர் சற்று நிதானித்தார். "பராந்தகா, நான் கூறப் போவதை சற்றுப் பொறுமையாகக் கேள். முழுவதும் கேட்டபின்பு எந்த முடிவையும் நீ எடுக்கலாம். நான் உன்னை ஒருமையில் அழைப்பது குறித்து தவறாக எண்ணாதே. நீ யார் என்பதை உனக்கு உணர்த்தவும், உன் உரிமைகளை நீ மீண்டும் பெற அழைக்கவுமே நான் வந்தேன். நான் வயதில் மூத்தவன். ஒரு வகையில் உனக்கு உறவினனும்கூட"

அதுவரையில் ஓரளவுக்குப் பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த பராந்தகனின் முகம், அந்த மனிதர் இறுதியாகக் கூறிய வார்த்தைகளைக் கேட்டபின் திடீரெனச் சிவக்கத் தொடங்கியது. விழிகளிலும் உக்கிரமும் சினமும் கொப்பளித்தன. அடுத்து ஒலித்த அவனது வார்த்தைகளில் அதுவரை கண்டறியாத வேகம் தொனித்தது.

"ராஜாதித்தரே, எனக்கும் என் குடும்பத்தவருக்கும் இதுவரை உறவினர் என்று எவருமில்லை. அப்படி கூறிக் கொண்டு இப்பொழுது வருபவர்கள் கொண்டு வரும் செய்திகளையோ, திட்டங்களையோ நான் கேட்டுக் கொள்ளவும் சித்தமாக இல்லை. நான் செல்கிறேன்" என்று படபடத்தவன் திரும்பி "முகுந்தா, இவரை அனுப்பிவிட்டு விரைவில் அரண்மனைக்கு வந்து சேர்." என்று விறுவிறுவென்று வாயிலை நோக்கி நடந்தான்.

யாரையும் அதுவரை எடுத்தெறிந்து

பராந்தகன் பேசியதைக் கண்டறியாத முகுந்தனும், ராஜாதித்தரும் திகைத்தனர். அபாயமான சந்தர்ப்பங்களிலும், சிக்கலும் குழப்பமுமான நேரங்களிலும்கூட நிதானமென்பதை இழக்காமல் பராந்தகன் செயல்படுவதை பலமுறை கண்டிருந்த முகுந்தனுக்கு, தாம் உறவினன் என்று ராஜாதித்தர் கூறியதும், நிதானமிழந்து அவன் சினத்தின் வசப்பட்டது வியப்பாகவே இருந்தது.

ராஜாதித்தரின் குரல் உயர்ந்து ஒலித்தது. "நில், பராந்தகா, சற்று நில். உறவினர்கள் உனக்குத் தேவையில்லையா?"

சற்றே நடையைத் தளர்த்திய பராந்தகனின் பதில் திடமாக ஒலித்தது "தேவையில்லை" என்று.

"ஏன் தேவையில்லை?"

"அதை உம்மிடம் விளக்க வேண்டிய அவசியமில்லை" நடந்தபடியே பதிலளித்த பராந்தகன், திரும்பியும் பாராமல் மண்டபத்தை விட்டு வெளியே வந்தான்.

ராஜாதித்தர் தொடர்ந்து வேகமாக வந்தார்.

"என்னிடம் கூற வேண்டாம் பராந்தகா. பல்லவ மன்னருக்கு நான் பதிலளிக்க வேண்டும். அவருக்காகவேனும் உன் பதிலைக் கூறிவிட்டுப் போ."

பராந்தகன் திரும்பினான். அவன் விழிகள் தீர்க்கமாக அவரை ஒருமுறை அலசின, "ராஜாதித்தரே, உறவு என்பது துன்பத்தில் துணை நிற்பது, தோள் கொடுப்பது, ஆதரவற்ற வேளையில் உதவ இயலாவிட்டாலும், மனதார ஆறுதல் சொல்வது, அக்கறை காட்டுவது. துன்பம் நேரும் வேளையில் ஒதுங்கி நின்றுவிட்டு, நிலை உயர்ந்த பிறகு தேடி வருவது உறவு அல்ல. உமது உறவோ, திட்டங்களோ, அளிக்கும் உரிமைகளோ எனக்குத் தேவையில்லை. முடிந்தால் பாண்டிய மன்னரிடம் கூறி ஏற்றுக் கொள்ள வேண்டுங்கள்."

"உண்மையைப் புரிந்து கொள்ளாமல் ஆத்திரம் கொள்ளாதே பராந்தகா. நீ யார் என்பதை அறிந்து கொள் முதலில்"

"நான் சோழ நாட்டின் வண்டாழஞ்சேரியைச் சேர்ந்த ஒரு விவசாயி. சோழர் படைத் தலைவரால் தற்போது வீரனாயிருக்கிறேன், அவ்வளவே"

"நீ விவசாயியுமல்ல, உன் தந்தை கருணாகரன் ஏழையுமல்ல."

"என் தந்தை ஏழையல்ல என்றால், வேண்டுமென்றே எமது குடும்பத்தை ஏழ்மையில் வளர்த்து தவிக்கவிட்டார் என்கிறீரா?" பராந்தகன் விழிகள் ஜொலித்தன.

"அப்படிக் கூறவில்லை பராந்தகா. உன் தந்தை கருணாகரன் வைராக்கியமும், வெகு மன அழுத்தமும் கொண்டவன். உன்னிடம் முழு உண்மைகளைக் கூறாமல் மறைத்தே வளர்த்திருக்கிறான்."

பராந்தகன் பதிலேதும் கூறவில்லை. அவன் விழிகளில் உக்கிரம் ஏறிக் கொண்டிருந்தது.

ராஜாதித்தார் தொடர்ந்தார். "எங்கே உன் குடும்பத்தைப் பற்றிய உண்மைகளை நீ அறிந்து கொண்டால், இல்லத்திலிருந்து வெளியேறி வேறு வாழ்க்கையைத் தேடிச் சென்றுவிடுவாயோ என்ற அச்சம் அவனுக்கு. அதனால்தான் உண்மைகளை உன்னிடம் கூறாமல் மறைத்திருக்கிறான்."

"நிறுத்தும் ராஜாதித்தரே" - பராந்தகனின் விழிகள் உக்ரோதயங்களாக ஜொலித்தன. இமைப்பதில் பாதிக் கணத்தில் அவன் கச்சையிலிருந்த வாள் வலது கரத்தில் மின்னியது. ராஜாதித்தரை நோக்கி உறுதியாக அது நீளவும் செய்தது.

"என் தந்தையைப் பற்றித் தவறாக இனி ஒரு வார்த்தை உம்மிடமிருந்து வந்தாலும், எனது பதில் இந்த வாளைக் கொண்டுதான் வரும்... எச்சரிக்கை" அனல் துண்டங்களைவிட உஷ்ணத்துடன் உதிர்ந்தன அவன் வார்த்தைகள்.

(தொடரும்)

என் குஷி!

மெலடி சாங்ஸ் எழுதும் போதெல்லாம் எனக்குத் தானா குஷி வந்துடும்!



* பாடலாசிரியர் நா.முத்துக்குமார்

நள்ளிரவு வாகனச் சோதனை. விடுமுறையைக் கழிக்க சென்னையிலிருக்கும் நண்பன் வீட்டுக்கு வருகிறார் இராணுவ வீரர் சரத். வாகன வரிசையில் சரத்தின் வாடகை காருக்கு முன்பு ஒரு வடக்கத்திய திருமதி. அவருக்குத் தமிழ் தெரியாது என்பதைத் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, அவரைக் கட்டாயப் படுத்தி காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்ல முயற்சிக்கிறார் டி.எஸ்.பி. ஆசிஸ். "எனக்கு ஹிந்தி தெரியும்" என்று மூக்கை நுழைக்கிறார் சரத். "நீ மிலிட்டரி



ஏய்ooo

என்றால் பெரிய இவனா?" என்று டி.எஸ்.பி கேட்க, சரத்தோ கோபம் தலைக்கேறி "ஏய்ய்..." என்று கத்த, 'ராம்போ' படத்தின் சில்வர் ஸ்டாலின் போல், உடைகளைக் களைந்து லாக்அப்பில் போட்டு, தண்ணீர் பீரங்கியால் சரத்துக்கே தண்ணீர் காட்டுகிறார்கள். சரத் பொறுமை காக்கிறார். ஆனால் அவரது இராணுவச் சீருடை, அடையாள அட்டை அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்த முயற்சிக்கும்போது, கொதித்தெழுந்து துவம்சம் பண்ணுகிறார்.

மேற்படி காட்சியில் அப்பட்டமான ஹீரோ வழிபாடு வெளிப்படை. ஆனால் படமாக்கிய விதத்தில் இவர் நல்ல படங்களைத் தரக்கூடிய இயக்குனர் என்பது நன்றாகவே தெரிகிறது. இருந்தும் கச்சிதமான விகிதாசாரத்தில் மசாலாவைக் கலப்பதில் தீவிர கவனம் செலுத்தியிருக்கிறார் இயக்குனர் ஏ. வெங்கடேஷ்.

'தவறு செய்யும் குடிமக்களை காவல்துறை தட்டிக் கேட்கிறது. போலீஸ் தவறு செய்தால் யார் தட்டிக் கேட்பது?' என்ற ஒருவரிக் கதையின் பின்னணியில் காதல், காமெடி, ஆக்ஷன் அனைத்தையும் பேக்அப் செய்திருக்கும் திரைக்கதை, படத்தைத் தள்ளாடாமல் காப்பாற்றுகிறது. அதேநேரம் படத்தின் நீண்ட கிளைமாக்ஸ் காட்சி கடைசி நேரத்தில் மண்டை காய வைக்கிறது.

புடைவையில் பாந்தமாகவும், நவீன உடைகளில் பந்தாவாகவும் வளைய வந்து, ஒரே நமீதா இரட்டை வேடம் போட்டு சரத், வடிவேலு இருவரையும் ஏமாற்றுவதை ரசிக்கும்படி காட்டினாலும், 'ஒரொண்ணும் ஒண்ணு' என்ற பாடல் வாயிலாக, இருதார மணத்தை நியாயப் படுத்துவதுபோல் சித்திரிப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தனக்கு இணையான உடற்கட்டு கொண்ட வில்லன் நடிகரை (வின்சென்ட் அசோகன்) படத்தில் அனுமதித்திருக்கும் ஹீரோ சரத்குமாரின் பெருந்தன்மையைப் பாராட்டலாம்.

கோலிவுட்டின் சீனியர் வில்லன் என்ற நிரந்தர கோட்டாவைக் கொடுத்துவிட்டது போல, கோட்டா சீனிவாசராவை ஒரே மாதிரி சித்திரித்து வருவதால், பழைய படம் பார்ப்பது போன்ற உணர்வைத் தவிர்க்க முடியவில்லை.

ஏய் - மாண்புமிகு மசாலா

- விஷுவல்தாசன்

• ஆவரேஜ்

நடக்குமென்பார்; நடக்கும்!

அக்னிசார்

ஜனவரி 12 முதல் 18 வரை



தனுசு ராசிக்காரர் ரமேஷ் கண்ணாவுக்கு சீக்கிரம் நிலைமை உயரப் போகுதாம்.

மேஷம் : குஷியோ குஷியான, உற்சாக, உல்லாச வாரம்ங்க இது. திருப்பத்துக்குத் திருப்பம் அனுகூலம்தான். துணிவும், தன்னம்பிக்கையும் கூடி, காரியங்களை சுலபமா சாதிப்பீங்க. புதிய அறிமுகங்கள் சிலது கிடைக்கும். ஆபீஸ்லயும் எல்லோரும் ஒத்துழைக்கத் தயாராக இருப்பார்கள். தொழில், வியாபாரம் முன்னேற்றமும் லாபமும் பெறும். கொடுக்கல், வாங்கல் கை கொடுக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் ஈடேறி மகிழ்ச்சி கிட்டும். பெண்களுக்கு மாமூலான பலன்கள் தடையில்லாமல் கிடைக்கும். புனித ஸ்தல யாத்திரை சென்று வரும் சந்தர்ப்பம் கிட்டும்.

ரிஷபம் : கொஞ்சம் பொறுங்க. 14ம் தேதிக்கப்புறம் சூரியனோட சஞ்சாரம் உங்க தெய்வ பலத்தையும், நம்பிக்கையையும் படு ஸ்ட்ராங்கா ஆக்கிடறதால, எடுத்த காரியமெல்லாம் சக்ஸஸ் தான். சரளமான பண வசதி, வி.ஐ.பி.க்களோட ஆதரவுன்னு யோக காலம்தான். ஆபீஸ்ல இது வரைக்கும் பிரச்னைகளைக் கிளப்பினவங்கள்லாம் காணாமப் போயிடுவாங்க. சிலருக்கு பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கலாம். குடும்பத்திலயும் பிரச்னைகளும், குழப்பங்களும் மறைஞ்சு நிம்மதி கிடைக்கும். பெண்களுக்கு எண்ணம் போல எல்லாம் நடக்கும்.

மிதுனம் : தீவிரமான ஈடுபாடும், விடாத முயற்சியும் உங்க பிறவிக் குணமாச்சே. விஞ்ஞானம், ஆராய்ச்சின்னு இருந்தாலும், கல்வித் துறையில இருந்தாலும் ஒரு சாதனையைப் படைக்கிற நேரம்ங்க இது. உத்தியோகத்தில மேலதிகாரிகளோட ஆதரவும் அனுகூலமும் கூடும். தொழில், முன்னேற்றம், வியாபாரத்தில லாபம் கூடும். குடும்பத்தில எதிர்பாராத செலவு சிலது காத்திருக்கு, உஷாரா இருங்க. பெண்களுக்கு ஆரோக்கியத்தில

கவனம் தேவை.

கடகம் : வாடிப் போயிருக்கிற உங்க பர்ஸும், வத்திப் போயிருக்கிற பாங்க் அக்கவுண்ட்டும் புதுத் தண்ணீர் வந்த காவேரி போல ஜிலுஜிலுன்னு வளமா யிடும். எதிர்ப்புன்னு இருந்தவங்க எல்லாம் ஏறக்கட்டிட்டு, வேற வேலையைப் பார்க்கப் போயிடுவாங்க. உடம்பிலயும் ஆரோக்கியம் கூடிடும். ஆபீஸ்லயும் அடிக்கொரு திருப்பம் காத்திருக்கு. தொழில், வியாபாரத்திலேயும் புதுக் கணக்கு லாபகரமா தொடங்கும். குடும்பத்திலேயும் சங்கடம், சஞ்சலம் எல்லாம் விலகி சந்தோஷம் எட்டிப் பார்க்கும். பெண்களுக்குக் குதூகலமான வாரம்.

சிம்மம் : பிரார்த்தனை, கோயில், யாத்திரைன்னு ஏதாவது பாக்கி வெச்சிருந்தா உடனே கவனிச்சுடுங்க. தெய்வபலம் கூடினா உங்க சொந்த பலம் கூடும். வளர விடாம வழியை மறிச்சவங்க வாங்கிக்கட்டிக்கிட்டு ஓடப் போறாங்க. ஆபீஸ்லேயும், தொழில், வியாபாரத்திலேயும் நல்ல முன்னேற்றம் காத்திருக்கு. அரசாங்க, வங்கி உதவிகள்னு நீங்க எதிர்பார்த்த உதவியெல்லாம் வந்து சேரும். குடும்பத்திலேயும் குழப்பம் சங்கடம் மறைஞ்சு, சந்தோஷம் தலை தூக்கும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை மகிழ்ச்சி தரும்.

கன்னி : வேர் கீழேயும், மரம் மேலேயும் வளர்ந்தாத்தாங்க வளர்ச்சி. அதனால எதிர்ப்புகளைப் பத்தி கவலைப்படாதீங்க. எல்லாம் தானா சரியாயிடும். பண வசதி சரளமாகவே இருக்கும். ஆபீஸ்லேயும் இதுவரை இருந்த சங்கடமான சூழ்நிலை மாறி, உற்சாகமான இடமா மாறும். தொழில், வியாபாரம் எல்லாம் முன்னேறி, பழைய கடன் காட்சிகளை மாற்றும். புதுத் தொழில் முயற்சி கைகூடும். குடும்பத்தில மகிழ்ச்சி நிலவும். உடன்பிறந்தவர், உறவினர் ஆதரவு பெருகும். பெண்கள் நினைச்சதை சாதிப்பாங்க.

துலாம் : ஒரு தரம், ஒரே தரம் எந்தக் காரியத்தையும் யோசிச்சி செயல்படுங்க, போதும். நிதானமும், நம்பிக்கையும், துணிவும் உங்க காரியங்களை சாதிச்சு வெற்றிக்கொடி கட்டும். வி.ஐ.பி.க்கள் ஆதரவு, தாராள பண வசதி இரண்டும் கைகொடுக்கக் காத்திருக்கு. ஆபீஸ்ல சிலபல குழப்பங்கள், பிரச்னைகள் விலகிடும். குடும்பத்தில பொருளாதாரம் கொஞ்சம் ஏற்ற இறக்கமாக இருக்கும், சமாளிச்சிடலாம் கவலைப்படாதீங்க. பெண்களுக்கு சுபகாரியங்களில் மகிழ்ச்சியோடு ஈடுபடும் யோகம் கூடிவரும்.

இது நல்ல வாரம்

கிழமை	தேதி	நட்சத்திரம்	திதி	மற்றவை
புதன்	ஜன.12 மார்க.28	திருவோணம்	துவிதியை	-
வியாழன்	ஜன.13 மார்க.29	அவிட்டம்	திரிதியை	போகிப் பண்டிகை
வெள்ளி	ஜன.14 தை 1	சதயம்	சதுர்த்தி	பொங்கல் பண்டிகை
சனி	ஜன.15 தை 2	பூரட்டாதி	பஞ்சமி	மாட்டுப் பொங்கல்
ஞாயிறு	ஜன.16 தை 3	உத்திரட்டாதி	சஷ்டி/ ஸப்தமி	திருப்பரங்குன்றம் முருகன் உற்சவம்
திங்கள்	ஜன.17 தை 4	ரேவதி	அஷ்டமி	மதுரை மீனாட்சி பவனி
செவ்வாய்	ஜன.18 தை 5	அஸ்வினி	நவமி	காஞ்சி வரதர் கருட சேவை

பரிகாரம்

'விடிய விடிய முழிச்சாலும் விழுந்து விழுந்து படிச்சாலும், பரீட்சைன்னு வரும்போது படிச்சதெல்லாம் மறந்து போகுதே. மாய்ஞ்சி மாய்ஞ்சி எழுதினாலும் மார்க் வரமாட்டேங்குதே! தேர்வு நெருங்கிடுச்சே, தேறுவமா?'ன்னு கவலைப்படற மாணவ - மணிகளுக்கு மனசுக்குத் தெம்பும், புத்திக்கு பலமும், ஞாபக சக்திக்கு மருந்தும் அருளக் காத்திருக்கா, கல்விக்கு அதிதேவதை மகா சரஸ்வதி. வெற்றியை வரமா கொடுக்க வலம்புரி விநாயகரும் கூடவே இருக்கார். ஒரு தரம் வந்து மனசாரப் பிரார்த்தனை பண்ணிப் பாருங்க. ஐ.ஏ.எஸ். பரீட்சையாயிருந்தாலும் ஆல் இண்டியா ரேங்க் நீங்கதான்.

திருவாரூர் - மயிலாடுதுறை பாதையில் இருக்கிறது இந்த கூத்தனூர் மகா சரஸ்வதி ஆலயம்

- வி



விருச்சிகம் : பெரியவங்க ஆசியும், தெய்வ பலமும் உங்களுக்குப் பக்கத் துணையாக இருந்து, சகல காரியங்களிலேயும் கை கொடுக்கும். அரசாங்க விஷயங்கள் அனுகூலமா நடந்து மகிழ்ச்சி தரும். ஆபீஸ்ல நிதானமா நடந்துக்கறது நல்லது. தொழில், வியாபாரத்தில வர வேண்டிய பணமெல்லாம் வந்து சேர்ந்துடும். குடும்பத்தில ஒற்றுமையும் நிம்மதியும் சேர்ந்து நிலவும். பெண்களுக்கு மக்களால் மகிழ்ச்சி உண்டாகும்.

தனுசு : மாறுதல்ங்கறதுதாங்க உலகத்தோட மாறாத இயற்கை. இப்ப இருக்கிற நிலைமையும் சீக்கிரமா உயர்ந்திடும். பொறுமையா, நிதானமா இருங்க போதும். உறவும் நட்பும் சமயத்தில 'வந்து உதவுவாங்க. ஆபீஸ்லயும் கூடுதல் பொறுப்பு ஏற்படும். புது முயற்சிகளைக் கொஞ்சம் தள்ளிப் போடறது நல்லது. தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு செலவுகள் கொஞ்சம் கூடும். குடும்பத்தில எந்த பாதிப்பும் இல்லாம சகஜ நிலை நிலவும். பெண்களுக்கு நீண்ட நாள் அபிலாஷைகள் நிறைவேறும்.

மகரம் : உங்க காரியங்களுக்குத் தடைக்கல்லா இருந்ததை படிக்கல்லா மாத்திக்கிற திறமை உங்களுக்கிருக்கு. அப்புறமென்ன, துணிவும் தன்னம்பிக்கையுமா முன்னேறுங்க. பண நடமாட்டம் ரொம்ப தாராளம்தான், ஆனால் கவனமா கையாளுங்க. உத்தியோகத்தில உங்க திறமை என்னங்கறது மத்தவங்களுக்குப் புரியற நேரம்ங்க இது. தொழில், வியாபாரம் எல்லாம் அனுகூலமா நடக்கும். குடும்பத்தில கருத்து வேறுபாடுகள் மறைஞ்சு ஒற்றுமையும் மகிழ்ச்சியும் கூடும். பெண்களின் எண்ணங்கள் ஈடேறும்.

கும்பம் : எல்லாக் காரியங்களும் சாதகமாகவே இருந்தாலும், உங்க பொருளாதாரம் ஏற்ற இறக்கமா இருக்கும். குரு பகவான் பார்வையால எல்லாத்தையும் சமாளிச்சுடுவீங்க. புதியவர்கள் அறிமுகம் சிலது கிடைக்கும்னாலும் கொஞ்சம் எச்சரிக்கையா பழகுங்க. ஆபீஸ்ல உங்க திறமைக்குரிய பாராட்டு கிடைக்கும். புதிய முயற்சிகள்ல நிதானம் ரொம்ப அவசியம். குடும்பத்தில கருத்து வேறுபாடுகள் மறைஞ்சு ஒற்றுமை கூடும். பெண்களுக்கு உடன்பிறந்தவர்களால் ஆதாயம் கிட்டும்.

மீனம் : தெளிவான மனம்ங்கறது தெய்வம் கொடுக்கற வரம். அந்த வரம் பூரணமா உங்களுக்கிருக்கிறதால சகலமும் அனுகூலம்தான். ஆபீஸ்ல எதிர்ப்புகள் மறைஞ்சு புதிய திருப்பம் ஒண்ணு காத்திருக்கு. தொழில், வியாபாரம் நல்லபடியா முன்னேறும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில ஒற்றுமையும், நிம்மதியும் கூடும். பெண்களுக்கு உற்சாகமான வாரம். ●

"பெண்கள்

கடந்த டிசம்பர் இரண்டாவது ஞாயிறன்று காலை ஒன்பது மணிக்கு, கே. டிவி பார்த்துக் கொண்டிருந்த நேயர்களை ஒரு உலுக்கு உலுக்கியது அந்த டாக் ஷோவின் தலைப்பு! 'பெண்களுக்குத் திருமணம் அவசியமா? அநாவசியமா?' என்று நடிகை ரேவதி விவாதத்தைத் தொடங்கி வைக்க, இருபது வயது இளம் பெண்களும், அறுபது வயது அம்மாக்களும் விறுவிறுப்பான கருத்துகளை முன் வைத்தார்கள். எல்லோரது கருத்துகளிலும் நியாயங்களும் இருந்தன, முரண்பாடுகளும் இருந்தன. விவாதம் ஆரோக்கியமாகத் தொடர்ந்தது. புரட்சிகர டாக் ஷோ என்கிற ஆரவார சலசலப்புகளுக்கு மத்தியில் பெண்களைக் கௌரவப்படுத்தி, அவர்கள் கண்ணீர் சிந்தும் பலவீனர்கள் அல்ல என்று சொல்லாமல் சொல்லிய அந்த விவாத நிகழ்ச்சி, 'புதுமைப் பெண்கள்'. நூற்றுப் பதினைந்து வாரங்களைக் கடந்து ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் இந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர், மதுரையைச் சேர்ந்த இளைஞரான இரா. ரவிச்சந்திரன்.



* ரவிச்சந்திரன்

"இது வெறும் மகளிர் அரட்டை அரங்கம் அல்ல. பெண்களின் பிரச்னைகளைப் பெண்களே சிந்திக்கவும், விவாதிக்கவும் வேண்டும். விவாத மேடையிலேயே தீர்வு பற்றி குறைந்தபட்சம் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று விரும்பினோம். 'இருட்டைச் சபிப்பதைவிட, ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றுவதே சிறந்தது' என்பார்கள். அந்த வழியில் வயது வரம்பைத் தவிர்த்து, அந்தந்த ஊர்ப் பெண்களையே பேச வைத்தோம். இந்தச் சுதந்திரம் வழங்கியதும் பெண்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சியைப் பார்க்க வேண்டுமே!" என்று வியந்துபோகும் ரவிச்சந்திரன், இந்த நிகழ்ச்சியின் தொகுப்பாளர் ரேவதி, சலிப்போ, சோர்வோ இல்லாமல் தமிழகம் முழுவதும் வந்து, இயல்பான தமிழில் பேசி, பெண்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டி வருவதாகக் கூறுகிறார்.

"ஒவ்வொரு ஊரிலும் நடைபெறும் நிகழ்ச்சியை ஒளிபரப்புவதில் கிடைக்கும் லாபம், அந்தந்த ஊர்களுக்குத் தேவையான சமூக நலப் பணிகளுக்குப் பயன்படுகிறது. மதுரையில் நடத்திய நிகழ்ச்சி மூலம் கிடைத்த தொகையில், கிழக்கு அரிமா சங்கத்துடன் இணைந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு, ஒரு லட்ச ரூபாய்க்குக் கூடுதல் கட்டில் வசதி செய்து தந்தோம். புதுவையில் நடத்திய நிகழ்ச்சி மூலம், இருவருக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சை, கும்பகோணத்தில் நடத்திய நிகழ்ச்சி மூலம் தீ விபத்தில் அதிகக் காயமுற்ற சிறுமிக்கு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை என, எங்களின் சமூக நலன் நாடும் சேவைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்" என்கிறார் ரவிச்சந்திரன். புதுமைப் பெண்கள் நிகழ்ச்சி, உண்மையில் புதுமை நிகழ்ச்சிதான்!



* 'புதுமைப் பெண்கள்' நிகழ்ச்சியில் ரேவதி...

சன் டி.வியின் மதிய ஸ்லாட்டில் 'அவர்கள்' முடிந்த கையோடு, ஏவிஎம் மின் 'நிம்மதி'யை ஆரம்பித்திருக்கிறார்கள். ஷூட்டிங் ஸ்பாட்டில் ஆஜராகி, விஷ்வாவை வம்புக்கிழுத்தோம்.

"நீங்கதான் இந்த சீரியல்ல வில்லனாமே...?" என்றதும் டென்ஷனாகி விட்டார்.

"ரொம்பக் குசும்புதான். ஹீரோவே நான் தாங்க. இது முழுக்க



* விஷ்வா - மீனாகுமாரி

அழமாட்டாங்க!"

முழுக்க ஹீரோ ஓரியன்டட் சீரியல். 'மெட்டி ஒலி'க்கு அப்புறம் கிடைத்த ஒரு சவாலான, கனமான கேரக்டர். இதுல நான் ஐந்து தங்கைகளுக்கு அண்ணன். அவங்களை எப்படி நல்லபடியா வாழ வைக்கிறேங்கிறதுதான் கதை. ரொம்ப யதார்த்தமான கதை, கேரக்டர்ஸ். இந்த சீரியல்ல பேனர், கதை, கேரக்டர் மூணுமே நல்லா அமைஞ்சிருக்கு. அதனால சீரியல் கண்டிப்பா நல்லா வரும்" என்றார்.

அந்த நேரம் பார்த்து சீரியல் நாயகி மீனாகுமாரி எதிர்ப்பட, "எங்க கொஞ்ச நாள் ஆளையே காணல?" என்று நூல் விட்டோம்.

"கொஞ்ச நாள் மலையாளம் சீரியல் பண்ணிட்டு இருந்தேன். 'நிம்மதி'ல கூப்பிட்டாங்க. ஏவிஎம் பேனர்ங்கறதால மீண்டும் தமிழ்ப் பக்கமே வந்துட்டேன். இந்த சீரியல்ல, நான் ஐந்து பெண்களுக்குத் தாய் ஸ்தானத்துல இருந்து காப்பாத்தற அண்ணி கேரக்டர் பண்றேன். வித்தியாசமான கதை. மக்கள்கிட்ட ஈஸியா ரீச் ஆகும்" என்று சிரித்த மீனா, போகிற போக்கில் "இந்த சீரியல்ல வில்லி யார் தெரியுமா? ஷில்பாதான்" என்று சொல்லி விட்டுப் போனார்.

விடுவோமா? ஷூட்டிங்கிலிருந்தவரை அணுகி, "என்ன ஹீரோயின்லேர்ந்து வில்லியா மாறிட்டீங்க... டீ-ப்ரோமோஷனா?" என்றோம்.

"நெகட்டிவ் ரோல்தான். இருந்தாலும் வாழ்க்கைல நினைச்சதை சாதிக்கணும்ங்கற வெறிகொண்ட கேரக்டர். என்னால ஹீரோயினா மட்டுமில்ல, 'வில்லி'யாவும் பிரமாதப்படுத்த முடியும்னு நிரூபித்துக் காட்ட கிடைத்த ஒரு மெகா வாய்ப்பு இது. அதான் ஒப்புக்கிட்டேன்."

"இதுலயும் அழுவீங்களா?"

"அதை நீங்க டைரக்டர்கிட்டதான் கேக்கணும்" என்றார். கேட்டோம்.

"ஒரு ஆணை மையமா வச்சி இந்தக் கதையைத் தயார் பண்ணியிருக்கோம். இதுவே இப்ப இருக்குற டிரெண்டுக்கு ரொம்ப வித்தியாசமான விஷயம். 'இந்த சீரியல்ல பெண்கள் அழ மாட்டாங்க. ஆனா சம்பவங்கள் ரசிகைகளின் மனத்தை நெகிழ வைக்கும். பதினைந்து எபிசோடுகளுக்குள் டி.ஆர்.பியைப் பிடித்து என்னை நிரூபித்து விடுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்றார் 'நிம்மதி' இயக்குனர் தண்டபாணி.

- ஸ்ரீ. கோகிலா

ஜாலி பார்ட்டி!

ஊழியர்கள், தங்கள் மேலதிகாரிகளை குஷிப்படுத்துவது எப்படி என்று நினைத்த காலம்போய், இன்று, 'நம் கம்பெனியில் பணிபுரிபவர்களை குஷிப்படுத்துவது எப்படி? அதன் மூலம் கம்பெனியை மேலும் முன்னுக்குக் கொண்டு வருவது எப்படி' என்கிற கோணத்தில் கம்பெனிகள் சிந்திக்க ஆரம்பித்துவிட்டன. அதற்கென பல்வேறு பிரத்யேகத் திட்டங்களையும் செயல்படுத்துகின்றன.

'இமேஜ் ஈக்விட்டி' என்ற நிறுவனம், பல்வேறு கம்பெனிகளிலும் இப்படி 'ஊழியர்களைக் குஷிப்படுத்தும்' திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதனை வெற்றிகரமாக நடத்தி வருகிறார் ஆனந்த் விஸ்வநாதன்.

"ஒரு கம்பெனியின் ஷேர் ஹோல்டர்கள், கஸ்டமர்கள் ஆகியோரை திருப்திப்படுத்துவது முக்கியம்தான். ஆனால், அங்கு பணிபுரியும் ஊழியர்களின் முழுமையான ஈடுபாட்டுடன்கூடிய ஒத்துழைப்பு அதைவிட முக்கியம். தங்களிடம் பணிபுரிபவர்களின் ஈடுபாட்டை, உழைப்புத் திறனை அதிகரிக்க, மனிதவள மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அதிலும் இப்போது அணுகுமுறையில் மாற்றம் வந்துவிட்டது. வகுப்பறை போன்ற சூழ்நிலையில், பயிற்சி வகுப்புகளை இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து நடத்துவதற்குப் பதிலாக, வேலை நேரத்தின்போதே அவ்வப்போது, இடையில் அரைமணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள்'' என்கிறார் ஆனந்த். இவர் நடத்தும் 'பான்ஸர்' நிகழ்ச்சிக்கு பல்வேறு கம்பெனிகளிலும் அமோக வரவேற்பு. இவரது 'பான்ஸர்' நிகழ்ச்சியை நடத்தும் நிறுவனங்களின் பட்டியல் நீளமானது. இதில் ஏர்டெல், பிட்ஸா கார்னர், போலாரிஸ், பார்க் ஷெரட்டன், லைஃப் ஸ்டைல் ஸ்டோர்ஸ், டேஸ்டி பைட் என்று பல பிரபல நிறுவனங்கள் அடக்கம்.



• ஆனந்த்



• ஸ்ட்ராவில் வேர்க்கடலை...

ஒரு பெரிய மேஜை. அதன் ஒரு முனையில் ஒரு கண்ணாடிக் கிண்ணத்தில் வறுத்த வேர்க்கடலை வைக்கப்பட்டுள்ளது. இன்னொரு முனையில் இன்னொரு காலி கண்ணாடிக் கிண்ணம். மொத்தம் நான்கு அணிகள். இந்தக் கிண்ணத்திலிருந்து கையால் தொடாமல் ஒரு ஸ்ட்ராவைப் பயன்படுத்தி, வேர்க்கடலைப் பருப்புகளை ஒவ்வொன்றாக மறுமுனையில் உள்ள கிண்ணத்தில் கொண்டு போய்ப் போட வேண்டும். எந்த அணி அதிக எண்ணிக்கையில் வேர்க்கடலையைக் கொண்டு போய்ச் சேர்க்கிறதோ, அதுவே வெற்றி பெற்ற அணி.

"இது, எளிமையான, வேடிக்கையான விளையாட்டுதான். எல்லோரும் ரொம்ப ஜாலியாய் பங்கேற்பார்கள். விளையாட்டு

—இது ஆபீஸ் குஷி!



• கொண்டாட்டம்

முடிந்ததும், ஓர் அலசல் நடக்கும். வெற்றி பெற்ற அணி, என்னென்ன டெக்னிக்குகளைக் கையாண்டு ஜெயித்தது, தோல்வி அடைந்த அணி என்ன செய்யத் தவறியது என்ற அலசலில், பல உருப்படியான விஷயங்கள் கிடைக்கும். ஆனால் விஷயம் விளையாட்டாக இத்துடன் முடியாது. சப்ஜெக்ட் அப்படியே, 'ஒரு குழுவில் இணைந்து அனைவரும் சேர்ந்து உழைத்து நிர்ணயித்த இலக்கைச் சாதிப்பது எப்படி?' என்று தாவி, அதற்கு, 'அந்த விளையாட்டில் பயன்படுத்திய டெக்னிக்குகள் கூட உதவும்' என்று விளக்கப்படும். பயிற்சி வகுப்பறையில் உட்கார வைத்து ஒன்றரை மணி நேரம் லெக்சர் கொடுத்தாலும் பிடிபடாத பாடம், அரை மணி நேர விளையாட்டில் நல்லவித பாதிப்பினை ஏற்படுத்தும். சமயங்களில் கதைகூடச் சொல்லுவோம்" என்கிறார் ஆனந்த். நாமும் கதை கேட்க ரெடியானோம்.

"கடற்கரையில் மணலில் கிடக்கும் நட்சத்திர மீன்களை ஒவ்வொன்றாக எடுத்து, கடலில் திரும்ப வீசிக் கொண்டிருந்த பெரியவரிடம், ஓர் இளைஞன் 'ஆயிரக்கணக்கான நட்சத்திர மீன்கள் மணலில் கிடக்கின்றன. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் திரும்பக் கடலில் வீசுவதால், பெரிதாய் என்ன சாதித்துவிட முடியும்?' என்று கேட்டானாம்.

'ஆயிரக்கணக்கான நட்சத்திர மீன்களில் ஒரு சிலவற்றை திரும்பக் கடலில் எடுத்துப் போடுவது என்பது பெரிய விஷயமில்லைதான். ஆனால், அந்த சில நட்சத்திர மீன்களைப் பொறுத்தவரை 'சாவு' என்பது மாறி, 'வாழ்வு' கிடைப்பது பெரிய விஷயம்தானே! அது போதும் எனக்கு!'

இந்தக் கதையைச் சொல்லும்போதே, 'நம் அலுவலகம் எவ்வளவு பெரிசு. இதில் நான் ஒரு துளி. என்னால் என்ன பெரிதாகச் செய்துவிட முடியும்? என்று நினைக்காதீர்கள். நீங்கள் செய்கிற சிறு பணியும், நிறுவனத்தின் முன்னேற்றத்துக்குக் கண்டிப்பாக உதவும் என்பதை மறந்துவிடாதீர்கள்' என்று சொன்னால், அதனால் கிடைக்கிற பலனே தனிதான்.

பான்ஸர் நிகழ்ச்சிகளின்போது ஏராளமான விளையாட்டுகள் விளையாடப்படுகின்றன. அவை வெறும் விளையாட்டுகளில்லை. விளையாட்டுகளில் பாடம் சொல்லும் ஆசான்கள்."

சரி... அதென்ன பான்ஸர்?

"பான்ஸர் என்பது ஒரு ஆஸ்திரேலிய வார்த்தை. திறமையான ஜாலி பாய் என்று அர்த்தம். ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் சர் டொனால்டு பிராட்மென், நம் ஊர் சச்சின் டெண்டுல்கரைப் புகழ்ந்து சொன்ன வார்த்தை இது. இந்நிகழ்ச்சி மூலம் ஒவ்வொருவரும் சச்சின் போல பிரகாசிக்க முடியும் என்பதைச் சொல்லாமல் சொல்லும் வார்த்தைதான் பான்ஸர்" என்று புன்னகைக்கிறார் ஆனந்த்.

- மானஸா

பெங்காலி பொங்கல்

என்ன... பொங்கல் வேலை ஜெகஜ் ஜோதியா போயிண்டிருக்கா... நடக்கட்டும்... நடக்கட்டும். இந்த வாரம் 'குஷி' ஸ்பெஷல்ங்கறதால நானும் உங்களை குஷிப் படுத்த வேணாமா? அதான் பெங்காலி பொங்கலோட வந்திருக்கேன். இதை டேஸ்ட் பண்றதுக்கு நம்ம 'மன்மத ராணி' சாயாசிங் வருவேன்னு சொல்லியிருக்கா! ஆளை இன்னும் காணோம். அவ வர்றப்ப வரட்டும், நாம ஆரம்பிப்போம் வாங்க.

முதல்ல நான் சொல்றதெல்லாம் எடுத்துக்கோங்க. அரிசி 200 கிராம் - அரிசி புதுசா இருந்தா, பொங்கல் செய்யறதுக்கு ஈஸியா இருக்கும், பால் ரெண்டு லிட்டர் - வேணும்னா, பால் 1 லிட்டர் + தண்ணீர் 1 லிட்டர் கலந்து எடுக்கலாம். சர்க்கரை 300 கிராம், ஜாதிபத்ரி பொடி 2 சிட்டிகை, ஜாதிக்காய் பொடி 2 சிட்டிகை, நெய் 3 டேபிள் ஸ்பூன், உலர்ந்த திராட்சை 15, உப்பு 1/2 டீஸ்பூன். அடுத்து சொல்லப் போறது கொஞ்சம் வெயிட்டான ஐட்டம்ஸ். முந்திரிப் பருப்பு 20 (முழுசா இருக்கணும்), பிஸ்தா பருப்பு 8, பாதாம் பருப்பு 10 (காக்க! காக்க! கொலஸ்ட்ரால் காக்க) குங்குமப்பூ 1 சிட்டிகை.

முதல்ல பிஸ்தா 5, முந்திரி 5, பாதாம் 5னு மூணுத்தையும் வெந்நீர்ல போட்டு சித்த ஊறவச்சி, நன்னா அரைச்சிடுங்கோ. இப்போ ஒரு பாத்திரத்துல ஒண்ணரை லிட்டர் பாலை ஊத்தி, நாம ஏற்கெனவே தயார் பண்ணின பிஸ்தா + முந்திரி + பாதாம் பேஸ்டை பால்ல கலந்து நன்னா காய்ச்சங்கோ. கொதி வந்துடுத்துன்னா, அதுல அரிசியைப் போட்டு கிளறிண்டே இருக்கணும். அரிசி குழையற வரைக்கும் கிளறணும். இப்போ சர்க்கரையை கொஞ்சம் கொஞ்சமா சேர்த்துண்டே வரணும். மறந்துடாம உப்பையும் கலந்துக்கோங்கோ. சர்க்கரை கரைஞ்சுடுத்துன்னா பொங்கலை இறக்கிடணும். ஒருவேளை பொங்கல் ரொம்ப கெட்டியா இருந்துச்சுன்னு வச்சிக்



பெங்காலி பொங்கல் டேஸ்ட்டுக்கு அடிமையாகி அடிக்கடி சாப்பிட்டு குண்டாயிடுவேனோன்னு பயமா இருக்கு!



கோங்கோ, மீதமிருக்கும் அரை லிட்டர் பாலையும் பொங்கல்ல விட்டுடுங்கோ.

பாக்கியிருக்கிற பிஸ்தா, பாதாம், முந்திரி, திராட்சை நாலுத்தையும் நெய் யில போட்டு வறுத்துண்டு, அதோட ஜாதிபத்ரி பொடியையும், ஜாதிக்காய் பொடியையும் மிக்ஸ் பண்ணிக்கணும். இந்தக் கலவையை அப்படியே பொங் கல்ல கலந்துடுங்கோ. இப்போ கொஞ்சம் சூடான பால்ல கொஞ்சூண்டு குங்குமப் பூவை பொங்கல்ல போட்டுக் கலந்தா, கடச்கட சூப்பர் பெங்காலி பொங்கல் ரெடி. இதுல இன்னொரு முக்கியமான விஷயம் - சர்க்கரைக்குப் பதிலா சீனா கல்கண்டை வாங்கிண்டு வந்து, பொடி பண்ணி யூஸ் பண்ணினா, டேஸ்ட் எகிறிடும்.

ஆஹா... நான் முடிக்கறதுக்கும் சாயாசிங் வர்றதுக்கும் சரியா இருக்கு.

"வாடிம்மா... ஏன் இத்தன நாழி?"

"சாரி மாமி, வழியில டிராஃபிக் ஜாம்!"

"திரும்பவும் ரெசிபி சொல்ல தொண் டைல தண்ணியில்ல. வேணும்னா பெங்காலி பொங்கல் சாப்பிட்டுட்டுக் கிளம்பு..."

"பேஷா மாமி, ரெசிபி வேண்டாம். பொங்கல் போதும்"

"அலையாதேடி அசடு! இந்தா சாப்பிட்டுப் பார்த்து சொல்லு"

"மாமி_ ஐயாம் சாரி. சுமாரா இருக்கும்னு நெனச்சித்தான் ரெசிபி வேணாம்னேன். பொங்கல் பிரமாதம்... ரெசிபி ப்ளீஸ்..."

"சொல்றேண்டிம்மா. ஆனா ஒரு கண்டிஷன். நீ குஷியா ஒரு தடவை மன்மத ராசா ஆடிக்காட்டணும்... என்ன?"



"ஆடறேன் மாமி. இந்தப் பெங்காலி பொங்கல் சாப்பிட்டா நான் குண் டாயிடமாட்டேனே... ஒரே முந்திரியும், பிஸ்தாவுமா இருக்கே."

"ஒண்ணும் ஆகாதுடியம்மா..." ●



பூரிப்பு... மெய்சிலிர்ப்பு!

✉ உலக அதிசயமானால் மீனாட்சி கோயிலின் புனிதம் கெட்டுவிடும் என்று புலம்பும் இல.கணேசனுக்கு, தராசு மிகச் சரியான விளக்கம் தந்திருப்பது வெகு நயம்!
அயன்புரம், த.சத்தியநாராயணன்

✉ எழுபது வயதா என எண்ணத் தோன்றாமல், எழுதிக் கொண்டிருக்கும் ஈரோடு தமிழன்பனுக்கு, வாழும்போதே சாகித்ய அகாடமி பரிசு தந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.
கல்பூண்டி, பூ.சீனிவாசன்

✉ 'லஞ்சம் தரவில்லை, அன்பளிப்புதான்' என்று சாதித்திடும் லாலுவின் லொள்ளுத்தனத்துக்கு தலையங்கம் மூலமாகக் கண்டனம் தெரிவித்திருப்பது முற்றிலும் சரியே.
பெங்களூர், ப.மூர்த்தி

✉ 'மடம் பெரிதா? மதம் பெரிதா?' என்ற வாசகரின் கேள்விக்கு தராசுவின் பதில் 'பளிச்... பளிச்...!'
திருவாரூர், லதா கணேஷ்

✉ 'புது கோதுமை புது நாத்து' என்ற தலைப்பில் வந்த கட்டுரை புது வருட நற்செய்தியாகயிருந்தது. இச்செய்தி விவசாயிகளுக்கு மட்டுமல்ல, பொது மக்களுக்கும் மிகவும் பயனுள்ள செய்தியாகும்.
லால்குடி, எம்.இராஜேந்திரன்

✉ 'மைக்ரோவேவ் மாமி'யின் மலபார் அடை பேஷ்... பேஷ்... ரொம்ப நன்னாயிருந்துச்சு...!
திருவாரூர், ஆர்.வாணி

✉ மதச்சார்பின்மை என்கிற சர்வரோக நிவாரணி இருக்கும்வரை லாலுவுக்கு என்ன கவலை? அவர் எங்கு சென்று எதைப் பேசினாலும் மிகப்பெரிய செய்தியாக வெளியிடும் மீடியாக்களுக்கு மத்தியில் கல்கியின் தலையங்கம் நல்ல சாட்டையடி.
சென்னை, ஆர். நாகராஜன்

✉ கல்கியின் 'கவிதாஞ்சலி' அவர் மீது மக்கள் கொண்ட அன்பு எப்படிப்பட்டது என்பதை வெட்ட வெளிச்சமாகக் காட்டியது. அணையா விளக்காக அத்தனை அன்பு நெஞ்சங்களிலும் அவர் குடி கொண்டுள்ளார்.
சென்னை, வே. முருகேசன்

✉ மரணத்தின் பிடியிலிருந்து, தம்மை விடுவித்துக் கொண்டு, பீனிக்ஸ் பறவை போல் உயிர்த்தெழுந்து, எழுத்துலகில் உலா வரும் படுதலம் சுகுமாரனின் சந்திப்பில் கல்கி காட்டிய பரிவு பாராட்டுக்குரியது. மழலையின் வாழ்த்தும் பலிக்கட்டும்!
மணவாள நகர், என்.பி.எஸ்.மணியன்

✉ 'காதல்' திரைப்படம்



குறித்து, கல்கியின் விமர்சனம் சரியான திறனாய்வுடன் எழுதப்பட்டது என்றால், காதல் தம்பதி பாபு - திரிபுரசுந்தரி இருவரின் விமர்சனங்கள் மனதுக்கு நிறைவைத் தந்தன.

கூத்தப்பாக்கம், *மு.உலகாண்ட ஈஸ்வரி*

ரசிகர்களில், ஒருவருக்குக் கூட சங்கீதம் தெரியாமலா கைதட்டினார்கள்?

சென்னை, *ஆர். பார்த்தசாரதி*





✉ வெறும் புதுத் தோற்றம் மட்டுமே அழகாகிவிடாது. உள்ளுக்குள் ஓடும் உணர்வுகள், திறமைகள் அனைத்தையும் வெளிக்கொணர்ந்து, தமிழகக் கலாசாரத்தைச் சார்ந்த ஒரு பெண்ணையே தமிழ் அழகியாக விஜய் டி.வி. தேர்வு செய்வது வரவேற்கத்தக்கது.

சென்னை, *கே.வி.ராமன்*

✉ துண்டுச் சீட்டில் அறக்கட்டளை கணக்கு மூன்று குற்றச்சாட்டுக்கள் என்று எல்லாம் பார்க்கும்போது, நெருப்பில்லாமல் புகையாது என்றே எண்ணத் தோன்றுகிறது. பொறுப்பாளி என்ற முறையில், பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதும், விளக்கமளிப்பதும் விஜயகாந்தின் தலையாய கடமை என்பதை அவர் உணர வேண்டும்.

திருச்சி, *அ. ஃபாத்திமா*

✉ 'கல்கி என்றாலே மரியாதை, மதிப்பு என்று அர்த்தமாகிவிட்டது' என்ற குஷ்பூவின் பாராட்டுரையைப் படித்ததும், கல்கியின் வாசகர்களாகிய நாங்கள் பூரிப்பில் மெய்சிலிர்த்தோம்!

வேலூர், *வே.ந.கதிர்வேல்*

✉ 'தும்புரு' எழுதிய 'கிருஷ்ணா, ராமா, கோவிந்தா' என்ற இசை விமர்சனம் (இளங்கலைஞர்களான டி.என்.எஸ். கிருஷ்ணா ஸ்ரீராம் பார்த்தசாரதி பற்றியது) ஏற்புடையதாக இல்லை. குறைகளைச் சுட்டிக்காட்டி இதமாக அறிவுரை கூற வேண்டுமேயன்றி, கர்னாடக இசையின் வளர்ச்சிக்கு சுடுநீர் ஊற்றக் கூடாது. ஒரேயடியாகப் புகழ வேண்டாம். ஆனால் ஊக்குவிக்க வேண்டாமா? அத்தனை

✉ ஸ்ரீஜயேந்திரர் கைதாகி வேலூர் சிறையில் வைக்கப்பட்ட உடனேயே காஞ்சி சங்கர மடத்தின் மானேஜர் சுந்தரேச அய்யர் அவரைக் காணச் சென்றார். அப்போது மானேஜர் மூலமாக ஸ்ரீவிஜயேந்திரருக்கு ஸ்ரீஜயேந்திரர் அனுப்பிய கட்டளைகள் மூன்று.

பால பெரியவர் காஞ்சி மடத்திலேயே இருந்தபடி நித்ய பூஜைகள் செய்ய வேண்டும்.

வேலூர் ஜெயிலுக்கு தம்மைக் காண அவர் வர வேண்டாம்.

பால பெரியவர் பத்திரிகையாளர்களைச் சந்திப்பதையும், பேட்டி அளிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

இதைத்தான் ஸ்ரீவிஜயேந்திரர் இன்று கடைப்பிடித்து வருகிறார்.

சென்னை, *எஸ்.விஸ்வநாதன்*

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

'ஓம் நமோ நாராயணாய' என்ற அஷ்டாக்ஷர மந்திரத்தை சுவாமி தேசிகன் விவரிக்கிறார்:

பிரணவத்துக்கு 'தாரம்' என்று பெயர்; மந்திர சாஸ்திரத்திலே, 'நம்மையெல்லாம் இந்த பூலோகத்திலிருந்து உயர்ந்த கதிக்கு அழைத்துச் சென்று தரிக்கப் பண்ணுவதால், அதற்கு தாரம் என்று பெயர். ஒற்றை எழுத்து பிரணவம் முன்பு வர, அடுத்து நம: இரண்டு எழுத்து இடையில் வருகிறது. இந்த நம: தான் ஹ்ருதயம் நாராயண மந்திரத்துக்கு. இதற்குப் பிறகு நாராயணாய என்று ஐந்தெழுத்து சேர்கிறது. ஐந்தும் இரண்டும் ஒன்றும் சேர்ந்து எட்டு. இந்த எட்டினால் எட்டாததே கிடையாது! எல்லாமே நமக்குக் கிட்டி நிற்கும். அப்படிப்பட்ட எட்டெழுத்துக்குப் பொருளாக விளங்கக்கூடிய நாராயணனுடைய பெருமையைக் காட்டக்கூடிய திவ்யமான வாக்கியமே சஹஸ்ரநாமத்தின் ஆரம்பம்:

விச்வம் விஷ்ணுர் வஷட்கார:
பூத பவ்ய பவத்ப்ரபு:


– இது மொத்தத்தையும் ஒரே சப்தத்திலே சொல்ல வேண்டுமானால் 'நாராயணா' என்று சொல்ல வேண்டும்.

'ஓம் நமோ நாராயணாய' என்று மந்திரத்தைச் சொல்கிறோம். அதையே அர்ச்சனையின்போது 'ஓம் நாராயணாய நம:' என்று உச்சரிக்கிறோம். இதன் பொருள் என்ன...?

'எவன் எல்லா சராசரங்களுக்குள்ளும் உறைகிறானோ, எவனுக்குள் எல்லா சராசரங்களும் இருக்கிறதோ, அவன்' என்று பொருள்.

பாணினி மஹரிஷியானவர், அழகாக ஒரு சூத்திரம் விதித்தார்.

நார + அயன என்று எழுதினோமானால் நாராயணனுக்கு மூன்று சுழி வராது. அப்படி எழுதுகிறபோது இரண்டு



11 ஏழாம் பாகம்

சுழிதான் போட வேண்டும். இல்லா விட்டால் 'ந'கரம் போட வேண்டும். அப்படி இல்லாமல் மூன்று சுழிதானே போடுகிறோம். ஏன்...?

ஏனென்றால், இந்த மாதிரி ஒருத் தரையே குறிக்கக்கூடிய - மற்ற யாரை யும் எதையும் குறிக்காத சப்தமாக வருகிறபோது, அவ்வாறு மூன்று சுழிதான் வரும்.

- இப்படி சூத்திரம் எழுதி வைத்து விட்டார் பாணினி.

ஆகவே நார + அயன = நாராயண. எம்பெருமான் விஷ்ணுவை மட்டுமே குறிக்கும்படியான சொல் இது.

குறையொன்றுமில்லை

மற்றொன்றைக் குறிக்கவே குறிக்காது. ஆனால் மீதி சொற்கள் அப்படி இல்லை. அவை பிறரையும் குறிக்கும்.

பிரஜாபதி என்கிற சப்தத்துக்கு சாமானியமான விளக்கம் பண்ணிப் பார்த்தோமானால், 'பிரும்மா' என்று அர்த்தம் கிடைக்கும். ஆனால் அதே பிரஜாபதி சப்தம், சமயத்தில் பகவான் நாராயணனையும் குறிக்கும். இப்படி ஒரே சப்தம் பிரும்மாவையும் குறிக்கிறது, நாராயணனையும் குறிக்கிறது. ஆனால், நாராயண என்கிற சப்தம் வேறு யாரையும், எதையும் குறிக்காது.

ஆகவே இந்தத் திருநாமத்தின் ஏற்றத்தை நாம் நன்றாக உணர வேண்டும்.



அப்படிப்பட்ட நாராயண சப்தத்திலிருந்து தோன்றியதுதான் விச்வம், விஷ்ணு என்ற திருநாமங்கள்.

வேதத்தில் கர்ம காண்டத்தில், எங்கு பார்த்தாலும் விஷ்ணு சப்தம் தான். அவதார காலத்தில் வாசுதேவ சப்தத்தைக் குறிப்பிட்டுச் சொல்கிறோம்.

'விச்வம், விஷ்ணு, வாசுதேவ' என்று மூன்று சப்தங்களும் விஷ்ணு காயத்ரியில் அமைந்திருக்கின்றன.

பாரத தேசத்திலேயே உத்தங்கமான ஸ்தானம் - உயர்ந்த க்ஷேத்திரம் பதரிகாசிரமம். அந்த க்ஷேத்திரத்திலே நர நாராயண அவதாரம் பண்ணி, நாராயண மந்திரத்தை பரமாத்மா உபதேசம் பண்ணினான்.

வியாபக மந்திரத்திலேயே சிறந்த மந்திரமாக இது விளங்குகிறது.

'விஷ்வம் விஷ்ணுர் வஷட்காரர;
பூத பவ்ய பவத்ப்ரபு:' என்ற நாமங்கள் எவ்வாறு காயத்ரி மந்திரத்தை விவரிக்கக் கூடியதாக இருக்கிறதோ, அவ்வாறே நாராயண மந்

திரத்தையும் விவரிக்க வல்லது.

அதே வாக்யம் நாராயண மந்திர பெருமையைக் காட்டுகிறது. எல்லாவற்றையும் தன்னுள் கொண்டு, எல்லாவற்றிலும் தான் நின்று, சமஸ்தத்தையும் தன் வசத்துள் கொண்டு எல்லாக் காலத்திலும் விளங்கக் கூடியவனாக...

'போய காலங்கள், புகு காலம், நிகழ் காலம்' என்று ஆழ்வார் குறிப்பிடுவது போல், கால ரூபியாக இருந்து எல்லாருக்கும் பலனைக் கொடுக்கக் கூடியவன் என்று சொன்னதனாலே, அந்த மந்திரத்துக்கு அவ்வளவு ஏற்றம்.

பூதம் பவ்யம் பவிஷ்யத் வஷட் சுவா: என்று அசுவமேத யக்ஞத்தின் ஹோமத்தைப் பண்ணி, எம் பெருமானை நாம் பிரார்த்திக்கிறோம்.

அந்த அசுவமேத யக்ஞம் பண்ணிய பலன் நமக்கு மிகச் சுலபமாக 'பூத பவ்ய பவத் பிரபு:' என்று உச்சாரணம் பண்ணுவதால் கிடைக்கிறது - சஹஸ்ர நாமத்தின் முதல் வாக்கியத்திலேயே கிடைக்கிறது!

அது மாத்திரமில்லை... முதல் வாக்கியத்திலேயே மஹா யக்ஞங்கள் அனைத்தும் (பலன்கள்) அடங்கிப் போகின்றன. அதைச் சொல்லும் போதே எல்லா யக்ஞங்களும் பூர்த்தியாகிவிடுகின்றன.

'கிருஷ்ண பிரணாமி நபுனத்பவாய-
தசாஸ்வமேதி புனரேதி ஜன்மா'

- என்று சொல்வார்கள்.

"பத்து அசுவமேத யாகங்கள் பண்ணிய ஒருத்தர் இருக்கிறார். அப்படிப்பட்டவர்கூட மீண்டும் பிறவியை அடைய வாய்ப்பிருக்கிறது. ஆனால், ஸ்ரீகிருஷ்ணனை வணங்கியவர்களுக்கு மறுபடியும் பிறவி இல்லை..." என்று அர்த்தம் இதற்கு.

இப்படிச் சொல்வதற்குக் காரணம் என்ன...? கிருஷ்ணனை வணங்கி அவன் பெயரைச் சொன்னால், எல்லா யக்ஞங்களும் அதிலே அடங்கிப் போய் விடுகின்றன.

பகவான் தூது போகிறான்... அழகாக அப்படி, அந்த வழியே நடந்து போகிறான். போகிற வழியிலே, மஹரிஷிகள் ஜபம் பண்ணிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள்.

ஜபம் பண்ணுகிற கையானது, மேலே எண்ணாமல், அப்படியே நின்று போய்விட்டது.

வேறு சில பேர் 'சுவாஹா' என்று அக்னியிலே ஹவிஸை இட கையைத் தூக்கியவர்கள்தான்... அப்படியே தூக்கிக்கொண்டு பொம்மை மாதிரி உட்கார்ந்து, அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சில பேர் விரதங்களை அனுஷ்டித்துக் கொண்டிருக்கும்படியான நிலையில் உள்ளவர்கள். அவர்களெல்லாம் அப்படியே பகவானைப் பார்க்கிறார்கள். விரதம் மட்டும் மேலே நடக்கவேயில்லை.

பாராயணம் பண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கு, மேற்கொண்டு பாராயணம் ஓடவில்லை.

இதிலே என்ன தாத்பர்யம் இருக்கிறது...?

பகவானைப் பார்த்த மாத்திரத்தில் எல்லாம் விட்டுப் போய்விட்டது!


ஜபம் பண்ணுவது எதற்காக..!?

அவனை அடைவதற்காக;

அவனே நேரே கிடைத்த பிறகு ஜபம் எதற்கு?!

அவனைப் பார்த்த பிற்பாடு, "நீ கொஞ்சம் நாழி உட்கார்ந்திரு.... நான் ஜபம் பண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லலாமா...?

ஜபம், தபமெல்லாம் வெறும் சாதனம்தான். சாத்யம் அவன்.



என் குஷி!

"அது என்னமோ தெரியலை...
ஜேம்ஸ்பாண்ட் படம் பார்க்கும்போதெல்லாம்
எனக்குக் குஷி வந்துடும்."

• பாடகர் டி.எம். கிருஷ்ணா

சாத்யம் கை புகுந்த பிற்பாடு, சாதனம் எதற்கு?

பரமாத்மாவே கையிலே கிடைத்த பிற்பாடு, சாதனத்தைப் பண்ணிக் கொண்டு உட்கார்ந்திருப்பதா...? அப்படி எங்கேயேனும் உண்டா!

ஆகையினாலே, சாத்தியமான எம் பெருமான் கையிலே கிடைத்திருப்பதனாலே, எல்லாக் காரியங்களும் தானாக நம்மை விட்டுப் போய்விடுகின்றன.

அதனால் க்ருஷ்ணனை தியானம் பண்ணினால், **ஏஷாம் சர்வ யக்ஞ:**

அதுவே சர்வ யக்ஞங்களும் பண்ணியது ஆகும்.

யக்ஞ: சமாப்த: - எல்லா யக்ஞங்களும் அங்கேயே முடிந்து போய்விடும்!

எல்லா யக்ஞங்களுக்கும் பொருளாக விளங்கக்கூடியவன் பரமாத்மாவே. அவனுக்குத் தனித்து யக்ஞமெல்லாம் பண்ண வேண்டாம்.


யக்ஞமெல்லாம் பண்ணி கடைசியில் ஸர்வ பிராயஸ்சித்த ஹோமம் பண்ணிய பிற்பாடு கூட, பகவானைப் பார்த்து ஒரு பிரார்த்தனை பண்ணுகிறோம்:


'க்ருஷ்ணானு ஸ்மரணம் பரம்' என்று முடிகிற அந்த பிரார்த்தனையைச் சொல்லாமல் யக்ஞம் முடிவதில்லை.

எல்லா பிராயஸ்சித்தமும் பண்ணி **'க்ருஷ்ண அனு ஸ்மரணம் பரம்'** - என்று சொல்லித்தான் முடிக்க வேண்டும்.

வெறும் க்ருஷ்ண ஸ்மரணம் மாத்திரம் இருந்தால் போதாது. அனு ஸ்மரணமாக அது இருக்க வேண்டும். 'அனு' என்ற உப சப்தத்துக்கு விசேஷ அர்த்தம் இருக்கிறது. அதையும் பார்ப்போம்.

(வளரும்)





• கே. சேகர்

ரசாயனம் புதுசு!

எதிரிகள் மீது தாக்குதல் நடத்த என்னென்ன ஆயுதங்கள் தேவை என்றுதான் பாதுகாப்புத் துறையின் ஆராய்ச்சி மையம் தலையைக் குடைந்துகொண்டு இதுவரை புதிய ஆயுதங்களைத் தயாரித்து வந்தது.

குவாலியரில் உள்ள DRDE (டிஃபென்ஸ் ரிசர்ச் அண்ட் டெவலப்மெண்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட்) என்ற ஆராய்ச்சி மையத்துக்கு, கொசுவும் ஒழித்துக் கட்ட வேண்டிய எதிரியாகப்பட்டிருக்கிறது! ஆமாம்... மக்களுக்கு 'டெங்கு' ஜுரம் வர இந்தக் கொசுதானே காரணம்?

அதை முழு அளவுக்கு வளர விடாமலே, லார்வா என்னும் புழு பருவத்திலேயே அழித்துவிட்டால், கொசு உற்பத்தி ஆகாதல்லவா? அதற்கு ஒரு ரசாயன உத்தியைக் கண்டுபிடித்து, அதன் மூலமாகக் கொசுக்களை ஈர்த்து, ஒரேயடியாக ஸ்ப்ரே மூலம் ஒழித்துக் கட்டிவிட வழியைக் கண்டுபிடித்திருக்கிறது ஏழு வருடங்களாக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் இந்த ஆராய்ச்சி மையம்.

"தில்லியில் பல வார்டுகளிலும் இதைப் பயன்படுத்தி கொசு உற்பத்தியை ஒரு முடிவுக்குக் கொண்டு வர, தில்லி மாநகராட்சி முடிவெடுத்திருக்கிறது. பரவலாகப் பயன்படுத்தப்பட்டால் டெங்கு காய்ச்சலுக்கு முடிவே கட்டிவிடலாம்..." என்கிறார் மைய இயக்குநர் கே. சேகர்.

புத்தம் புதிதான இந்த ரசாயனக் கண்டுபிடிப்பு வெற்றியடைந்தால், 'டெங்கு'க்குத் தோல்விதான்!

- சாருகேசி



"ஹலோ, நான் ஃபைனல் இயர் எம்.பி.பி.எஸ் பண்றேங்க. இன்னிக்கு எக்ஸாம் போகாம உங்ககூடப் பேசலாம்னு இருந்தேங்க. ஐய்ய்...யோ! ரொம்ப எக்ஸைட் ஆயிருக்கேங்க."

"நீங்க இப்படியே நல்லாப் படிச்சி பெரிய சர்ஜனா ஆகணும்னு வாழ்த்தறோம்ங்க. என்ன பாட்டு வேணும்ங்க?"

"எங்க மாமா, காலேஜில தமிழ் புரபஸர். அவர் பையனைத் தான் லவ் பண்றேன். மாமாவுக்கு ஐஸ் வைக்க தமிழ் இலக்கியமா ஒரு பாட்டு... 'கில்லி'லேருந்து 'சூறைத் தேங்கா அட்றா, அட்றா' போடுங்க. ப்ளீஸ்."

பாட்டு முடிந்ததும் அடுத்த போனில் வந்த குரல் ஸ்வேதாவுக்கு கொஞ்சம் கேட்ட குரலாக இருந்தது.

"பேரென்ன, மதுர

மதுர

"**கி**க்கிக்...கிக்...கிக்"

"ஏண்டி ஸ்வேதா இப்பிடிச் சிரிக்கிறே? பல்லைக் கடிக்காம சிரியேன், பயம்மா இருக்கு. பொண்ணு பார்க்க வர்றவன் பயந்து ஓடியே போயிடுவான்" சிரிக்கும்போதெல்லாம் அம்மா திட்டுவாள்.

ஆனால் அந்தச் சிரிப்பால்தான் அவளுக்கு வேலையே கிடைத்தது. தொண தொணவென்று பேசும் வேலை. டீ.வியில் லைவ் காம்பியரர். 'எட்டுக்கால் பூச்சிக்கு எத்தனை காலு' என்று அறிவு பூர்வ கேள்விகளாய்க் கேட்க வேண்டும். பதிலுக்குச் சிரித்து ஒரு பாட்டைப் போட வேண்டும். பாவம் டெலிபோன்!

"**ஹ**லோ, யாருங்க?"

"நான் தஞ்சாவூர்லருந்து தெரசா குமாரிங்க. கவர்ன்மெண்ட் ஆஸ்பிட்டல்ல நர்ஸா இருக்கேன். உங்ககூடப் பேசணும்னு மூணு நாளா லீவு போட்டுட்டு டிரை பண்றேன். எம் பொண்ணுகூட இருக்கா, பேசுங்க."

"அவங்க என்ன பண்றாங்க?"

குமாரா? எங்கேருந்து பேசறீங்க?"

"உங்க வீட்லருந்துதான்."

"கிக்கிக்...கிக்...கிக்..."

"அழகா சிரிக்கிறீங்க. இந்தச் சிரிப்பு தாங்க இழுக்குது."

"எதுக்கு என் வீட்டுக்கு வந்தீங்க?"

"நேரே உங்க சிரிப்பைப் பாக்க, போன வாரம் டீ.வி ஸ்டுடியோவுக்கு அன்னைக்கு வந்தேன் இல்ல? அம்மாகிட்ட சொன்னேன். கூட வந்துட்டாங்க."

"சரி, உங்கம்மாவுக்கு ஒரு கேள்வி?"

"கேளுங்க."

"மாமியாரை சாமியாரா ஆக்கலாமா? சாமியாரை மாமியாரா ஆக்கலாமா?"

"நீ இப்பிடி சிரிச்சே என்ன சாமியாரா ஆக்கிடலாம்மா. அதுக்கு மொதல்ல என்ன மாமியாரா ஆக்கு."

"கிக்கிக்...கிக்...கிக்.' இருங்க. அவருக்காக 'மச்சான் பேரு மதுர' பாட்டு போடறேன், பாருங்க."

மதுரகுமாரனின் அம்மாவும் ஸ்வேதா அம்மாவும் வீட்டில் தட்டு மாற்றிக் கொண்டார்கள். ○

தேவா

ஒரு அரசியல்வாதி ஜோக்கடிக்கிறார்!



சீரியஸான அரசியல்வாதி... தமக்கிருந்த வானளாவிய அதிகாரம் மூலம் அதிரடி முடிவுகளை எடுத்து, அரசியல் வட்டாரத்தில் பல அதிர்ச்சி அலைகளை உருவாக்கியவர்... முன்னாள் சபாநாயகர்... இப்படி பல்வேறு அடைமொழிகளுக்குச் சொந்தக்காரரான பி.ஹெச்.பாண்டியனைக் கலாய்க்க விரும்பி நாம் களமிறங்க, "ஆஹா இது என்ன விபரீத முயற்சி...?" என்று ஜகா வாங்கியவர், பின்பு நாம் 'குஷி ஸ்பெஷல்' விஷயத்தை அவிழ்த்துவிட்டதும் சமாதானமாகி, மெல்ல தன் இளவயதுக் குறும்புகளில் முத்துக் குளித்தார்.

"நான் பக்கா கிராமத்தான். எங்க கோவிந்தபேரி - கரிசல்பட்டி கிராமத்துல ஆடு-மாடுகளை சாமிக்கு நேர்ந்து விடுவாங்க. அப்போ எனக்கு பன்னிரண்டு வயசு இருக்கும். கொழுத்த ஆடு ஒண்ணு எங்க வீட்டுத் தோட்டத்துல புகுந்து பயிர்களை மேய ஆரம்பிச்சிடிச்சு. அதை அடக்கி விரட்டறேன்னு சவால் விட்டுட்டுப்போயி, அதை அடக்கி வெளில தள்ளினேன். நான் ஆட்டை அடக்கினது ஏதோ எம்.ஜி.ஆர். காளையை அடக்கின மாதிரி, அன்னிக்கு டாக் ஆஃப் தி கரிசல் பட்டியா இருந்திச்சு"

"அந்தக் காலத்துல எனக்கு எம்.ஜி.ஆர். படம் பார்க்கறதுன்னா ரொம்பக் குஷியான விஷயம். அதுவும் படம் ரிலீசாகி ரெண்டு நாளுக்குள்ள பார்த்துடணும். அப்போல்லாம் எம்.ஜி.ஆர். படத்துக்கு டிக்கெட் கொடுக்கறதுக்கு மூணு மணி நேரத்துக்கு முன்னாடியிலிருந்தே கியூ நிக்க ஆரம்பிச்சிடும். அதனால காலேஜ் போறதுக்கு முன்னால, நேரா தியேட்டருக்கு வந்து கியூல நின்னு, எனக்கு முன்னால, பின்னால நிற்கிறவங்களை ஃப்ரெண்ட் பிடிச்சி, அவங்ககிட்ட இடத்தை பார்த்துக்கச் சொல்லிட்டு காலேஜுக்குப் போயிடுவேன். திரும்ப லஞ்ச் டைம்ல வந்து, டிக்கெட் வாங்கிப் படம் பார்த்துட்டு, அப்படியே வீட்டுக்குப் போயிடுவேன். இந்த மாதிரி பல தடவை காலேஜை கட் அடிச்சிட்டு எம்.ஜி.ஆர். படம் பார்த்திருக்கிறேன்" என்ற பி.எச்.



என்று கிராமத்து நினைவுகளில் குளிர் காய்ந்தவர், சட்டென்று சுதாரித்துக் கொண்டு சினிமா பக்கம் திரும்பினார்.

பாண்டியனின் முகத்தில் கல்லூரி இளை ஞனைப் பார்க்க முடிந்தது.

"நான் குஷியா இருந்தேன்னா அன் னைக்கு வீட்டுக்கு திருநெல்வேலி அல்வா வாங்கிட்டுப் போவேன். ரொம்ப ரொம்ப குஷியா இருந்தேன்னா, என்னோட மூணு பையன்களையும் ஸ்கூட்டர்ல முன்னால நிற்க வச்சி, ரவுண்ட் அடிப்பேன். இன் னிக்குப் பசங்க எம்.எல்.ஏ., அட்வகேட்னு வளர்ந்துட்டாங்க. அதெல்லாம் மறக்க முடியாத காலம்" சிலாகித்துச் சொல் கிறார்.

"நான் பத்திரிகையில வர்ற ஜோக்கை யெல்லாம் ரொம்ப விரும்பிப் படிப்பேன். அதேபோல என்.எஸ்.கே., தங்கவேலு காமெடிகளைப் பார்த்து, கேட்டு, வயிறு புண்ணான காலமெல்லாம் உண்டு. 'கல்யாணப் பரிசு' மன்னார் அண்ட் மன்னார் கம்பெனி காமெடியை



எப்போ கேட்டாலும் சிரிப்பு பொங் கும். ஆனா இன்னிக்கு திரைப்பட நகைச் சுவை தடம் புரண்டு போயிடிச்சி. ஆபா சம் மிகுதியாயிடிச்சி" என்று வருத்தப் பட்டவரை மறுபடி குஷியாக்க விரும்பி, சில ஜோக்குகளை அவரிடம் கொடுத்து படிக்கச் சொன்னோம். ஆர்வமுடன் வாங்கியவர், மனைவியோடு இணைந்து அவற்றைப் படித்துச் சிரித்ததுடன், ஒவ் வொரு ஜோக்குக்கும் கமெண்ட் அடித்து மார்க்கும் போட்டார்.

ஜோக் 1 :

"விஷ்ணு ஏன் பாம்பின் மீது படுத் திருக்கிறார்?"

"ஒருவேளை விஷ்ணுவின் மாமனார் படுக்கையை சீராகத் தரவில்லையோ... என்னவோ..."

"இந்த ஜோக்கைப் படித்தப்புறம்தான் என் மாமனார் எனக்கு சீரே தரலைங்கறது ஞாபகத்துக்கு வருது. ஞாபகப்படுத்தி சிரிக்க வச்சதுக்காக இந்த ஜோக்குக்கு 55 மார்க்"

ஜோக் 2 :

"நீங்கள் சேலம் சதாசிவமா...?"

"இல்லையே"

"அது நான்தான். நீங்கள் போட்டுக் கொண்டிருப்பது என் செருப்பு"

"இது ஜோக் இல்ல. உண்மையா நடக் கிற விஷயம். நானே பல கல்யாணத்துக் குப் போயிட்டு, செருப்பில்லாம வீட்டுக்கு வந்திருக்கேன். ஆனா இப்போ உஷாராகி, கல்யாணத்துக்குப் போறதுக்காகவே தனியா செருப்பு வாங்கி வச் சிருக்கேன்" என்றவர், கடகட வெனச் சிரித்துவிட்டு "இந்த ஜோக்குக்குத் தரலாம் 65 மார்க்" என்றார்.

ஜோக் 3 :

"தலைவர் ஏகக் கடுப் பிலே இருக்காரே... என்ன விஷயம்...?"

"காண்ட்ராக்ட்ல சைன் பண்ணினா ஆறு சூட்கேஸ்னு சொல் லிட்டு, காலி சூட் கேஸைக் கொடுத்துட் டாங்களாம்"

அரசியல்வாதி ஜோக்கைப் படித்தவுடன் கடுப்பானவர், இலேசான கோபத்துடன் 35 மார்க் போட்டு ஃபெயிலாக்கினார்.

இதற்கு மேலும் அவரைப் படுத்த வேண்டுமா என்று யோசனை எழ, கடைசியாக அவரிடமே ஒரு கடி ஜோக் சொல்லச் சொன்னோம். கூலாகி யோசித்தவர்,


"கும்பகர்ணன் தொடர்ந்து ஆறு மாதம் தூங்கியிருக்கான். ஏன் தெரியுமா?" என்றார்.

நாம் பதில் தெரியாமல் விழிக்க,

"இதுகூடத் தெரியலையா... அந்தக் காலத்துல அலாரம் டைம்பீஸெல்லாம் இல்லை..." என்றாரே பார்க்கலாம்!

- முத்து

படங்கள் : ராஜன்



சின்னான் செய்திகள்

'அய்யய்யோ... திருப்பதி மூலஸ்தானத்துல விளக்கு அணைஞ்சிடுச்சு... கோயிலுக்குள்ள நாய் நுழைஞ்சிடுச்சு... எருமை மாடு புகுந்திடுச்சு.... வீட்ல ஆம்பளைங்க கதி அல்லோதான்'னு போன வாரம் ஆந்திராவில வதந்தி! பொம்பளைங்க எல்லாம் அரக்கப் பரக்க குளிச்சிட்டு ஏதேதோ பரிகாரம் செய்ய ஆரம்பிச்சிட்டாங்களாம். இங்க திருவள்ளூர்ல, 'புத்தாண்டு சனிக்கிழமை பொறந்துடுச்சு. ஆம்பளைங்க கதி அரோகரா. சகோதரிகளுக்கு மஞ்சப் புடைவை வாங்கிக் கொடுத்தா பாதிப்பில்ல'ன்னு ஒரு வதந்தி. (உபயம் : ஏதோ ஒரு துணிக்கடை வியாபாரி) சென்னையில 'ஒத்த ஆம்புளைப் புள்ள வைச்சிருக்கவங்க, மத்தவங்களுக்கு சர்க்கரை வாங்கிக் கொடுக்கணும்'னு ஒரு வதந்தி (உபயம் : ஏதோ ஒரு பலசரக்கு வியாபாரி). இப்படி தினுசு தினுசா தினமும் வதந்தியை 'தந்தியா' பரப்புர 'மந்தி'ங்க மட்டும் என் கையில் கிடைச்சா, மவனே... மெரீனாவில கழுத்தளவு மண்ணுல புதைச்சுடுவேன், ஜாக்கிரதை!

போன வாரம் திருவண்ணாமலைல ஒரு சாமியார் தன் அடிப்பொடிகளோட 'பெப்சி'யில விஷம் கலந்து குடிச்சு தற்கொலை முயற்சி பண்ணி, சாகாம தப்பிச்சிட்டாராம். முயற்சிக்குக் காரணம் உலகம் அழியறாப்ல கனவு கண்டாராம். அதான் அதுக்கு முன்னாடியே சொர்க்கத்துக்கு டிக்கெட் எடுக்க அப்ளை பண்ணியிருக்கிரு. மனுஷன் தப்புப் பண்ணிட்டாரு. குளிர்பானமே விஷம்னு சொல்றாங்க. அதுல விஷம் கலந்தா, மைனசும், மைனசும் ப்ளஸ்தானே!

சிந்து பகுதிகள் இப்ப பாக்.ல இருக்கு. அதனால நம்ம தேசிய கீதத்துல 'சிந்து'ங்கற வார்த்தையைத் தூக்கணும்னு எவனோ ஒருத்தன் சந்துல சிந்து பாடி ஹைகோர்ட்ல கேஸ் போட்டிருக்கான். ஏம்ப்பா... ஒரு சுனாமி வந்தா, ஒரு பூகம்பம் வந்தா எது எது எங்க இருக்குன்னே தெரிய மாட்டேங்குது. போய் வேலையைப் பாருங்கய்யா! விட்டா 'சிந்துதுலாணி'கிட்ட 'கருத்து' கேட்பீங்களே!

'கிஸ்'சின் இருந்ததால போன வருசம் ஜேம்ஸ்பாண்ட் படத்தை 'மிஸ்' பண்ணுன ஐஸ், விட்டிருக்கிற லேட்டஸ்ட் ஸ்டேட்மெண்ட்... "பாலிவுட்ல கிஸ்ஸை கொச்சையா எடுத்துக்கறாங்க. ஆனா ஹாலிவுட்ல 'கலை' உணர்வோட எடுப்பாங்க." ஆகா! ஆத்தா ஏதோ ஹாலிவுட் படத்துல 'தெறம' காட்டப் போகுது போல!

முதுமலை யானைகள் கேம்ப் ஓவர். எல்லாரையும் மயக்குன ஒன்றரை வயது விஜயனுக்கு, கடைசி நாள்ல கண்ணுல அடிபட்டுடுச்சாம். (யாரு கண்ணு பட்டுச்சோ!) அதுபோக 'குஷ்மா' கூட 'ராஜா'ன்னு ஒரு காளை மாடு வந்துச்சு. அது புதுசா ஆண்டாள், சீதான்னு ரெண்டு கேர்ள் ஃப்ரெண்ட்ஸ் புடிச்சுட்டதாம். கடைசியில யார்கூட போகன்னு காளை 'கலை'யிழந்து கலங்கிடுச்சாம். நண்பா, சின்னானோட 'பஞ்ச்' டயலாக்கைக் கேட்டுக்கோ...

'அஞ்சும் அஞ்சும் பத்து! நல்லா ஊரு சுத்து - ஆனா அதிக கேர்ள் ஃப்ரெண்ட்ஸ் ஆ...பத்து!"



அன்பே அஸ்வினி...



• அம்மாவின் தறி அருகே அஸ்வினி...



• மனைவியுடன் ஆண்டனி

காட்சி 1 :

குமரி மாவட்டம், ஈழ நாட்டுவிளை கிராமம். ஐம்பத்தைந்து வயதிலும் ஆட்டோ ஓட்டி குடும்பத்தைக் காப்பாற்றும் இயேசு தாசன் வீடு. கதவு திறந்தே யிருக்கிறது. "வீட்ல யாரும் இல்லீங்களா?". நமது குரலுக்கு ''யாரு?'' என்ற நைந்துபோன குரலுடன் வெளிப்படுகிறார், இயேசு தாசனின் மனைவி புஷ்ப காந்தி. ''அஸ்வினியைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தோம்'' என்றதும் உடனடியாக அவரது கண்கள் கலங்கி கண்ணீர் கோடாக இறங்க, துடைத்துக் கொண்டு பேசுகிறார்.

"அவ ஒருத்திதானய்யா கிடைச்சிருக்கா. அவளைக் கூட்டியாந்தப்புறம் தான், இந்தப் பாவி வயித்துலே பச்சைத் தண்ணி இறங்கியிருக்கு. இல்லேன்னா எம்புள்ளைகள அள்ளிக் குடுத்த பிறகு, பட்டினி கெடந்து செத்துப் போயிடலாம்னு வைராக்கியமா இருந்தேன். ஆனால் குருகோஸ் ஏத்தி காப்பாத்திட்டாங்க. எம் பேத்திக்காகவாவது நான் வாழணும்'' என்று தன்னம்பிக்கை துளிர்க்க தன் பாட்டியைப் பேச வைத்திருக்கும் அஸ்வினியைப் பார்த்தோம்.

அவளது கண்களின் ஓரத்தில் இன்னும் அந்தப் பீதி ஒட்டிக் கொண்டிருக்கிறது. அம்மாவின் நைட்டியை அணிந்து கொண்டு, வீட்டின் கூடத்தில் இருந்த தறியை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறாள். அம்மா அமர்ந்து நெய்து வந்த தறி அது. சுவரில் ஹேங்கரில் வரிசையாகத் தொங்கும் அப்பாவின் சட்டைகளைப் பார்க்கிறாள். அங்கிருந்து நகர்ந்து அவளது பார்வை தறியின் ஓரத்தில் இறைந்து கிடந்த, ஐந்து வயதுத் தங்கை ஆனந்தியின் விளையாட்டுச் சாமான்கள்மீது நிலைகுத்தி நின்று விடுகிறது. பக்கத்து வீட்டுப் பெண்மணி ஓடி வந்து, "பெங்களூரிலிருந்து போன் வந்திருக்கு" என்று சொல்ல, அவசர அவசரமாய் அஸ்வினியை அழைத்துக் கொண்டு போகிறார் பாட்டி.

"ஹலோ அஸ்வினிக் குட்டி! நான் ஆண்டனி அப்பா பேசறம்மா... சாப்பிட்டியா செல்லம்...?" - பெங்களூரிலிருந்து

அழைத்தவர் பேச...

"இட்லி சாப்பிட்டேன்! தொண்டை வலிக்குதுப்பா! அம்மா, அப்பா ஆனந்தி யெல்லாம் பார்த்தியா?"-அஸ்வினி கேட்க..

"இதோ பாரு பக்கத்துலே சித்தி இருக்காங்க... உனக்கு இங்கேயிருந்து என்ன வேணும்... பொம்மை, புக்கு, கலர் பென்சில் எல்லாம் வாங்கி அனுப்பறேண்டா.. அழாம தாத்தா பாட்டியோட இருக்கணும்..."

"சரிப்பா... ஆனந்தி வந்தா, அவளை சீக்கிரம் கூட்டிக்கிட்டு வந்துரு" என்று பாசத் தங்கையையும், தவமிருந்து உயிர் தந்த பெற்றோரையும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறான் இந்த ஏழு வயது அஸ்வினி. அவளுக்குத் துளியும் இரத்த பந்தம் இல்லாத பெங்களூர் வாசிகளான ஆண்டனியும், அவர் மனைவியும், தினசரி போன் செய்து ஆறுதல் சொல்கிறார்கள்... தமிழகத்தின் கடைக் கோடியைச் சேர்ந்த அஸ்வினியையும், கர்நாடகத்தின் கீழ் கோடியைச் சேர்ந்த ஆண்டனி குடும்பத்தையும் பிணைத்தது எது?

காட்சி 2 :

நாகர்கோவில் அருகேயுள்ள தக்கலை அரசு மருத்துவமனை. படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வரும் இயேசு தாசன் பேசுகிறார். "எனக்கு நாலு பெண் பிள்ளைகள். ஒரு மகன். எல்லாருக்கும் கல்யாணம் முடிஞ்சு தனித்தனி குடும்பங்களா வாழ்ந்து வந்தாங்க. என்னோட பேரப் பிள்ளைகளுக்கு மொட்டை போட்டு காணிக்கை செலுத்தனும்னு, மொத்தம் இருபத்தியிரண்டு பேர் குடும்பத்தோட வேளாங்கண்ணிக்குப் போனோம். அந்த பயங்கரத்தை இப்போ நினைச்சாலும் நெஞ்சு பதறுது" என்று உடல் நடுங்கியவர், கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு, அந்தக் கறுப்பு ஞாயிறை நினைவு கூர்ந்தார்.

"பேரப்பிள்ளைகள் அஞ்சுபேருக்கும் மொட்டை போட்டு கடல்லே குளிக்க வெச்சுட்டு, நாங்களும் குளிச்சு முடிச்சோம். பசிக்குது தாத்தான்னு சொன்ன பேரப் பிள்ளைகளுக்கு, கடலோரம் இருந்த கடையிலே இட்லி வாங்கிக் கொடுத்தேன். அப்போதான் அந்த இரைச்சல் கேட்டது. பத்தடி உயரத்துக்கு திடீருன்னு பொங்கி வந்த அலை, எல்லாரையும் தள்ளிவிட்டு அத்தனை பேர் செருப்பையும் உருவிக்கிட்டுப் போச்சு.. பக்கத்திலேயே நின்னுக்கிட்டு இருந்த என் மகன், செருப்பை எடுக்க குனிஞ்சதுதான் தெரியும், அதுக்குள்ள இருபதடி உயரத்துக்கு அடுத்த அலை வந்து அத்தனை பேரையும் இழுத்துக்கிட்டு போச்சு. அவ்வளவுதான் தெரியும். அடுத்தாப்பிலே நான் கண்விழிச்சுப் பார்த்தப்போ, வேளாங்கண்ணியிலிருந்து ஐந்து மைல் தூரத்துல இருக்கிற காமேஸ்வரம்ங்கிற கிராமத்துலே கரை ஒதுங்கிக் கிடந்தேன். மயக்கம் தெளிஞ்சதும் பாத்தா உடம்பிலே ஒட்டுத் துணி இல்லே. கை, கால், உடம்பு பூரா இரத்தம். ஒரு வீட்லே கைலியும் துண்டும், வாங்கிக் கட்டிக்கிட்டு, பிள்ளைகளத் தேடி அலைஞ்சேன். மறுநாள் காலையிலே நாகப்பட்டினம் கான்வென்ட் ஸ்கூல்லே என் மனைவி, மருமகள்னு எங்க குடும்பத்துல அஞ்சு பேரு மட்டும்தான் கிடைச்சாங்க. மகன், மகள், பேரப்பிள்ளைகள் என்ன ஆனாங்கன்னு அப்போ எனக்குத் தெரியலை. அதுக்கப்புறம் என் மகன் விஜயகுமார் மட்டும் திருவாரூர் ஆஸ்பத்திரியிலே இருக்கிறதா கேள்விப்பட்டு போய்க் கண்டுபிடிச்சேன். அவனும் இப்போ இங்கேதான் சிகிச்சை எடுத்துக்கிறான். அவன்தான் பெங்களூர்லே என் பேத்தி அஸ்வினி இருக்கிறதா கேள்விப்

• விஜயகுமார்







• பாட்டி புஷ்பகாந்தி

பட்டு, போய் கூட்டிக்கிட்டு வந்தான். இருபத்து இரண்டு பேர்லே பச்சை மண்ணுங்களோட சேர்த்து பதினாறு பேரை பலி கொடுத்துட்டோமேன்னு நினைச்சு நினைச்சு, இதுவரைக்கும் தூக்கம் வரலே. அழுது தீர்க்க கண்ணுல தண்ணியும் இல்லே. இப்போ திடீர்னு அஸ்வினி வந்துட்டா... போன உயிரெல்லாம் திரும்பி வந்த மாதிரி தெம்பா இருக்கு'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் விஜயகுமார், அங்கே வந்தார். "ஆண்டனி குடும்பம் நினைச்சிருந்தா, அஸ்வினியைப் பத்தி சொல்லாமலே இருந்திருக்கலாம். அவங்களுக்குப் பெரிய மனசு." என்று கையெடுத்துக் கும்பிடுகிறார். ஆண்டனி குடும்பத்துக்கு அஸ்வினி எப்படி கிடைத்தான்?

காட்சி 3 :

பெங்களூர் சுல்தான்பாளையம். ஆண்டனியின் வீடு. டிராவல்ஸ் தொழில் செய்து வரும் இவர், தமது தாய், மனைவி, மாமா, மாமியார் உள்ளிட்ட பன்னிரண்டு பேருடன் வேளாங்கண்ணிக்கு வந்து தங்கியிருக்கிறார். சுனாமி அலையிலிருந்து அஸ்வினியை மீட்டு வந்த ஃப்ளாஷ் பேக்கை அவரே சொல்கிறார்.

''காலையில் பீச்ல வாக்கிங் போனோமுங்க. சுமார் ஏழரை எட்டு மணி வரை நார்மலாகத்தானுங்க இருந்துச்சு. வேளாங்கண்ணி கடற்கரையோரம் ஏகக் கூட்டம். வெளியூர் பயணிகள், கோயிலுக்கு வந்தவங்க, வியாபாரிங்க, ஓட்டல், பணியாரக் கடை, பாத்திரக் கடை, விளையாட்டுச் சாமான் கடை....ன்னு ஒரே ரஷ். நாங்க நண்டு, மீனு வாங்கிட்டுப் போகலாம்னு பேரம் பேசிக்கிட்டிருந்தோம். திடீர்னு ஒரே காக்கா ஓலம்... பாத்தா கடலிலிருந்து பெரிசு பெரிசா அலை... 'ஓடு.. ஓடு'ன்னு ஜனங்க வெறித்தனமா ஓட ஆரம்பிச்சாங்க. எங்கும் ஜன வெள்ளம், ஜல வெள்ளம்... கோயிலுக்குள்ள போனவங்க ஏராளம். ஆனா அலையில அடிச்சுட்டுப் போனவங்கதாங்க அதிகம். கடற்கரையச் சுத்தியிருந்த ஒரு மூவாயிரம் பேரை ஒரு பத்து நிமிஷத்துக்குள்ளாற காணோம். நானும் எங்க மாமாவும் தங்கியிருந்த லாட்ஜுக்குத் திரும்பிட்டோம். தப்பிச்சுப் போயிடலாம்னு காரை எடுத்தா, எங்க பார்த்தாலும் தண்ணீர். ரோடு தெரியல... மெல்ல மெல்ல ஓட்ட ஆரம்பிச்சேன். அப்ப ஒரு மூணு மாச ஆண் குழந்தை வெள்ளத்துல மாட்டி அல்லாடிட்டிருக்கறதைப் பாத்து அத கூடவே அழைச்சிக்கிட்டோம். ஆனா சில நிமிடங்களிலேயே அந்தக் குழந்தை செத்துப் போச்சு. அந்தக் குழந்தயோட அப்பா அம்மாக் கெடச்சுட்டாங்க. ஒப்படச்சுட்டோம். அப்பதான் "காப்பாத்துங்கய்யா... யார் பெத்த புள்ளயோ கார்ல கூட்டிட்டு போங்கய்யா"ன்னு சொல்லி, பேச்சு மூச்சில்லாம கெடக்கற ஏழு வயசு பொம்பள புள்ளய ஒருத்தரு கொடுத்தாரு. நாங்களும் அத எப்படியும் காப்பாத்தறோம்னு சொல்லி வாங்கிட்டோம். மூக்கில மண் அடைச்சு வாயில நுரை தள்ள, உடம்பு பூரா காயத்துடன் அஸ்வினி... பொழைப்பாளான்னே சந்தேகமா இருந்துச்சு. பைபாஸ் ரோடிலிருக்கும் பிரைவேட் ஆஸ்பத்திரிக்குப் போனோம். அங்க



* ஆலிஸ்மேரி



* இயேசுதாசன்

முதல்ல சரியா கவனிக்கல. அங்கேயும் ஏகக் கூட்டம். என் அம்மா அழுது கூச்சல் போட்டாங்க. அப்புறம்தான் ஒரு டாக்டரு வந்து ட்ரிப்ஸ் ஏத்திட்டுப் போனாரு. "இப்ப ஏதும் சொல்ல முடியாது. இந்தக் குழந்த இருக்கற நெலமையில ரொம்ப தூர பிரயாணம் செய்ய முடியாதுன்னு டாக்டர் சொன்னாரு. நான் குழந்தையையும் அம்மா உறவினங்களையும் அங்கயே விட்டுட்டு திரும்பவும் வேளாங்கண்ணிக்குப் போனேன். வழி நெடுக ரோடு பூரா பிணங்க. குழந்தைங்களும் பொம்பளைங்களும்தாங்க அதிகமா செத்துப் போயிட்டாங்க. கோயில்ல போயி மைக்ல அறிவிச்சேனுங்க. போலீஸ் ஸ்டேஷனுல புகார் கொடுத்தேன். எங்கிட்டு நின்னு அஸ்வினி

யோட அப்பா-அம்மா கதறிட்டு இருப்பாங் களோன்னு தவிப்பா இருந்துச்சு... திரும்பி திருச்சிக்கு வந்து பெங்களூருக்கு வந்துட் டோமுங்க. இங்கன வந்து ஒடனே எங்க குடும்ப டாக்டருங்ககிட்ட கூட்டிட்டுப் போய் வேளா வேளைக்கு மருந்து ஆகாரம் கொடுத்து, அஸ்வினியைத் தேத்தினோம். கொஞ்சம் கொஞ்சமா நார்மலாக ஆரம்பிச்சா.

பேசறதுக்குத் தொடங்கினா. ஊரு, அப்பா, அம்மா, தங்கை பேருன்னு சொல்ல ஆரம்பிச்சதும், எங்களுக்குத் தலை கால் புரியலே. பிறகுதான் பத்திரிகை, டீ.வி. எல்லாத்திலும் அஸ்வினி போட்டோவைக் காட்டச் சொன்னோம். அப்பா, அம்மா எங்கிட்டு இருக்காங்கன்னு தேட ஆரம்பிச் சேன். டீ.வி. பேப்பர்னு வந்ததும் ஏகப் பட்ட போன்கால்ஸ். "எங்களுக்கு அந்தக் குழந்த வேணும். தத்து எடுத்துக்கறோம்"னு தெறயப் பேரு வர ஆரம்பிச்சுட்டாங்க. நாங்க கொடுக்கலே.. எங்களுக்கு நம்பிக்கை

* மிஞ்சியிருப்பவர்கள்...



இருந்துச்சி. 'நல்லா சாப்பிடு. ஊருக்கு போகணும்ல..'ன்னு சொல்லி எங்கம்மா ஊட்டி விடுவாங்க. அந்த நாலு நாளில எங்ககிட்ட ரொம்ப ஒட்டிக்கிச்சு.. என்னை அப்பான்னு கூப்பிட ஆரம்பிச்சுடுச்சி" நெகிழ்ச்சியோடு ஒரே மூச்சில் விவரிக் கிறார் ஆண்டனி.

தினசரிகள் மற்றும் தொலைகாட்சியில் வந்தவுடன் அஸ்வினியை அடையாளம் கண்டு கொண்டு, நாகர்கோவிலில் இருக் கும் அஸ்வினியின் மாமா விஜயகுமார் பெங் களூருக்கு வந்து குழந்தையைக் காப்பாற்றிய ஆண்டனியின் கைகளைப் பற்றி தாரை தாரையாக நன்றிக் கண்ணீர் வடித்துவிட்டு அஸ்வினியை அழைத்துச் சென்றிருக்கிறார். இத்தனை பேரையும் இழந்துவிட்ட நிலையிலும் அஸ்வினி கிடைத்தது இயேசுதாசன் குடும்பத்துக்குத் தெம்பூட்டியிருக்கிறது. அஸ்வினியை ஊரே வந்து கொஞ்சி விட்டுப் போகிறது.

காட்சி 4 :

இயேசுதாசன் குடும்பத்தில் இருபத்து இரண்டு பேர் வேளாங்கண்ணிக்குச் சென்று, பதினைந்து பேரை இழந்திருக்கிறார்கள். ஆண்டனியின் குடும்பமோ, பன்னிரண்டு பேரோடு மேலும் ஒரு புதிய பந்தத்தோடு ஊர் திரும்பியது. அஸ்வினியை அவளது சொந்தங்களிடம் ஒப்படைத்த ஆத்ம திருப்தி ஒரு பக்கம் இருந்தாலும், அஸ் வினியை திரும்பக் கொடுத்தது, அந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரை ஓர் இழப்பு தான் என்கிறார் ஆண்டனியின் தாய் ஆலீஸ்மேரி. "நான் ஒரு பிள்ளையைப் பறி கொடுத்தவங்க. தாய் தகப்பனோட வலி எனக்குத் தெரியும். அஸ்வினியின் தாய் தகப்பன் செத்துப் போயிட்டாங்கன்னு தெரிஞ்சிருந்தா, சொல்லியே இருக்க மாட்டோமுங்க. இப்பவும் எங்களுக்கு அனுப்ப இஷ்டமேயில்லீங்க. ஒரே கஷ்டமாயிடுச்சுங்க. போவும்போது அந்த புள்ள ரொம்ப அழுதுச்சு. விஜயகுமாரும் பாவமுங்க. அவங்க வீட்ல எஞ்சியிருக்கிறது இந்த அஸ்வினி மாத்திரம்தான்... மொத்தக் குடும்பத்தையும் அலை இழுத்துக்கிட்டுப் போயிடுச்சாம். எங்களால அஸ்வினிய மறக்கவே முடியாதுங்க. என்னை 'மம்மி-மம்மி'ன்னு கூப்பிட்டுச்சே... இனி மாசம் ஒரு தடா போன் பண்ணணும்னு சொல்லி யிருக்கேன். அவளுக்கு என்ன உதவி வேணாலும் பண்ணுவோமுங்க. மாமா ஆட்டோ டிரைவராம். அவரும் 'எனக்கு யாருமில்லை. இனி அஸ்வினிதான்னு சொல்லவே' நாங்களும் கொடுத்துட் டோம்" கண்ணீருடன் சொல்கிறார்.

"தெருவுல அநாதையா கிடக்கற குழந் தைங்களை வீட்டுக்கு ஒண்ணா எடுத்து வளத்தாலே போதுமுங்க. அநாதைன்னு உலகத்துல யாருமே இருக்க மாட்டாங்க. காசு வேண்டாங்க, மனசு இருந்தாப் போதும்" என்கிறார் ஆலீஸ் மேரி.

ஆலீஸ் மேரியினுள் உட்கார்ந்து சொல் வது அன்னை மேரி போலிருந்தது நமக்கு...

- ஈழநாட்டுவிளையிலிருந்து

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு,

- பெங்களூரிலிருந்து **லதா சேகர்**

இயற்கைக்கு யார் கொடுத்தது இந்த அதிகாரத்தை?

● எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி

? இந்தியாவில் கண் வங்கி, ரத்த வங்கியைப் போல் கருத்து வங்கியும் வேண்டும் என்கிறாரே வைரமுத்து?

! முன்னேறிய நாடுகளில் மாபெரும் நூலகங்கள் சிறிய சிறிய குறுந்தட்டுகளில் அடங்கி விடுகின்றன. யாருக்கு என்ன தகவல் அல்லது கருத்து தேவையோ, கம்ப்யூட்டர் மூலம் நாடிப் பெறலாம். அந்த நிலை இங்கு வர சில காலம் ஆகலாம். ஆனால் ஒரு துவக்கம் தேவை.

● உமரி பொ.கணேசன், மும்பை

? அணு ஆயுத அழிவை விட கொடுமையாக உள்ளதே கடல் நீர் அழிவு?

! ஒரு நாளும் இல்லை. அணு ஆயுதம் மரபுக் கூறுகள் வரை பாதித்து, தலைமுறை தலைமுறையாக மனித உயிர்களைச் சிதைத்து கௌரவமிழக்கச் செய்யும்.

● தி.வி.கிருஷ்ணமூர்த்தி, சென்னை *

? இந்தியாவில் கிட்டத்தட்ட 1,25,000 கிராமங்கள் மின்னொளி நுழையாதவை - இது பற்றி?

! முன்னேற்றப் பாதையில் இந்தியா இன்னும் வெகு தூரம் செல்ல வேண்டும் என்ற ஆதங்கம் ஒரு புறம். 'அப்பாடா! டி.வி. பாதிப்பு இல்லாத 1,25,000 கிராமங்கள் இந்தியாவில் இன்னும் உள்ளனவே!' என்ற ஆறுதல் மறுபக்கம்.

● ப. இராம் முருகன், சிவகங்கை

? 'வானத்துக்குக் கீழே உள்ள அனைத்தையும் வாக்குச் சீட்டாக மாற்றும் சாதாரண அரசியல்வாதியாக முகம் காட்டுகிறார் கலைஞர்' என்கிறாரே பிரபஞ்சன்?

! 'வானம் வசப்படும்' என்கிற நம்பிக்கையில், அனைத்து அரசியல்வாதிகளும் (உலகளாவிய ஜனநாயகங்களில்) செய்கிற காரியம்தான் இது. கருணாநிதி விதிவிலக்கு அல்ல. வாக்குச் சீட்டு பலமின்றி வானமென்ன... வண்டல்கூட வசப்படாது!

● வி. ராமச்சந்திரன், ஹைதராபாத்

? கடல் அலை கொந்தளிப்புக்கும் விளைந்த சேதத்துக்கும் காஞ்சி முனிவரின் கைது காரணமாக இருக்கலாமா...?

! இருக்கலாம் என்று வைத்துக் கொண்டால், பாப்ரி மஸ்ஜித் தகர்க்கப்பட்டதும், ஸ்டெயின்ஸ் பாதிரியார் உயிரோடு எரிக்கப்பட்டதும்கூட காரணமாக இருக்கலாம்.

● எஸ். ராஜமழை, சின்னமனூர்

? சுனாமி நிவாரண நிதிக்கு, குஜராத் சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து பெண்கள் நன்கொடை தந்துள்ளது குறித்து...?

! துயரத்தில் ஆழ்ந்திருப்பவர்களால்தான் பிறர் துன்பத்தை நன்றாக உணர முடியும் என்பதைக் காட்டுகிறது.

● அ. சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21

? 'உலக சினிமாவை கௌரவிக்கும் விருதாக ஆஸ்காரைக் கருத முடியாது' என்று கமல்ஹாசன் சொல்கிறாரே...?



* கையிலே...



* ... வெடிகுண்டு!



* வானமும்...



* ... வாக்குச் சீட்டும்!

நீங்கள் கேட்டவை-தராசு

! அப்பாடி! விட்டதடா ஆசை, விளாம்பழ ஓட்டோட!

● ஜி. மாரியப்பன், சின்னமனூர்

? 'தேன் நிலவு' / 'ஹனி மூன்' எப்படி அழைப்பது நன்றாயிருக்கிறது...?

! குளியலறை ஹீட்டரில் ரசாயனக் கசிவு, ரகசிய கேமரா பதிவு என்றெல்லாம் (சேலம், ஏற்காடு புது மாப்பிள்ளை சாவு) மர்மச் செய்திகள் கிளம்பியுள்ள நிலையில், தேன் நிலவு சனி மூனாக ஆகாதவரையில் எப்படி வேண்டுமானாலும் அழையுங்களேன்...!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? கேலி எது? கூத்து எது? கேலிக் கூத்து எது?

! சுனாமி செய்திகளை வெளியிடும் தொனியில் சன் டீ.வி. செய்தது கேலி; ஜெயா டீ.வி. செய்தது கூத்து. சுனாமி நடக்காத ஒரிஸாவுக்கு உத்தராஞ்சல் முதல்வர் திவாரி, ஒரு கோடி ரூபாய் நிவாரண நிதி வழங்கியது கேலிக் கூத்து!

● வி.எம். செய்யதுபுகாரி, அதிராம் பட்டினம்

? காதலை வாழ வைக்காமல் ஜாதியை வாழவைத்து எடுத்த படத்துக்குக் 'காதல்' என்று பெயர் சூட்டிய இயக்குனர் பாலாஜி சக்திவேல் பற்றி...?

! எதை வாழ வைத்தாரோ இல்லையோ, சிம்பிளாக விஷயத்தைச் சொல்வதில் வெற்றி பெற்று, கோலிவுட்டை வாழ வைத்துவிட்டார்.

● க.மோ.சிவா, காந்திகுப்பம்

? இயற்கைக்கு யார் கொடுத்தது இந்த அதிகாரத்தை...?

! ஆழ்கடலில் அணுகுண்டு வெடித்து நில அதிர்ச்சி உண்டாக்கி, சோதனை செய்த மனிதன்; சமுத்திரத்தில் கச்சா எண்ணெய் கொட்டச் செய்து பல்லாயிரக்கணக்கில் உயிரினங்களை அழித்த மனிதன்; கடலில் அணு அலைகளின் கதிர் வீச்சுமிக்க கழிவுகளை அடக்கம் செய்யும் மனிதன்... மனிதனுக்கு யார் தந்தது இந்த அதிகாரங்களை!

● மு. உலகாண்ட ஈஸ்வரி, கூத்தப் பாக்கம்

? கருணாநிதி தமது கட்சி சார்பாக ஒரு கோடி ரூபாய் நிதியை சோனியாவிடம் கொடுத்தது குறித்து...?

! பிரதமர் நிதி, முதல்வர் நிதி என இரண்டு இருக்கையில், போக வேண்டியவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டுமே என்ற கவலையில் அவரவரும் தங்கள் நம்பிக்கைக்குரியவரிடம்தான்

* விருது விமர்சனம்





* வங்கிக் கணக்கு!

தருவார்கள். இதையெல்லாம் பெரிசுபடுத்த வேண்டாம். முதல்வர் நிதிக்கும் பணம் குவியத்தானே செய்கிறது.

● **ஜி. ராமதாஸ், அய்யம்பேட்டை**

? போலீஸ் காவலில் உள்ள அப்புவுக்கு ராஜோபசாரம் நடத்தப்படுவது குறித்து?

! போலீஸைப் பொறுத்தமட்டில் அப்பு ஸ்டார் (விட்னஸ்); ரவிசுப்ரமணியன் சூப்பர் ஸ்டார். ராஜோபசாரத்துக்குக் கேட்பானேன்!


● **அ.சா. குருசாமி, செவல்குளம்**

? செல்போன் மூலம் ஆபாச விபரீதங்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பதைத் தடுக்க என்ன வழி?



* 'பொருந்தா'க் காதல்!

! எந்த ஒரு விஞ்ஞான முன்னேற்றத்துக்கும் மனித குலம் ஒரு விலை கொடுத்தே ஆக வேண்டும். பாஸிடிவ் இருந்தால் நெகடிவ்வும் இருந்துதானே தீரும்? இந்த இயற்கை நியதியை எந்த ஒரு விஞ்ஞானியாலும் மாற்றி அமைக்க முடியாது. பெற்றோர் முன் மாதிரியாக விளங்கி, குழந்தைகளை நல்வழிப்படுத்தினால் மட்டுமே தீயவை தவிர்க்கப்படும். இந்த ஒரு விஷயத்தில்தான் நமது நம்பிக்கை இருக்கிறது.



* நட்சத்திர அந்தஸ்து!

● **டேவிட் ராஜா, சென்னை**

? நம்பிக்கை நம்பிக்கையற்றுப் போய்விடும் போலிருக்கிறதே...?

! மாற்றி யோசியுங்கள். இத்தனை நடந்த பிறகும் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான பேருக்கு, பல விதங்களில் உதவ உலகெங்கிலுமிருந்து மனிதாபிமானத்துடன் லட்சோப லட்சம் பேர் முன் வருகிறார்கள். புதிய நம்பிக்கை தழைக்கிறது!

● **அ. அப்துல் காதர், தூத்துக்குடி**

? லாலு அமைச்சராக இருப்பது மன்மோகன்சிங் அரசுக்கு பலமா? பலவீனமா?

! கையில் வெடிகுண்டை வைத்திருப்பது போன்ற பலம், அசந்தால் வைத்திருப்பவரையே அது தீர்த்துவிடக் கூடும் என்பதால் பலவீனம்.

● **ப. ராமகிருஷ்ணன், காயக்காடு**

? இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பணக்காரர்கள் நிதியுதவி செய்யலாம். ஏழைகள் என்ன செய்வது...?

! ஆறுதலான வார்த்தைகளும் முடிந்தால் உடல் உழைப்பும்தான், ஆத்மார்த்தமான பெரிய உதவி. உதாரணம் : கோவை துப்புரவுத் தொழிலாளர், சுனாமியில் இறந்தோர் உடல்களை அடக்கம் செய்ய நாகைக்குச் சென்றிருப்பது.

● **க. வேடியப்பன், கும்மிடிப்பூண்டி**


? சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்லப் போகும் அரசியல்வாதிகள் பின்னால் பல கார்கள் அணிவகுத்துச் செல்வது எதைக் காட்டுகிறது?

! அவர்களுடைய பந்தாவை எந்த சுனாமியாலும் தகர்க்க முடியாது என்பதை. ●

ரூ.100 பரிசு பெறுபவர் :
வி.எம். செய்யது புகாரி,
50, நடுத்தெரு,
அதிராம்பட்டினம் - 614 701

* ரூ.50 பரிசு பெறுபவர் :
தி.வி. கிருஷ்ணமூர்த்தி
Plot 3-B, மூன்றாவது மாடி,
ஏழாவது குறுக்குத் தெரு,
சாஸ்திரி நகர்,
சென்னை - 600 020.





இப்படித்தான் வரைஞ்சாங்க!









தொகுப்பு:
எழில்
படங்கள்:
ராஜன்

பரட்டைத் தலைக்குப் பொருத்தமாக - அழுக்கேறிய முழுக்கைச் சட்டை. இரு கைகளையும் புஜம் வரை மடக்கிவிட்டு, பொத்தான்களைப் போடாமல் ரஜினி ஸ்டைலில் காற்று வாங்கிய மார்பில் செந்நிற சிந்தெடிக் பனியன். கிழே கட்டம் போட்ட பச்சை நிறக் கைலி. இப்படியொரு தோற்றத்துடன் ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில் போய் இறங்கியதும், பலரது பார்வைகளும் பரபரப்போடு மேய்ந்தன. அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், குழாமாகத் தேநீர் அருந்திக் கொண்டிருந்த ஓட்டுநர், நடத்துனர்களை நெருங்கி, "திருப்பாச்சிக்கு எந்த பஸ்கல ஏறணும்?" என்று கேட்க, "திருப்பாச்சிக்கு தம்பி என்ன ஜோலியா போறீக?" என்றார் ஒரு ஓட்டுனர். "வேற எதுக்கு, நம்ம ஊரு காட்டுலே ரெண்டு மாக்கானுவள வீசித் தள்ள அருவா வாங்கத்தேன்" என்று உடனடியாக பதில் தர, எல்லோரும் கொல்லென்று கும்பலாகச் சிரித்துவிட்டனர். "திருப்பாச்சி அருவா பிடிக்க கையில தெம்பு



திருப்பாச்சியில் ஒரு திகில் அனுபவம்!

• பால்சாமி ஆசாரி



வேணுமப்பு! நமக்கு எந்த ஊரு?" என்றார் மற்றொரு ஐம்பது. "மேலவளவு" என்றது தான் தாமதம், அடுத்த நொடியில் அத்தனை பேரும் மின்னலாய் மறைந்துவிட, மசால்வடை விற்றுக் கொண்டிருந்த பாட்டியிடம் விசாரித்துவிட்டு, இராமநாதபுரம் பேருந்தில் ஏறியாயிற்று.

மதுரை - இராமநாதபுரம் சாலையில் நாற்பதாவது கிலோமீட்டரில் இருக்கிறது திருப்பாச்சி. நாற்பத்தைந்து நிமிடப் பயணம். ஊரில் போய் இறங்கினால் பேருந்து நிலையம், இரயில் நிலையம் இரண்டும் அருகருகே இருந்தன. பிரதான சாலையிலேயே அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆறேழு கொல்லுப் பட்டறைகள். நெருப்புப் பொறி பறந்து கொண்டிருந்த ஒரு பட்டறையை நெருங்கி, அங்கே ரத்தச் சிவப்பாகப் பழுத்துக் கிடந்த அரிவாளை, சம்மட்டிக்



* திருப்பாச்சி வீதி

குத் தோதாகக் கொடுத்துக் கொண்டிருந்த பெரியவரை நெருங்கவும், சம்மட்டி அடிப்பவர் நிறுத்திவிட்டு பார்க்க, பெரியவரும் நிமிர்ந்துப் பார்த்தார். துருத்திக்கு இழுத்து இழுத்து காற்றடித்துக் கொண்டிருந்த சிறுவனும் நிறுத்திவிட, பட்டறை நெருப்பில் பொறி அடங்கியது. அங்கே அடங்கிய நெருப்புப் பொறி நம் கண்களில் இடம் பெயர்ந்து விட்ட மாதிரி கண்களை அகல விரித்து, கொஞ்சம் மிரட்டும் தொனியில் 'ஒரு நாலடி' வீச்சரிவா வேணும்'' என்றோம். அவ்வளவுதான்... ''ஓய்ய்... பங்காளி... செல்வரக, கணேசா ஓடியாங்கடா... ஒரு ரவுடிப்பய வம்பு பண்றான்'' என்று பெரியவர் குரலெடுத்துக் கத்த... அக்கம் பக்கத்துப் பட்டறைக்காரர்கள் அங்கே திரண்டு சூழ்ந்து கொண்டனர். விபரீத மாகி, தர்ம அடியை தள்ளுபடி விலையில் வாங்கி விடக்கூடாதே என்று எச்சரிக்கையாகி, ''பயப்படாதீங்க.... நான் பத்திரிகை நிருபர்'' என்று அடையாள அட்டையைக் காட்டிய பிறகுதான் அமைதியானார்கள். அப்படியும் ''எந்த நிருபர் கைலியைக் கட்டிக்கிட்டு காலிப் பய மாதிரி வருவான்?'' என்று சில இள வட்டங்கள் திமிறினர். ''அட சும்மா இருங்கப்பா'' என்று அவர்களை அதட்டினார் பால்சாமி ஆசாரி.

''தம்பி, நீங்க நாலடி அருவா வேணும்னு கேட்டதும் பதறிப் போயிட்டோம். ஒரு காலத்துலே மூணடி, நாலடி வீச்சரிவா செஞ்சவங்கதான் நாங்க. ஆனால் தெக்கத்தி ஊருகள்லே சாதிக் கலவரம் வந்த பொறவு, வீச்சரிவா செய்யக் கூடாதுன்னு போலீஸ் கண்டிப்பா சொல்லிப்புடுச்சி. இப்போ ஓரடி, ஒன்றரையடிலே மரம் வெட்டற அருவா, கரும்பு வெட்டற அருவா, கதிர் அருவா, தேங்கா பத்தை கிழிக்க அருவா கத்திக, மட்டன் கடைக்கு மொட்டக் கத்தி, கழுக் கொட்டு, மம்புட்டி, கடப்பாரைன்னு செய்யறோம். ஆனா சோறு போடுறது என்னவோ அருவா வேலைங்கதான். மராமத்து வேலைக்குத்தான் அருவானே தவிர, மனுசன வெட்ட இல்லீங்க'' என்றார். ''அதுசரி! அரிவாளுக்கும், திருப்பாச்



* 'திருப்பாச்சி'யில் விஜய்

சிக்கும் அப்படி என்னங்க பந்தம்?'' என்று கேட்டபடி கைலியை மடக்கிக் கட்டிக் கொண்டு மண் தரையில் உட்கார்ந்தாயிற்று.

''அது ஐந்நூறு வருஷ பரம்பரை பந்தம்'' என்று ஆரம்பித்தார். ''சிவகங்கை ராஜாங்க படைக்கலன்களுக்கு ஈட்டி, வேல், அருவா, வாள், கேடயம், ஆர்மார்னு அத்தனை உலோக ஆயுதமும் செஞ்சு கொடுத்த கொல்லு ஆசாரிங்க, பரம்

பரையா வாழ்ந்து வந்தது இந்த ஊருலதான். ராஜா காலத்துக்குப் பெறவு எல்லாரும் விவசாயத்துக்கு மாறிட்டாங்க. ஆனா சில குடும்பங்க மட்டும் பட்டறைத் தொழில விட முடியாம, இன்னும் நெருப்புலே கெடந்து வேகுறோம். வன்முறைக்குன்னு நினைச்சுக்கிட்டு நாங்க அருவா செய்யறதில்லே'' என்றவர் ''நம்ம ஊருலே அருவா தயாரிக்கிறோம். அருவாளுக்குப் பேரு வாங்குன ஊருங்குற திமிரு, யாருக்கும் வந்துடக் கூடாதேங்குறதுக்காக யாருமே இங்கே முறுக்கு மீசை வெச்சுக்கிறதில்லே. எங்க ஊரு அரிவாளோட அழகுக்கும், வேலைப்பாட்டுக்கும் பேரு கிடைச்சுதே தவிர, மனுஷனை வெட்டினதுக்காக இல்லே'' என்று மறுத்தவர், திருப்பாச்சி அரிவாளின் வேலைப்பாடு மற்றும் தனித்துவம் பற்றியும் சொன்னார்.



* பேரரசு

''நம்ம ஊரைப் பொறுத்தவரையிலே உருக்கைக் காய்ச்சித்தான் அருவா அடிக்கிறோம். இந்த உருக்கு, அருவாளோட மூக்கு நுனி வாட்டம், துவைச்சல்பதம் இதெல்லாம் திருப்பாச்சியிலே மட்டும்தான் கிடைக்கும். இந்த வேலைக்குக் கூலி ஆள் கிடையாது. பரம்பரையா செய்யற கைவேலை. நம்ம அருவா அழகைப் பார்த்து மெட்ராஸ் வரைக்கும் வாங்கிட்டுப் போறாங்க'' என்றவர், ''சினிமாக்காரங்க திருப்பாச்சினா, ஆள வெட்டுற அருவா செய்யுற ஊருங்க மாதிரி காட்டுறாங்க'' என்று வருத்தப்பட்டார். ஏற்கெனவே திருப்பாச்சி அருவாளைப் புகழ்ந்து வசனங்கள், பாடல்கள் எல்லாம் வந்து விட்ட நிலையில், இப்போது 'திருப்பாச்சி' என்று ஊரின் தலைப்பிலேயே படம் தயாராகி விட்டது. ஆனால், படத்தின் இயக்குனர் பேரரசு, முழுப் படத்தையும் காரைக்குடிக்கு அருகில் உள்ள இளங்குடியில் எடுத்து முடித்திருக்கிறார்.

* மணி ஆசாரி




''திருப்பாச்சியில் படத்தை எடுத்து விடலாம் என்றுதான் லொகேஷனுக்குப் போய்ப் பார்த்தோம். ஆனால் ஊர் மெயின் ரோட்டில் இருப்பதால், போக்குவரத்துப் பிரச்னை வந்துவிடக் கூடாதே என்று காரைக்குடிப் பக்கம் போய்விட்டோம். ஆனால் திருப்பாச்சியில் பரம்பரையாக அரிவாள் செய்யும் ஆசாரிகளைக் கொண்டுதான், படத்துக்காகப் பட்டறை செட் போட்டோம். ஆளுயுர அரிவாள் செய்தோம். அது சாமி அரிவாள். திருப்பாச்சி கிராமத்தில் அரிவாள் பட்டறை வைத்திருக்கும் இளைஞராக நடிக்கிறார் விஜய். சிவாஜிக்குப் 'பாசமலர்', ரஜினிக்கு 'முள்ளும் மலரும்' போல, விஜய்க்கு 'திருப்பாச்சி.' அப்படியொரு அண்ணன், தங்கை கதை. பின்னணியில் திருப்பாச்சி கிராமம் வருகிறது'' என்ற பேரரசுவுக்குச் சொந்த ஊர், திருப்பாச்சிக்கு அருகில் உள்ள நாட்டர்சன் கோட்டை.

திருப்பாச்சியிலிருந்து உடைகளை மாற்றிக் கொண்டு விடைபெறும் போது ''தம்பி, இது எங்க ஞாபகமா இருக்கட்டும்'' என்று வெள்ளைத் துணியில் சுற்றிய இரண்டடி அரிவாளைக் கொடுத்தார் மணி ஆசாரி. ''தம்பி, வந்ததுலேர்ந்து ஊரு பேரை திருப்பாச்சி, திருப்பாச்சின்னு சொல்லிக்கிட்டு இருக்கீக. இது திருப்பாச்சி இல்லே, திருப்பாச்சேத்தி. ஊரு பேரு சுருங்கிப் போன மாதிரி, இங்கே அரிவா தொழிலும் சுருங்கிப் போச்சு'' என்றார்.

வீடு வந்து சேரும்வரை பயம், அரிவாள் இரண்டையும் மடியில் கட்டிக் கொண்டு வந்தாயிற்று! திருப்பாச்சி அரிவாளில் வெங்காயம் நறுக்கும் மனைவியிடம் தவறுதலாகக்கூட இப்போது கோபப்படுவதில்லை.

- திருச்சக்கரம்

எங்கள் குஷி!



கச்சேரி செய்துட்டு வந்தவுடன் ரசிகர்கள் என்னை நேரடியாகச் சந்தித்துப் பாராட்டினால் நான் ரொம்ப குஷியாகி விடுவேன்.

* நாட்டுபுறக் கலைஞர் அனிதா குப்புசாமி



கிறிஸ்துமஸ் டைம்ல சாண்டாகிளாஸ் தாத்தாவை பார்த்தா அப்படியே குழந்தையா மாறி அதைத் தொட்டுப் பார்க்கணும்னு குஷியாயிடுவேன். வீட்ல எனக்கு வேலை எதுவும் இல்லாமலிருந்தா அதைவிட வேறென்ன குஷி?

* டி.வி காம்பியர் வைஷ்ணவி



ஹோட்டலுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வரும் முன்னர் சர்வர்களுக்கு டிப்ஸ் கொடுப்பதைவிட, டேபிளைச் சுத்தப்படுத்தும் க்ளீனர்களுக்கு டிப்ஸ் கொடுப்பதுதான் எனக்குக் குஷியான விஷயம்.

* தொழிலதிபர் வசந்தகுமார்

தொகுப்பு:
பப்பி, வளவன்



ஒரு சின்ன விஷயத்தை ஊதி பெரிசாக்கி, அதை வேடிக்கை பார்க்கும்போது செம குஷியா இருக்கும்.

* குழந்தை நட்சத்திரம் கல்யாணி


கண்ணியத்தின் முகவரி!


"அஞ்சு வயசுல கோகுலம் பத்திரிகை வாங்கிக் கொடுத்த அப்பா, பத்து வயசுல கல்கியை அறிமுகப்படுத்தினார். ஆனால், நான் வாசிக்க ஆரம்பிச்சது இருபது வயசுல. 'அடடா! பத்து வருஷம் தவற விட்டுட்டோமே'ன்னு ஃபீல் பண்ணியிருக்கேன்.

சினிமா செய்தியில் கூட நேர்மைக்கு இம்பார்ட்டண்ட் தர்றது ரொம்ப சூப்பர். கண்ணியத்தோட முகவரின்னா அது கல்கி தான்!"

படம் : ஸ்ரீஹரி




நுங்கம்பாக்கம், காகானி டவர்ஸில்
இப்பொழுது பாபாலால் வைரங்கள்
மின்னுகின்றன
Bapalal
DIAMONDS
இப்பொழுது
காகானி டவர்ஸ்
நுங்கம்பாக்கம்
எண்.34, காதர் நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.
போன் : 2833 1664 / 2833 1665 இ-மெயில் : pranav@bapalal.com


சுப முகூர்த்தக் காலங்களை சுபிட்சமாக
சாரதா'ஸ் பட்டுச் சேலைகளுடன் கொண்டாடுங்கள்
சாரதா'ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு. திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங்,827,மவுண்ட்ரோடு.சென்னை-2,போன்:2852117